பக்கங்கள்: இருபத்துநான்கு

# உதயன்

விலை ரூபா 15.00

www.uthayan.com

சுடர் 25 வள்ளுவர் ஆண்டு 2041 புரட்டாதி 23 சனிக்கிழமை (09.10.2010) UTHAYAN-A Lively National Tamil Daily கதிர்: 317

### இலங்கை மீது சுமத்தப்படும்

# போர்க் குற்றச்சாட்டுகள் குறித்து சர்வதேச விசாரணை அவசியம்

## வலியுறுத்துகிறார் ஐ.நா. முன்னாள் துணைச் செயலாளர்



டப்ளின்,ஒக்ரோபர்9

இலங்கையில் நடந்த போரின் போது இடம்பெற்ற மனித உரிமை மீறல்கள், சுயாதீனமான அனைத்துலக விசாரணைக்கு உரியனவே என ஆணித்தரமாகத் தெரிவித்திருக்கிறார் ஐக்கிய நாடுகள் சபையின் முன்னாள் துணைச் செயலாளர் நாயகம் டெனிஸ் ஹாலிடே.

“இலங்கையில் மனித குலத்திற்கு எதிராக நிகழ்ந்த போர்க் குற்றங்கள், மனித உரிமை மீறல்களுக்காக அந்த நாடு இப்போது ஆட்டம் கண்டிருக்க வேண்டும். ஆயினும் அவை மறைக்கடிக்கப்பட்டுவிட்டன. அனைத்துமே புறமொதுக்கப்பட்டுவிட்டன; தள்ளிவைக்கப்பட்டுவிட்டன” என்றும் டெனிஸ் ஹாலிடே சுட்டிக் காட்டினார். (24ஆம் பக்கம் பார்க்க)

## கனடா செல்லும் ஈழ அகதிகள் கப்பல் கொலம்பியாக் கடலில் தென்பட்டதாம்

கொழும்பு,ஒக்.09

ஈழத் தமிழர்களை ஏற்றிக் கொண்டு கனடா நோக்கிச் செல்லும் கப்பல் ஒன்று கொலம்பியாக் கடற்பரப்பில் நேற்று தென்பட்டது எனத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

ஏற்கனவே ஈழத் தமிழர்களை ஏற்றிக்கொண்டு கப்பல் ஒன்று கனடா நோக்கிச் செல்கின்றதென நேற்றுமுன்தினம் கனேடிய ஊடகங்கள் செய்தி வெளியிட்டிருந்தன. (24 ஆம் பக்கம் பார்க்க)

## இலங்கையில் இடம்பெற்ற போர்க்குற்றங்கள்; இரண்டு நாள்கள் டப்ளினில் தொடர் நிகழ்வு


டப்ளின்,ஒக்.9

அயர்லாந்தின் தலைநகர் டப்ளினில் இலங்கையில் இடம்பெற்றதெனக் கூறப்படும் போர்க் குற்றங்கள் தொடர்பான இரண்டு தொடர் நிகழ்வுகள் கடந்த புதன் கிழமை மற்றும் வியாழக்கிழமை சிறப்பாக நடைபெற்றது.

இதில் பிரதான பேச்சாளர்களாக டெனிஸ் ஹாலிடே மற்றும் லோலர் ஆகியோர் பங்கேற்றனர்.

முதல் நாள்நிகழ்வை, இலங்கை சமாதானத்திற்கான அயர்லாந்தின் அமைப்பின் முக்கிய உறுப்பினரான டாக்டர் ஜூட் லால் தலைமை வகித்து நடத்தினார்.

இரண்டாம் நாள் நிகழ்வை, இலங்கை சமாதானத்திற்கான அயர்லாந்தின் அமைப்பின் முக்கிய (24 ஆம் பக்கம் பார்க்க)



20 வருடங்களின் பின்னர் முதன் முதலாக நேற்று வெள்ளிக்கிழமை ஜும்ஆ தொழுகை யாழ். மானிப்பாய் வீதியில் உள்ள பெரிய முஹைதீன் பள்ளிவாசலில் இடம்பெற்றபோது எடுக்கப்பட்ட படம். (படம் : உமா)

## பிரதி மேயராக முஸ்லிம் உறுப்பினர் அடுத்த மாதத்தில் பதவி ஏற்பார்

### நேற்று யாழ். வந்த அமைச்சர் ரிஷாத் தகவல்



யாழ்ப்பாணம், ஒக். 9

யாழ். மாநகர சபையின் பிரதி மேயர் பதவி தொடர்பாக ஏற்கனவே எட்டப்பட்ட உடன்படிக்கையின் பிரகாரம் அடுத்த மாதம் 10ஆம் திகதி முஸ்லிம் உறுப்பினர் அந்தப் பதவியைப் பொறுப்பேற்க இருக்கின்றார்.

இந்த உடன்படிக்கையை அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவுக்கு நினைவுபடுத்தியுள்ளேன்.

இப்படிக் கூறினார் வர்த்தக மற்றும் கைத்தொழில் அமைச்சர் ரிஷாத் பதியுதீன்.

நேற்று யாழ்ப்பாணத்துக்கு விஜயம் மேற்கொண்ட அமைச்சர் மாலை யாழ். மானிப்பாய் வீதியிலுள்ள பெரிய முஹய்தீன் பள்ளிவாசலில் இடம்பெற்ற வழிபாட்டு நிகழ்வில் (24 ஆம் பக்கம் பார்க்க)

## யாழ். முஸ்லிம் மக்களின் மீள்குடியமர்வுக்கு உதவுவேன்

### யாழ். வந்த ரிஷாத் உறுதி மொழி

யாழ்ப்பாணம்,ஒக். 9

யாழ்ப்பாணத்தில் முஸ்லிம் மக்களை மீள்குடியமர்த்துவதற்கு எனது அமைச்சின் ஊடாக தேவையான உதவிகளை வழங்குவேன்.

யாழ்ப்பாணத்துக்கு நேற்று விஜயம் மேற்கொண்ட வர்த்தக மற்றும் கைத்தொழில்துறை அமைச்சர் ரிஷாத் பதியுதீன் மேற்கண்டவாறு கூறினார்.

கோப்பாய் ஆசிரியர் பயிற்சிக் கலாசாலையில் நேற்று நடைபெற்ற (24 ஆம் பக்கம் பார்க்க)

உள்ளே

**துரையப்பா விளையாட்டரங்கை தரமுயர்த்த இந்தியா உதவி**

யாழ்.துரையப்பா விளையாட்டரங்கை சர்வதேசதரத்துக்கு உயர்த்துவதற்கு இந்தியா உதவி வழங்கும். பக்கம் 3

**பொன்சேகாவின் விடுதலையில் அனோமாவுக்கு அக்கறை இல்லை**

சரத் பொன்சேகா வெளியே வருவதை அவரது மனைவி அனோமா பொன்சேகா விரும்பவில்லை போல் தெரிகின்றது. பக்கம் 11

**ஆஸிக்கு தங்கத்தைப் பெற்றுக் கொடுத்த ஈழத்தமிழர்**

ஆஸ்திரேலியாவில் குடியேறிய ஈழத்தமிழர் ஒருவர், கொமன்வெல்த் விளையாட்டுப் போட்டிகளில் பங்கேற்று தங்கப்பதக்கத்தைப் பெற்றுக் கொடுத்துள்ளார். பக்கம் 21

## முன்னறிவித்தல் ஏதுமின்றி திடீரென இங்கு வந்துள்ள சிங்கள மக்களால் நிர்வாகத்துக்கு சங்கடமான நிலை

### யாழ்.அரச அதிபர் இமெல்டா பி.பி.ஸிக்குப் பேட்டி

லண்டன்,ஒக்.9

முன்னறிவித்தல் ஏதுமின்றி திடீரென வந்து தாங்கள் யாழ்ப்பாணத்திலேயே இருக்கவேண்டும். திரும்பப் போகப் போவதில்லை எனத் தெரிவித்திருக்கும் சிங்களக் குடும்பங்களின் நடவடிக்கை யாழ்ப்பாணத்தின் சிவில் நிர்வாகத்துக்கு ஒரு சங்கடமான நிலைமையை ஏற்படுத்தியுள்ளது.

யாழ்.அரச அதிபர் திருமதி இமெல்டா சுகுமார் பி.பி.ஸிக்கு மேற்கண்டவாறு தெரிவித்தார்.

யாழ்ப்பாணத்துக்கு மீள்குடியேறும் நோக்குடன் வந்துள்ளதாகக் கூறும் யாழ்.ரயில் நிலையத்தில் தங்கியுள்ள குடும்பங்கள் தொடர்பாக பி.பி.ஸிக்கு யாழ். அரச அதிபர் பேட்டியளித்துள்ளார்.

இது தொடர்பாக பி.பி.ஸி. செய்திச் சேவையில் தெரிவிக்கப்பட்டதாவது:-

(24 ஆம் பக்கம் பார்க்க)

## தெற்கு மக்களின் தேவைகளை அறிய யாழ்.விரைந்துள்ள சமுர்த்தி அதிகாரிகள்

யாழ்ப்பாணம்,ஒக். 9

யாழ்.மாவட்டத்தில் மீளக்குடியமர வந்துள்ளதாகக் கூறும் சிங்களக் குடும்பங்களின் தேவைகள் குறித்து அறிந்துகொள்வதற்காக சமுர்த்தி அதிகார சபையின் தலைமையக அதிகாரிகள் குழு நேற்று இங்கு வருகை தந்தது.

பொருளாதார அபிவிருத்தி அமைச்சின் கீழ் இயங்கும் சமுர்த்தி அதிகார சபையின் பணிப்பாளரின் அறிவுறுத்தலுக்கு அமைய இந்த அதிகாரிகள் குழு நேற்று மாலை யாழ்ப்பாணம் வந்தது.

(24 ஆம் பக்கம் பார்க்க)

உள்ளே

**கல்விச் சுடர்**

ஜி.சீ.ஈ சாதாரணதரப் பரீட்சைக்கான வரலாறு, தமிழ், வணிகக் கல்வியும் கணக்கீடும் ஆகிய பாடங்களுக்கான விடைகள்.

யாழ் மக்களின் நன்மதிப்பை பெற்ற

நவீன் செரமிக்



Naveen Ceramic PVT LTD

212, Palaly Road, Jaffna.

Tel.: 212220033 / 212220044

நவாலி மகாவித்தியாலயம்

நூற்றாண்டு விழா 1910 - 2010

நிகழ்வு: 09.10.2010 சனிக்கிழமை, 10.10.2010 ஞாயிற்றுக்கிழமை

விழா சிறப்புற வாழ்த்துவோர்

சிறிதேவி கருமாரி நகைமாடம்

இல.83/1, கஸ்தூரியார் வீதி,

செம்மாதெரு. யாழ்ப்பாணம்.

தொ.பே: 021 5672567,

0773604712.



யாழ் - கொழும்புக்கு இடையில் சேவையில் ஈடுபடும்

# தனியார் பஸ் உரிமையாளருக்கு வழி அனுமதிப்பத்திரம் உடனடியாக வழங்குவதற்கு ஏற்பாடு செய்யப்படும்

## அமைச்சர் பஸில் ராஜபக்ஷ சரவணபவன் எம்.பியிடம் நேற்று உறுதிமொழி

கொழும்பு,ஒக்.9

ஏ-9 பாதையில் சேவையில் ஈடுபடும் தனியார் பஸ் உரிமையாளர்கள் வழி அனுமதிப்பத்திரத்தைப் பெறுவதற்கு ஏற்பாடு செய்யப்படும்.

பொருளாதார அபிவிருத்தி அமைச்சர் பஸில் ராஜபக்ஷ, யாழ்.மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் ஈ.சரவணபவனுக்கு மேற்கண்டவாறு உறுதி அளித்தார்.

நாடாளுமன்றக் கட்டடத்தில் நேற்று பஸில் ராஜபக்ஷவைச் சந்தித்த சரவணபவன், தனியார் பஸ் உரிமையாளர்கள் வழி அனுமதிப் பத்திரத்தைப் பெறுவதில் உள்ள சிக்கல்கள் குறித்து விவரமாக எடுத்துக் கூறினார்.

அவர்களுக்கான வழி அனுமதிப்பத்திரத்தை வழங்க உடன் தகுந்த ஏற்பாடுகளைச் செய்யுமாறு அமைச்சரிடம் சரவணபவன் கேட்டுக்கொண்டார்.

தனியார் பஸ் உரிமையாளர்களுக்கு வரி அனுமதிப்பத்திரம் வழங்க ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது என்று பஸில் அவரிடம் தெரிவித்துள்ளார்.

தனியார் பஸ் போக்குவரத்து உரிமையாளர் சங்கத்தின் சார்பில் வெளியிடப்பட்ட மகஜரை நாடாளுமன்ற உறுப்பினர் ஈ.சரவணபவன் அமைச்சர் பசில் ராஜபக்ஷவிடம் கையளித்தார். அந்த மகஜரின் விவரம் வருமாறு:-

கடந்த 2009 ஆம் ஆண்டில் ஏ.9 பாதை போக்குவரத்துக்குத் திறந்துவிடப்பட்டதன் பின்னர் அந்த மார்க்கத்தின் ஊடாக எந்தவொரு வாகனத்துக்கும் பயணம் செய்வதற்கு வாய்ப்பு ஏற்பட்டது. அது மக்களுக்குப் போன்றே அரசுக்கும் மிகப் பெரும் சேவையொன்றாகவும் அமைந்தது. அதன் காரணமாக ஏ-9 பாதையின் ஊடான போக்குவரத்துச் சேவைகளுக்காக அதிக எண்ணிக்கையானோர் பெரும் தொகை பணத்தை முதலீடு செய்து வாகனங்களைச் சேவையில் ஈடுபடுத்த ஆரம்பித்தனர்.

அதன் பின்னர் பயணிகள் போக்குவரத்து சேவை தொடர்பாக வழி அனுமதிப்பத்திரங்களைப் பெறுவதற்கான கேள்வி கோரல்கள் (ரெண்டர்கள்) கோரப்பட்டன.

அத்தகைய ரெண்டர்களின் மூலம் 16 பஸ்களுக்கு மட்டுமே வழி அனுமதிப்பத்திரம் வழங்கப்பட்டது. அந்த அனுமதிகள் அனைத்துமே தென்பகுதியைச் சேர்ந்தவர்களுக்கே வழங்கப்பட்டன என்பதை முக்கியமாக இங்கு சுட்டிக்காட்ட வேண்டியுள்ளது. வடக்கைச் சேர்ந்த எவருக்கும் அந்த வாய்ப்பு கிட்டியிருக்கவில்லை. எனினும் மேற்படி போக்குவரத்துச் சேவை தொடர்பாக பெரும் பணத் தொகைகளைச் செலவழித்து அர்ப்பணிப்புடன் தம்மை ஈடுபடுத்திக்கொண்டவர்கள் வடக்கின் வாகன உரிமையாளர்களே.

எவ்வாறோ - யாழ்.- கொழும்பு, கொழும்பு - யாழ்ப்பாணம் பயணிகள் சேவையில் ஈடுபடுவதற்கு குறைந்தபட்சமாக 100பஸ்கள் தேவைப்படுகின்றன என்பதோடு வழிஅனுமதி பெற்றுள்ள குறிப்பிட்ட 16 பஸ்களைத் தவிர்ந்த மேலதிகமாக பயணிகள் போக்குவரத்துச் சேவையில் ஈடுபடும் வாகனங்களுக்கு அத்தகைய அனைத்துச் சந்தர்ப்பங்களிலும் அபராதம் செலுத்த வேண்டி நேரிடுகிறது. அவர்களுக்கு எதிராக பொலிஸ் சட்டம் அமுல்படுத்தப்படுகிறது.

இதுவரை காலமும் அபராதங்களை விதிக்காதிருந்த பொலிஸார் அவ்விதம் செயற்படுதற்கு குறிப்பிட்ட 16 பஸ்களின் உரிமையாளர்களின் உந்துதலே காரணமாகியுள்ளது.

இந்த அவல நிலைக்கு முகம் கொடுத்துள்ளவர்களின் பிரச்சினைகள் சம்பந்தமாக போக்குவரத்து அமைச்சர் குமாரவெல்கம மற்றும் தேசிய போக்குவரத்து ஆணைக்குழுவின் தலைவருடனும் பேச்சு வார்த்தைகளை மேற்கொண்டு 82 வாகனங்கள் தொடர்பாக வழி அனுமதி பெறுவது தொடர்பான அனைத்து விவரங்களையும் வழங்கியுள்ளோம்.

மேற்படி அனுமதி சம்பந்தமாக அமைச்சரவையின் அனுமதி கிட்டும் வரையிலும் யாழ். - கொழும்பு,கொழும்பு - யாழ். போக்குவரத்தில் ஈடுபட்டுள்ள ஏனைய தனியார் பஸ்களுக்கு பொலிஸார் அபராதச் சிட்டைகளை வழங்காதிருப்பதற்கும் தற்காலிக வழி அனுமதிப் பத்திரங்களை வழங்குவதற்கும் ஆவன செய்யுமாறு பணிவன்புடன் வேண்டுகிறோம்.

மேலும் வெகுவிரைவில் தீபாவளியும் நத்தார் கொண்டாட்டமும் ஆரம்பமாகவுள்ளதால் தயைகூர்ந்து விரைந்து இப்பிரச்சினைக்குத் தீர்வொன்றைப் பெற்றுத் தருமாறு தங்களிடம் பணிவன்புடன் வேண்டுகிறோம் - என்றுள்ளது. (ஒ-ஐ)

## இந்து சமய திணைக்கள நவராத்திரி விழா

யாழ்ப்பாணம்,ஒக்.9

இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களத்தின் நவராத்திரி விழா எதிர்வரும் 12 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை பிற்பகல் 3 மணிக்கு காரைநகர் ஸ்ரீ மருதமலை முருகன் ஆலயத்தில் நடைபெறவுள்ளது.

இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்கள அபிவிருத்தி உத்தியோகத்தர் எஸ்.உதயபாலன் தலைமையில் நடைபெறவுள்ள இவ்விழாவில் பிரதம விருந்தினராக த.சோமாஸ்கந்தக் குருக்கள் கலந்து கொள்வார்.

இந்நிகழ்வில் 'நவராத்திரி விழாவும் வாழ்வியலும்' எனும் தலைப்பில் பொ.சந்திரவேல் சிறப்புச் சொற்பொழிவாற்றுவார் (ஒ-16)

## நாடாளுமன்றில் நவராத்திரி பூஜை



நாடாளுமன்றத்தில் நேற்று நவராத்திரி பூஜை மிகவும் கோலாகலமாகக் கொண்டாடப்பட்டது.

சபாநாயகர் சமல் ராஜபக்ஷ தலைமையில் நாடாளுமன்ற முன்வாயில் மண்டபத்தில் நடைபெற்ற நவராத்திரி பூஜையில் பிரதி சபாநாயகர், குழுக்களின் பிரதித் தலைவர் முருகேசு சந்திரகுமார், செயலாளர் நாயகம் உட்பட ஆளும் கட்சி, எதிர்க்கட்சி உறுப்பினர்கள் பலரும் கலந்துகொண்டனர்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு உறுப்பினர்களான ஈ.சரவணபவன், செல்வம் அடைக்கலநாதன், வினோநோதராதலிங்கம், எஸ்.யோகேஸ்வரன், எஸ்.செல்வராசா ஆகியோர் கலந்து கொண்டனர்.

வழமைபோல் கலாசார நிகழ்வுகளும் விசேட மேளவாத்திய இசையுடன் பாரம்பரிய பரத நாட்டியமும், பூஜையும் சிறப்பாக இடம்பெற்றன. பூஜையின் இறுதியில் அனைவருக்கும் பிரசாதம் வழங்கப்பட்டது. (ஒ-சி)

## 3 மாத உலருணவு நிவாரண விநியோகம் 15 இல் ஆரம்பம்

யாழ்ப்பாணம்,ஒக்.9

உள்ளூரில் 11.08.2006ஆம் திகதிக்கு முன்னர் இடம்பெயர்ந்த குடும்பங்களுக்கான ஜூலை, ஓகஸ்ட், செப்ரெம்பர் ஆகிய மாதங்களுக்கான நிவாரணம் வழங்கப்படவிருக்கின்றது.

இந்த விநியோகத்தை எதிர்வரும் 15ஆம் திகதி ஆரம்பிக்குமாறு அரச அதிபர் திருமதி இமெல்டா சுகுமார் ப.நோ.கூ. சங்கங்களை அறிவுறுத்தியுள்ளார்.

இந்த விநியோகத்துக்குரிய பொருள்களுக்கான வழங்கற் கட்டளைகளை எதிர்வரும் 12ஆம் திகதி மாவட்ட புனர்வாழ்வு புனரமைப்புச் செயலகத்தில் பெற்று பொருள்களை நாவற்குழி உணவுக் களஞ்சியத்தில் எடுக்குமாறு அரச அதிபர் ப.நோ.கூ. சங்கங்களுக்கு அறிவித்துள்ளார்.(ஒ-ஐ)

## வீதியோரங்களில் கட்டடப் பொருள்களை குவித்தால் அவை எடுத்துச் செல்லப்படும்

### யாழ்.மாநகர சபை மேயர் அறிவுறுத்தல்

மாநகர சபைக்குட்பட்ட பகுதிகளில் போக்குவரத்துக்கு இடையூறாக வீதியோரங்களில் பறிக்கப்பட்டிருக்கும் கட்டடப் பொருள்கள் மாநகரசபையால் அகற்றிச் எடுத்துச் செல்லப்படும்.

இவ்வாறு யாழ்.நகர மேயர் திருமதி யோ.பற்குணராஜா அறிவித்துள்ளார்.

யாழ்.மாநகரசபை எல்லைக்குட்பட்ட பிரதேசங்களில் புதிதாக கட்டடங்கள் நிர்மாணிப்போர் கண்டகல், மணல், கிறேசர், சல்லி போன்ற கட்டடப் பொருள்களையும், கட்டட இடிபாடுகளையும் வீதியோரங்களில் குவித்து வைப்பதன் மூலம் போக்குவரத்துக்கு இடையூறு ஏற்படுத்துகின்றனர். இதனால் வீதி விபத்துக்களும் ஏற்படுகின்றன.

இதனை அனைவரும் உடனடியாக நிறுத்திக் கொள்ளவேண்டும். இதனை எவரும் உதாசீனம் செய்தால் அந்தப் பொருள்கள் எவ்வித முன்னறிவித்தலும் இன்றி மாநகர சபையால் அப் புறப்படுத்தப்படுவதுடன் அதற்குரிய தண்டப் பணமும் அறிவிடப்படும் என்று அறிவுறுத்தியுள்ளார் மேயர். (ஒ-16)

## ஓய்வூதிய அதிகரிப்புக் கோரி கோட்டையில் ஆர்ப்பாட்டம்

கொழும்பு,ஒக்.9

ஓய்வூதியத் தொகையை அதிகரிக்குமாறு கோரி கொழும்பு - கோட்டை ரயில் நிலையத்துக்கு முன்னால் நேற்று ஓய்வுபெற்ற அரச ஊழியர்கள் பெரும் ஆர்ப்பாட்டமொன்றை நடத்தினர்.

இந்த ஆர்ப்பாட்டம் தேசிய ஓய்வூதியத் தினத்தையொட்டி ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. இதில் இரண்டாயிரத்துக்கு மேற்பட்ட அரச ஓய்வூதியர்கள் கொட்டும் மழையையும் பாராது பங்கு பற்றினர்.

இதன் காரணமாக கொழும்பு - கோட்டை ரயில் நிலையத்துக்கு முன்னால் பல மணிநேரமாக வாகன நெரிசல் ஏற்பட்டிருந்தது எனப் பொலிஸார் தெரிவித்தனர்.

அரச ஊழியர்களுக்கான ஓய்வூதியத் தொகையை அதிகரிக்குமாறும், அடுத்த வரவு-செலவுத் திட்டத்தில் அதனை அமுலுக்குக் கொண்டுவருமாறும் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டவர்கள் கோஷம் எழுப்பியவாறு கொழும்பு ஹைட்பார்க்கில் இருந்து கோட்டை ரயில் நிலையத்தை வந்தடைந்தனர். (சி)

வன்னி ஆசிரியர்களின் இடமாற்ற விவகாரம்

## தயாரித்த பட்டியலை வெளியிடுவதில் தாமதம் ஏன்? உடனடியாக நடைமுறைப்படுத்துமாறு கோரிக்கை

### இலங்கை ஆசிரியர் சங்கம் ஆளுநருக்குக் கடிதம்

யாழ்ப்பாணம்,ஒக்.9

மீள் பரிசீலனைக்கு உள்ளாக்கிய ஆசிரியர் மாற்றப் பட்டியலை உடனடியாக வெளியிட்டு வன்னிப் பெருநிலப்பரப்பில் இருந்து விடுவிக்கப்பட்ட ஆசிரியர்களுக்கு இடமாற்றம் வழங்க வேண்டும். இந்த இடமாற்ற வேலைத்திட்டத்தில் காலதாமதம் ஏற்படுத்தாமல் உடனடியாக நடைமுறைப்படுத்த வேண்டும்.

இவ்வாறு இலங்கை ஆசிரியர் சங்கம்,வடக்கு மாகாண ஆளுநர் மேஜர் ஜெனரல் சந்திரசிறியிடமும் வடக்கு மாகாண கல்வி அமைச்சின் செயலாளரிடமும் கோரியுள்ளது.

இது தொடர்பாக இலங்கை ஆசிரியர் சங்கத்தின் தலைவர் ஜோசப் ஸ்ராலின் ஆளுநருடன் தொலைபேசியில் தொடர்பு கொண்டு உரையாடியுள்ளார். அத்துடன் விவரமான கடிதத்தை ஆளுநருக்கும் வடக்குமாகாண கல்வி அமைச்சின் செயலாளருக்கும் அனுப்பி வைத்துள்ளார்.

வடக்கு மாகாண ஆசிரியர் இடமாற்றம் தொடர்பாக சங்கம் அனுப்பிவைத்துள்ள கடிதத்தில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

வன்னிப் பெருநிலப்பரப்பில் நீண்டகாலம் கடமையாற்றிய ஆசிரியர்களுக்கு அவர்கள் விரும்பிய மாவட்டங்களுக்கு விடுவிப்பு வழங்க வேண்டியது அவசியமாகும். இந்த விடையத்தில் மாற்றுக் கருத்துக்கு இடமே இல்லை.

வன்னிப் பெருநிலப்பரப்பிலிருந்து விடுவிக்கப்படும் ஆசிரியர்களுக்கு பதிலீடாக யாழ்.மாவட்டத்தில் இருந்து வன்னிக்கு இடமாற்றம் செய்யப்பட்டு மறு பரிசீலனை செய்யப்பட்ட ஆசிரியர்களின் இடமாற்றப் பட்டியலை உடனடியாக வெளியிட்டு ஆசிரியர் இடமாற்றச் செயற்பாட்டை நடைமுறைப்படுத்த வேண்டும்.

மீள்பரிசீலனை செய்யப்பட்ட வேகத்தில் ஆசிரியர் இடமாற்ற வேலைத்திட்டத்தை நடைமுறைப்படுத்தாமல் தாமதப்படுத்துவதில் சந்தேகம் ஏற்பட இடம்இருப்பதால் வன்னிப் பெருநிலப்பரப்புக்கான பதிலீட்டு இடமாற்றத்தையும் வன்னிப் பெருநிலப் பரப்பிலிருந்து விடுவிக்கப்பட்ட ஆசிரியர்களுக்கான இடமாற்றத்தையும் உடனடியாக நடைமுறைப்படுத்த வேண்டும் என்று அதில் குறிப்பிடப்பட்டுள்ளது. (ஒ-11)

## அழிக்கப்பட்டுள்ள குடியிருப்புகள்; எழுதுமட்டுவாழ் மக்கள் அதிர்ச்சி!

தென்மராட்சி,ஒக்.9

தமது குடியிருப்புக்களைப் பார்க்கச் சென்ற தென்மராட்சி கிழக்கு எழுதுமட்டுவாழ் பகுதி மக்கள் தமது வீடுகளைக் காணாது அதிர்ச்சியடைந்தனர்.

கடந்த 5ஆம் திகதி சனிக்கிழமை அப்பகுதிக்கு மக்கள் சென்றனர். எழுதுமட்டு வாழ்-நாகர் கோயில் வீதியில் இருந்த 267 வீடுகளில் இரண்டு வீடுகள் தவிர்ந்த ஏனைய வீடுகள் இருந்த இடம் தெரியாமல் அழிக்கப்பட்டுள்ளதைக் கண்டு அதிர்ச்சியடைந்தனர்.

மேலும் காணிகளில் நின்ற பயன்தரு மரங்கள் தறிக்கப்பட்டுள்ளதாகவும், அப்பகுதி மீண்டும் பழைய நிலைக்குத் திரும்ப பல வருடங்கள் செல்லுமெனவும் தெரிவித்தனர்.

15 தினங்களுக்கு முன்னர் சென்றபோது காணப்பட்ட வீடுகள் தற்போது அழிக்கப்பட்டிருந்ததாகவும் ஒருவர் தெரிவித்தார். (த-207)

# யாழ்.துரையப்பா விளையாட்டரங்கை தரமுயர்த்த இந்தியா உதவி வழங்கும்

## பஸ்கள் வழங்கும் நிகழ்வில் தூதுவர் அசோக் காந்த



நேற்றுமுன்தினம் யாழ்ப்பாணத்துக்கு விஜயம் செய்த இந்தியத் தூதுவர் அசோக் கே. காந்த வேம்படி மகளிர் கல்லூரி அதிபரிடம் பஸ்திறப்பை கையளிப்பதை அருகில் யாழ். பல்கலைக்கழக துணைவேந்தர் என்.சண்முகலிங்கன், பருத்தித்துறை இராமகிருஷ்ண மிஷன் தலைவர் சுவாமி சித்ரூபானந்தா ஆகியோர் நிற்பதையும் படத்தில் காணலாம்.

யாழ்ப்பாணம், ஒக்.9

யாழ்.துரையப்பா விளையாட்டரங்கை சர்வதேசதரத்துக்கு உயர்த்துவதற்கு இந்தியா உதவி வழங்கும். அத்துடன் கலாசார மண்டபம் ஒன்றை நவீனமுறை யில் அமைக்கவும் இந்திய அரசு உதவும்.

இவ்வாறு குறிப்பிட்டார் இந்தியத் தூதுவர் அசோக் கே.காந்த.

யாழ்.மாநகரசபை வளகாத்தில் வைத்து இலங்கை இந்திய நட்புறவுச் சங்கம் வழங்கிய பஸ்களைச் சம்பந்தப்பட்டவர்களிடம் கையளிக்கும் நிகழ்வு நேற்று வெள்ளிக்கிழமை யாழ். மாநகர முதல்வர் திருமதி யோகேஸ்வரி பற்குணராஜா தலைமையில் நடைபெற்றது.

இந்த நிகழ்வில் உரையாற்றிய போதே இந்தியத் தூதுவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

நகர மக்கள் மீள்குடியமர்ந்துள்ள நிலையில் அவர்களின் முக்கிய தேவைகள் நிறைவேற்றப்பட வேண்டும். யாழ்ப்பாணத்துக்கான ரயில் பாதையை அமைப்பதுடன் மன்னார், மடு, தலைமன்னார் பகுதிகளுக்கும் நவீன வசதிகளுடன் கூடிய ரயில் பாதைகளை அமைக்கவும் இந்திய அரசு உதவும். இலங்கையுடன் இந்தியா கொண்டுள்ள நட்பின் அடையாளமாக யாழ். மாநரகசபை, யாழ்.பல்கலைக்கழகம், வேம்படி மகளிர் கல்லூரி, யாழ். மத்திய கல்லூரி ஆகியவற்றுக்கு இந்த பஸ்கள் கையளிக்கப்படுகின்றன. மீள்குடியமரும் மக்களுக்கு வசதி யாக வீட்டுத் திட்டங்களையும், இந்திய அரசு செயற்படுத்த நடவடிக்கைகள் மேற் கொண்டுள் ளது. யாழ். மாநகர முதல்வர் கேட்டுக் கொண்டபடி யாழ்ப்பாணம் துரையப்பா விளை யாட்டரங்கை சர்வதேச தரத்துக்கு உயர்த்தக் கூடியதாகவும் கலாசார மண்டபம் இருந்த பழைய இடத்தில் நவீன வசதிகள் கொண்ட கலாசார மண்டபத்தை அமைக்கவும் இந்தியா உதவும் - என்றார்.

இந்த நிகழ்வில் யாழ். பல்கலைக்கழகத் துணைவேந்தர் பேராசிரியர் என்.சண்முகலிங்கன், யாழ். மாநகர ஆணையாளர் மு.செ.சரவணபவ, செயலாளர் இ.இரத்தினசிங்கம், பருத்தித்துறை சாரதா சேவாச்சிரம சுவாமிகள் சித்ரூபானந்தா உட்பட பலர் கலந்து கொண்டனர். (த-7)

# பாடசாலை மாணவர்களுக்காக நடமாடும் நூலக சேவை

## நேற்றுமுன்தினம் வைபவ ரீதியாக ஆரம்பம்

யாழ்ப்பாணம், ஒக்.9

யாழ்.மாவட்டத்திலுள்ள ஐந்து கல்வி வலயங்களைச் சேர்ந்த ஐம்பதுக்கும் மேற்பட்ட பாடசாலை மாணவர்கள் பயன் பெறக் கூடிய வகையில் நடமாடும் நூலக சேவை நேற்று முன் தினம் வைபவ ரீதியாக ஆரம்பித்து வைக்கப்பட்டது.

ஐரோப்பிய ஒன்றியத்தின்





நிதியுதவியுடன் சர்வதேச சிறுவர் தினத்தை முன்னிட்டு 'கடவுளின் சொந்தக் குழந்தைகள்' நிறுவனத்தின் ஏற்பாட்டில் யாழ். பொது நூலகத்தின் ஆதரவுடன் வழிகாட்டலுடனும் இந்த நடமாடும் சேவை இடம்பெறவுள்ளது.

யாழ்.மாவட்டத்திலுள்ள ஐந்து கல்வி வலயங்களின் பணிப்பாளர்களினதும் யாழ்.பொது நூலகரதும் திட்டமிடலுடன் இந்த நடமாடும் நூலக சேவை இடம்பெறவுள்ளது.

ஐரோப்பிய ஒன்றியத்தின் நிதியுதவியுடன் வழங்கப்பட்ட பஸ் மூலமே இந்தச் சேவை இடம் பெறவுள்ளது. பாடசாலை மாணவர்களுக்கும் ஆசிரியர்களுக்கும் பயனளிக்கும் பல்வேறு நூல்களை உள்ளடக்கியதாக இந்த சேவை அமைந்துள்ளது.

இந்தச் சேவையின் ஆரம்பத் திட்டம் ஆறுமாதங்களைக் கொண்டுள்ளது.

வலயக் கல்விப் பணிப்பாளர்களின் வேண்டுகோளுக்கு ஏற்ப பாடசாலைகள் தெரிவு செய்யப்பட்டு அங்கு இந்தச் சேவை காலை 9 மணி முதல் 2 மணிவரை இடம்பெறவுள்ளது.

ஆரம்பத்தில் தினமும் இடம் பெறும் இந்தச்சேவை பின்னர் வாரத்தில் இரு தினங்கள் மட்டும் வழங்கத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

இந்த நடமாடும் சேவை மூலம் நூலக வசதிகளற்ற பாடசாலை மாணவர்கள் பெரிதும் நன்மை யடைவார்கள் என எதிர்பார்க்கப் படுகிறது.

யாழ்.பொதுநூலகத்தில் நேற்று ஆரம்பித்து வைக்கப் பட்ட இந்த நடமாடும் நூலக சேவை நிகழ்வு மாநகரசபை முதல்வர் திருமதி யோகேஸ்வரி பற்குணராஜா தலைமையில் இடம்பெற்றது. இதன்போது ஐரோப்பிய ஒன்றியத்தின் இலங்கைக்கான வதிவிடப் பிரதிநிதி விம் பிரவுட்.ஹொம் சிறப்பு விருந்தினராகக் கலந்து கொண்டார்.

யாழ்.மாவட்டத்தின் கல்வி வலயங்களைச் சேர்ந்த பிரதிநிதிகள், யாழ்.மாநரகசபை ஆணையாளர், யாழ்.பொதுநூலகம் மற்றும் உத்தியோகத்தர்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர். (த-14)

# யாழ்.மாநகர சபை எல்லைக்குள் 33,000 வீடுகளில் வரி மீளாய்வு

## உள்ளூராட்சி ஆணையாளர் தகவல்

யாழ்ப்பாணம், ஒக்.9

யாழ்ப்பாணம் மாநகரசபைப் பகுதியில் உள்ள 33 ஆயிரம் வீடுகளில் வரி மீளாய்வு செய்வதற்குரிய நடவடிக்கைகளை வரிமதிப்பீட்டுத் திணைக்களம் மேற்கொள்ளவுள்ளது.

'ஏசியாபெண்டேசன்' நிலைமை உள்ளூராட்சி மன்றங்களின் வரிகளை மீளாய்வு செய்யும் பணியை பொருளாதார ஆளுகை எனப்படும் குழுவின் கீழ் நடை முறைப் படுத்தவுள்ளதாக வட மாகாண உள்ளூராட்சி ஆணையாளர் பிரான்சிஸ் ஜோண்சன் தெரிவித்தார்.

ஆளுநர் ஜி.ஏ.சந்திரசிறியின் அனுமதியுடன் இந்த நடவடிக்கை இடம்பெறுவதாகவும், யாழ். மாவட்டத்தில் மேலும் மூன்று பிரதேசசபைப் பிரிவுகளில் இது தொடர்பான மதிப்பீட்டு வேலைகள் நடைபெறுவதகாவும் தெரிவிக்கப்பட்டது.

வரிமதிப்பீட்டுத் திணைக்களத்தின் தலைமை வரி மதிப்பீட்டாளர் பி. டபிள்யூ. செனிவிரட்ன, மேலதிக வரி மதிப்பீட்டாளர் டபிள்யூ.ராஜபக்ஷ ஆகியோர் இந்த விடயங்களைக் கவனிக்கும் பொருட்டு யாழ்ப்பாணம் வருகை தந்துள்ளதாகவும், அவர்களுடன் இணைந்து மாநகரசபை உறுப்பினர்கள், உத்தி யோகத்தர்களுக்கு இது குறித்து விழிப்புணர்வை ஏற்படுத்தும் கலந்துரையாடல்கள் நடைபெற்று வருவதாகவும் மாகாண உள்ளூராட்சி ஆணையாளர் பி.ஜோன்சன் தெரிவித்தார். (த-7)

# நகரப் பகுதியில் நுளம்புப் பெருக்கம்

யாழ்ப்பாணம், ஒக்.9

கடந்த சில தினங்களாகப் பெய்த மழையையடுத்து யாழ். நகரப் பகுதியில் நுளம்புப் பெருக்கம் அதிகரித்துள்ளது.

மழை பெய்ததுடன் சிற்சில இடங்களில் பொறுப்பற்ற முறையில் மக்களால் குவித்து வைக்கப்பட்டிருந்த குப்பை கூழங்களால், குண்டு, குழிகளில் மழை நீர் தேங்கி நின்றதாலும் நுளம்புப் பெருக்கம் அதிகரித்துக் காணப் படுகிறது.

நுளம்புப் பெருக்கத்தினால் மக்கள் ஒன்றுகூடும் பொது இடங்கள், உணவகங்கள், அரச, தனியார் அலுவலகங்களிலும் மாலை வேளைகளில் நுளம்புத் தொல்லைகளைத் தாங்க முடியாத நிலை இருந்து வருகிறது. (த-236)



யாழ்ப்பாணம் வணிகர் கழகத்தினர் போரினால் பாதிக்கப்பட்ட பச்சிலைப்பள்ளி கிராம மக்களின் வாழ்வாதாரத்தை கட்டியெழுப்ப ஒரு தொகுதி உதவு பொருள்களை வழங்கினர்.

வணிகர் கழகத் தலைவர் அ.ஜெயசேகரம், செயலாளர் ஜனத்குமாரன், ஈ.எஸ்.பி. நாகரட்ணம், சிவகுமார் ஆகியோர் இணைந்து பச்சிலைப்பள்ளி அபிவிருத்தி சங்கத் தலைவர் சி.இராமலிங்கத்திடம் பாடசாலை உபகரணங்களை கையளிப்பதைப் படத்தில் காணலாம்.

(படங்கள்:-தமிழரசன், நேசன்)

# யாழ்.மாநகர் சபையின் பஸ்களை விசேட தேவைகளுக்குப் பயன்படுத்தலாம்

கொழும்புத்துறை, ஒக்.9

இலங்கை இந்திய நட்புறவின் அடிப்படையில் இந்திய அரசினால் வழங்கப்பட்டு மாநகரசபை பகுதியில் போக்குவரத்துச் சேவையில் ஈடுபட்டுவரும் பஸ் வண்டிகளை விசேட தேவைகளுக்கும் சுற்றுலாப் பயணங்களுக்கும் மக்கள் பயன்படுத்த முடியுமென அறிவிக்கப்பட்டுள்ளது.

மேற்படி சேவைகளைப் பெற விரும்புவோர் யாழ்.மாநகர சபையில் முன்கூட்டிய பதிவுகளை மேற்கொள்ளுமாறு மாநகர சபை வாகனப் போக்குவரத்துப் பிரிவு கேட்டுள்ளது.

இதேவேளை பாடசாலை மாணவர்கள், அரச உத்தியோகத்தர்கள் மற்றும் பொதுமக்களின் நலன்கருதி போக்குவரத்துச் சேவைகள் அற்ற மார்க்கங்களில் மாம்பழம் சந்தியிலிருந்து இச்சேவை நடைபெற்று வருவது குறிப்பிடத்தக்கது. (த-135)

# சாரதி அனுமதிப் பத்திரம் பெற 250 மாற்று வலுவுள்ளோர் பதிவு

கொழும்புத்துறை,ஒக்.9

மாற்று வலுவுள்ள 250இற்கு மேற்பட்டோர் சாரதி அனுமதிப்பத்திரத்தை பெற்றுக்கொள்ள விருப்பம் தெரிவித்து பதிவுகளை மேற்கொண்டுள்ளதாக 'ஜெய்ப்பூர்' நிறுவன அதிகாரியொருவர் தெரிவித்தார்.

அதேவேளை,மாற்று வலுவுள்ளோருக்கு சாரதி அனுமதிப் பத்திரம் வழங்கும் விசேட பொறிமுறையிலான வாகன அனுமதி செயன்முறை அதிகாரி, மருத்துவ சான்றிதழ் வழங்கும் மாற்று வலுவுள்ளோருக்கான வைத்திய அதிகாரி ஆகியோர் கொழும்பில் இருப்பதால் பரீட்சைகள் நடத்துவதில் நடைமுறைச் சிக்கல்கள் இருப்பதாகவும் கூறப் படுகிறது.

வாகன சாரதி அனுமதிப்பத்திரம் பெறும் பொருட்டு தாம் கொழும்பு சென்று வருவது பெரும் செல வீனத்தையும் உடல் சிரமங்களையும் ஏற் படுத்தும் என்று மாற்று வலுவுடையோர் தரப்பில் தெரிவிக்கப்படுகிறது.

பலரது சிரமங்களையும் நீக்கும் பொருட்டு உரிய அதிகாரிகள் யாழ்ப்பாணம் வந்து செயல் முறைப் பரீட்சைகளை நடத்தி சாரதி அனுமதிப் பத்திரம் வழங்க உரியவர்கள் ஆவன செய்ய வேண்டுமென கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. (த-135)

# போரினால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு உதவ வசதி படைத்தவர்கள் முன்வரவேண்டும்

## வணிகர் கழகத் தலைவர் அழைப்பு

யாழ்ப்பாணம், ஒக்.9

கடந்த காலத்தில் இடம் பெற்ற போரினால் பாதிக்கப்பட்ட மக்களில் பலர் இன்றும் துன்ப துயரங்களை எதிர் நோக்கிக் கொண்டே உள்ளனர்.எம்மத்தியில் வசிக்கும் பணம், வசதி படைத்தவர்கள் மனிதாபிமான ரீதியாக அவர்களுக்கு உதவ முன் வரவேண்டும். இவர்கள் பாதிக்கப்பட்ட மக்களில் ஒருவரை பொறுப்பேற்றால் அனைவரது வாழ்க்கையும் மாற்றியமைக்கப்படும்.

இவ்வாறு தெரிவித்தார் யாழ்ப்பாணம் வணிகர் கழகத்தின் தலைவர் அ. ஜெயசேகரம்.

போரினால் பாதிக்கப்பட்ட பச்சிலைப்பள்ளி கிராமமக்களுக்கு உதவி வழங்கும்பொருட்டு தையல் இயந்திரங்களும்,பாடசாலை உபகரணங்களும், போஷாக்கு உணவும் வழங்கும் நிகழ்வு நேற்று முன்தினம் வியாழக்கிழமை யாழ்ப்பாணம் வணிகர் கழக மண்டபத்தில் நடைபெற்றது.

போரினால் கணவனை இழந்த 30 வயதுக்குட்பட்ட 28 விதவைகளுக்குத் தையல் பயிற்சிகளை வழங்க 3 தையல் இயந்திரங் களும், பெற்றோரை இழந்த 16 வய துக்கு உட்பட்ட 21 பிள்ளை களுக்கு பாடசாலை உபகரணங் களும் போஷாக்கு உணவும் பச்சி லைப்பள்ளி அபிவிருத்தி சங்கத் திடம் கையளிக்கப்பட்டது.

அங்கு உரையாற்றிய வணிகர் கழகத் தலைவர் தொடர்ந்து பேசுகையில் தெரிவித்தவை வருமாறு:

பாதிக்கப்பட்ட எமது மக்களை நாமே தூக்கி விட வேண்டும். அவர்கள் பழைய நிலைக்குத் திரும்ப எம்மிடையே வசிக்கும் வசதி படைத்தவர்கள் உதவ முன்வர வேண்டும்.வணிகர் கழகம் மாத்திரம் தனித்து நின்று எதனையும் சாதித்து விட முடியாது.

போரினால் எமது மக்கள் கல்வி, பொருளாதாரம் வாழ்விடங்களை இழந்துள்ளனர்.

அவர்களை மீட்டெடுக்க வேண்டியது எமது கடமை. எனவே அனைவரும் எமது மக்களின் நலனுக்காக ஒன்றிணைய வேண்டும்- என்றார்.

**நாடாளுமன்ற உறுப்பினர்கள் உதவமுன்வரவேண்டும்**

இந்நிகழ்வில் கலந்து கொண்ட பச்சிலைப்பள்ளி அபிவிருத்தி சங்கத் தலைவர் சி. இராமலிங்கம் உரையாற்றுகையில் -

போரினால் பாதிக்கப்பட்ட மக்களின் வாழ்வாதாரத்தை கட்டியெழுப்ப ஆரம்பிக்கப்பட்ட எமது சங்கத்துக்கு வணிகர் கழகம் பேருதவி வழங்கியுள்ளது.

வணிகர் கழகம் 3 தையல் இயந்திரங்களையும் வெளிநாடுகளில் வசிக்கும் புலம்பெயர் உறவுகள் 5 தையல் இயந்திரங்களையும் கோண்டாவிலைச் சேர்ந்த சட்டத்தரணி திருமதி ஞானலோஜினி ஒரு தையல் இயந்திரத்தையும் வழங்கியுள்ளனர்.

நாம் பல நாடாளுமன்ற உறுப்பினர்களையும் எமது மக்களுக்கு உதவுமாறு கேட்ட போதும் அவர்கள் இதுவரை எவ்வித உதவிகளையும் வழங்கமுன்வரவில்லை- என்றார். (த-6-86)

# எம்.பி. ஒருவரை பதவி நீக்கும் அதிகாரம் நாடாளுமன்ற பதில் செயலருக்கு இல்லை

## சபாநாயகருக்கு ரணில் எடுத்துரைப்பு

கொழும்பு, ஒக். 09

''இன்று சரத் பொன்சேகாவுக்கு ஏற்பட்ட நிலைமை நாளை இச் சபையில் உள்ள எவருக்கும் ஏற்படலாம். ஜனநாயக முறைப்படி தெரிவுசெய்யப்பட்ட ஒரு நாடாளுமன்ற உறுப்பினரை நாடாளுமன்றத்துக்குத் தெரியாமலே தூக்கி எறியும் அதிகாரம் பதில் செயலாளருக்குக் கிடையாது.''

-இவ்வாறு குற்றம் சுமத்தினார் எதிர்க் கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க.

அத்துடன், சபாநாயகர் தமக்கு உள்ள அதிகாரங்களைப் பயன்படுத்தி நாடாளுமன்ற உறுப்பினர்களின் சிறப்புரிமைகளைப் பாதுகாக்க வேண்டும் என்றும் ரணில் விக்கிரமசிங்க நேற்று நாடாளுமன்றத்தில் கோரிக்கை விடுத்தார்.

''பிரதமரும்,ஜனாதிபதியும், எந்த ஒரு அமைச்சுப் பொறுப்பையும் ஏற்கக் கூடாது என்று ஐ.தே.க. உறுப்பினர் ரவி கருணாநாயக்க சமர்ப்பித்த தனி நபர் பிரேரணையை வழிமொழிந்து பேசும்போதே இக் கோரிக்கையையும் முன்வைத்தார்.

அவர் தொடர்ந்து உரையாற்றும் போது மேலும் கூறியவை வருமாறு-

அரசமைப்பின்படி நாடாளுமன்ற உறுப்பினர்களின் சிறப்புரிமைகளைப் பாதுகாக்க சகல நடவடிக்கைகளையும் எடுக்கும் அதிகாரம் கொண்டவர் நடுநிலையாக வேறுபாடின்றிச் செயற்பட வேண்டும்.

ஆனால் இங்கு என்ன நடக்கின்றது? நேற்று நான் இந்தச் சபையில் சிறப்புரிமை தொடர்பாகப் பேசியபோது எனக்கு ஒலி வாங்கிகூடக் கொடுக்கப்படவில்லை.

கடந்த 23ஆம் திகதியும் 24ஆம் திகதியும் நானும், அநுர குமார திஸாநாயக்காவும், விஜித ஹேரத்தும் சரத் பொன்சேகாவை இந்தச் சபைக்கு வரவிடாமல் தடுத்துள்ள சம்பவம் தொடர்பாக சிறப் புரிமைப் பிரச்சினையைக் கிளப்பினோம்.

ஆரம்பத்தில் இதற்கு இடமளிக்க மறுத்த தாங்கள், நிலையியற் கட்டளை 743ஆம் பிரிவின்படி தெளிவுபடுத்திய பின்னர் இவ் விடயம் தொடர்பாக சட்டமா அதிபரின் ஆலோசனைகளைப் பெற்று இந்தத் தீர்ப்பு வழங்கப்படும் எனக் கூறினீர்கள்.

ஆனால் நீங்கள் தீர்ப்பு வழங்குவதற்கு முன் நாடாளுமன்ற பதில் செயலாளர் நாயகம், சரத் பொன்சேகாவின் நாடாளுமன்ற உறுப்பினர் பதவி வெற்றிடமாகி உள்ளது என்று தேர்தல்கள் ஆணையாளருக்குக் கடிதம் அனுப்பி உள்ளார். இதனைச் செல்லுபடி அற்றதாக்க வேண்டும்.

சரத் பொன்சேகா குற்றம் புரிந்தவர் என இராணுவ நீதிமன்றம் சிபார்சு செய்துள்ளது. சிவில் நீதிமன்றம் தண்டனை வழங்கவில்லை. இராணுவ நீதிமன்றத்தை ஒரு நீதிமன்றமாக ஏற்றுக் கொள்ளவும் முடியாது.

இந்தச் சபையில் சபாநாயகருக்கு சகல அதிகாரங்களும் உள்ளன. சபை உறுப்பினர் தொடர்பாக சட்ட மா அதிபரின் ஆலோசனையைப் பெறவேண்டிய அவசியம் இல்லை. சபாநாயகரே இவ் விடயத்தில் சகல அதிகாரங்களையும் கொண்டவர். அதன்படி அவர் செயற் படவேண்டும். என்று ரணில் விக்கிரம சிங்க கூறினார். (ஒ-சி)

## எனது கணவரை விடுவிக்க மன்னிப்புக் கோரினேனா?

### அப்பட்டமான பொய் என்கிறார் சந்திரிகா

கொழும்பு, ஒக். 09

சிறையிலிருந்த எனது கணவர் விஜய குமாரணதுங்கவை விடுவிக்க அப்போதைய ஜனாதிபதி ஜே.ஆர்.ஜெயவர்தனவிடம் தான் மன்னிப்புக் கோரவில்லை என முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்க குமாரணதுங்க தெரிவித்துள்ளார்.

''அமைச்சர்களான கெஹலிய ரம்புக்வெல, விமல் வீரவன்ஸ ஆகியோர் நான் மன்னிப்புக் கோரினேன் என்று தெரிவித்திருப்பது அப்பட்டமான பொய்'' எனவும் அவர் தெரிவிக்கின்றார்.

தாம் சட்டரீதியாகவே தமது கணவரை விடுவித்தார் என்றும் அவர் சொன்னார்.

## ம.ம. முன்னணியின் தலைவராகிறார் இ.தொ.கா. இராதாகிருஷ்ணன் எம்.பி

மலையக மக்கள் முன்னணியின் அரசியல் பிரிவுத் தலைவராக இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸின் நுவரெலிய மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் வே.இராதாகிருஷ்ணன் பொறுப்பேற்கிறார்.

எதிர்வரும் 20ஆம் திகதி மலையக மக்கள் முன்னணியின் அரசியல் பிரிவுத் தலைவராகப் பொறுப்பேற்கும் வே.இராதாகிருஷ்ணன் எம்.பி., வரவு-செலவுத் திட்டத்துக்கு முன்னர் ஜனாதிபதியைச் சந்தித்துப் பேச்சு நடத்தவுள்ளார் எனத் தெரிவித்தார்.

மலையக மக்கள் முன்னணி கடந்த அரசில் அமைச்சரவை அந்தஸ்துள்ள ஓர் அமைச்சுப் பதவியையும், ஒரு பிரதி அமைச்சுப் பதவியையும் வகித்தமை தெரிந்ததே. ஆனால், கடந்த பொதுத் தேர்தலில் மலையக மக்கள் முன்னணி ஓர் ஆசனத் தைக் கூடப் பெறவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

''மலையக மக்கள் முன்னணி, ஜனாதிபதியைச் சந்திக்கும்போது அமைச்சுப் பதவிகளைக் கேட்காது. மலையக மக்கள் முன்னணியை அடிமட்டத்திலிருந்து கட்டியெழுப்பும் நடவடிக்கைகள் உடனடியாக ஆரம்பிக்கப்படும். எதிர்வரும் உள்ளூராட்சித் தேர்தல்களில் முன்னணியின் சக்தி வெளிப்படும்'' என்று இராதாகிருஷ்ணன் எம்.பி. தெரிவித்தார்.

முன்னாள் அமைச்சர் அமரர் பெ.சந் திரசேகரனின் கனவை நிறைவேற்றும் வகையில் முன்னணி மறுசீரமைக்கப்பட்டு மலையகத்தின் மாபெரும் சக்தியாக மாற்றப்படும் எனவும் அவர் சொன்னார்.


## TASTE OF JAFFNA RESTAURANT

யாழ். 101, பிரதான வீதியில் இயங்கும் மேற்படி உணவு விடுதிக்கு பின்வரும் பதவிகளுக்கு வேலையாள்கள் தேவை.

சமையலாளர்
சமையல் அறை உதவியாளர்
சமையலறை சுத்திகரிப்பாளர்
ஆண்/பெண் இருபாலாரும் தேவை.

தொடர்புகளுக்கு: T.P.: 0213207190
0212221322


## மாநகரசபை யாழ்ப்பாணம்

### அகற்றப்பட்ட அனுமதியற்ற விளம்பரப் பொருள்களை பகிரங்க ஏலம் கோரல்

எமது சபையின் எல்லைக்குள் சபையின் அனுமதி பெறாமல் அமைக்கப்பட்ட விளம்பரப் பலகை மற்றும் பதாகைகள் அகற்றப்பட்டு சபை வளாகத்தில் வைக்கப் பட்டுள்ளன. அவற்றை உரியவர்கள் உடனடியாக சபையுடன் தொடர்புகொண்டு உரிய அனுமதியினைப் பெற்று 2010.10.15 ஆம் திகதிக்கு முன்னதாக எடுத்துச் செல்லுமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறீர்கள்.

தவறின் இப்பொருள்கள் அனைத்தும் 2010.10.21 ஆம் திகதி வியாழக்கிழமை முற்பகல் 10 மணிக்கு மாநகரசபை நானாவித இறைவரிப் பகுதியில் பகிரங்க ஏலம் மூலம் வழங்கப்படும்.

திருமதி யோகேஸ்வரி பற்குணராஜா
மாநகர முதல்வர், மாநகரசபை, யாழ்ப்பாணம்.

## கல்வயல் மக்களுக்கு நாளை மானிய உரம்

தென்மராட்சி, ஒக். 9

கல்வயல் கமக்கார அமைப்பின் எல்லைக் குட்பட்ட நெற்செய்கையாளர்களுக்கு நாளை ஞாயிற்றுக்கிழமை மீசாலை புத்தூர் சந்தி கமநல சேவைகள் நிலையத்தில் மானிய உரவகைகள் விநியோகிக்கப்படும் என்று அமைப்பின் தலைவர் கா.வேதநாயகம் அறிவித்துள்ளார். (ஒ-207)

## மஹஜன சம்பத சீட்டிழுப்பு முடிவுகள்

கொழும்பு, ஒக். 8

தேசிய லொத்தர் சபையின் மஹஜன சம்பத 2302ஆம் இலக்க நேற்றைய சீட்டிழுப்பில் "R" என்ற ஆங்கில எழுத்தும் 2/3/2/9/7/5 என்ற இலக்கங்களும் அதிர்ஷ்டத்துக் குரியனவாகத் தெரிவாகின.

இதன் பிரகாரம் வலமிருந்து இடமான அமைப்பில் சுப்பர் பரிசு வெல்லப்படவில்லை.

2/3/2/9/7/5 என்ற இலக்கங்களைக் கொண்ட சீட்டுக்களை வைத்திருக்கும் இருவருக்கு முதலாம் பரிசாக தலா இருபது இலட்சம் ரூபா கிடைக்கவுள்ளது.

3/2/9/7/5 என்ற இலக்கங்களைக் கொண்ட சீட்டுக்களை வைத்திருக்கும் 12 பேருக்கு இரண்டாம் பரிசாகத் தலா ஒரு இலட்சம் ரூபா கிடைக்கவுள்ளது.

2/9/7/5 என்ற இலக்கங்களைக் கொண்ட சீட்டுக்களை வைத்திருக்கும் 144 பேருக்கு மூன்றாம் பரிசாகத் தலா பத்தாயிரம் ரூபா கிடைக்கவுள்ளது.

9/7/5 என்ற இலக்கங்களைக் கொண்ட சீட்டுக்களை வைத்திருக்கும் 1,328 பேருக்கு 4ஆம் பரிசாகத் தலா ஆயிரம் ரூபா கிடைக்கும்.

7/5 என்ற இலக்கங்களைக் கொண்ட சீட்டுக்களை வைத்திருக்கும் 13,177 பேருக்கு 5ஆம் பரிசாகத் தலா நூறு ரூபா கிடைக்கவுள்ளது.

5 என்ற இலக்கத்தை மட்டும் கொண்ட சீட்டுக்களை வைத்திருக்கும் 1,30,480 பேருக்கு 6ஆம் பரிசாகத் தலா இருபது ரூபா கிடைக்கும்.

இடமிருந்து வலமான அமைப்பில் 2/3/2/9/7 என்ற இலக்கங்களைக் கொண்ட சீட்டுக்களை வைத்திருக்கும் 10 பேருக்கு ஏழாம் பரிசாக தலா பத்தாயிரம் ரூபா கிடைக்கவுள்ளது.

2/3/2/9 என்ற இலக்கங்களைக் கொண்ட சீட்டுக்களை வைத்திருக்கும் 129 பேருக்கு 8ஆம் பரிசாகத் தலா ஆயிரம் ரூபா கிடைக்கும்.

2/3/2 என்ற இலக்கங்களைக் கொண்ட சீட்டுக்களை வைத்திருக்கும் 1,326 பேருக்கு 9ஆம் பரிசாகத் தலா நூறு ரூபா கிடைக்கவுள்ளது.

2/3 என்ற இலக்கங்களைக் கொண்ட சீட்டுக்களை வைத்திருக்கும் 13,049 பேருக்கு பத்தாம் பரிசாக தலா ஐம்பது ரூபா கிடைக்கும்.

"R" என்ற ஆங்கில எழுத்தை மட்டும் கொண்ட சீட்டுக்களை வைத்திருக்கும் 52,248 பேருக்கு பதினோராம் பரிசாகத் தலா இருபது ரூபா கிடைக்கவுள்ளது. (ஒ-16)

## துயர் பகிர்கின்றோம்

எமது பிரதேச செயலகத்தில் ஜே/183 கிராம அலுவலராகக் கடமையாற்றும் சி.பாலசுப்பிரமணியம் அவர்களின் அன்புத் தாயார்

### அமரர் சிவசம்பு கனகம்மா

அவர்களின் பிரிவினால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு அன்னாரின் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.

நலன்புரிச் சங்கம்,
பிரதேச செயலகம், உடுவில்.

## கண்ணீர் அஞ்சலி



எமது கல்லூரியில் தரம் 6 இல் கல்வி பயின்ற மாணவன்

### மோகனதாஸ் நிருஷனின்

மறைவையிட்டு துயரில் ஆழ்ந்திருக்கும் அவரது குடும்பத்திற்கும் உற்றார், உறவினர்களுக்கும் எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

பாடசாலைச் சமூகம், கிளி./பளை மத்திய கல்லூரி

## இதய அஞ்சலி

வலிகாமம் கல்விவலயத்தைச் சேர்ந்த மனைப்பொருளியல் ஆசிரியர் செல்வி கிருஷ்ணவேணி நாகலிங்கம் அவர்களின் அன்புத் தாயார்

### திருமதி நாகலிங்கம் பாக்கியம்

அவர்களின் திடீர்மறைவினால் துயருற்றிருக்கும் குடும்பத்தவர்களுக்கு ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன், அன்னாரின் ஆத்மா சாந்தியடைய எல்லாம்வல்ல இறைவனை வேண்டுகின்றோம்.

மனைப்பொருளியல் ஆசிரியர்கள்
வலிகாமம் கல்வி வலயம்.

## மரண அறிவித்தல்கள்

### திருமதி மரியம்மா பத்திநாதர்



இல.4/5, 3 ஆம் குறுக்குத் தெரு, யாழ்ப்பாணத்தைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி மரியம்மா பத்திநாதர் நேற்று(08.10.2010) வெள்ளிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான தோமஸ் - ஆரோக்கியம் தம்பதியரின் அன்பு மகளும் காலஞ்சென்றவர்களான மோசேஸ் - அடைக்கலம் தம்பதியரின் அன்பு மருமகளும் மோசேஸ் பத்திநாதரின் (ஓய்வுபெற்ற லிகிதர், யாழ். போதனா வைத்தியசாலை) பாசமிகு மனைவியும் திருமதி வி.வசந்தாவின் அன்புத் தாயாரும் விக்டர் ஜெயக்குமார் அவர்களின் அன்பு மாமியும் ஜோ அன்ரனியோ கிறேசியன் (மாணவன், புனித பத்திரிசியார் கல்லூரி), சறோன் மரியா, செரின்லிசி, கெலன் ரூபிஷா (மாணவிகள், யா/திருக் குடும்ப கன்னியர் தேசிய பாடசாலை) ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் நல்லடக்க ஆராதனை நாளை (10.10.2010) ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 3.30 மணியளவில் அவரது இல்லத்தில் இடம்பெற்று பூதவுடல் புனித அடைக்கல அன்னை ஆலயத்துக்கு எடுத்துச்செல்லப்பட்டு ஆசீர்வதிக்கப்பட்டு பின் புனித கொஞ்சேஞ்சி மாதா சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

இல.04/5, 3 ஆம் குறுக்குத் தெரு,
யாழ்ப்பாணம்.

தகவல்:
மோ.பத்திநாதர்
(கணவர்).

### திருமதி வடிவாம்பிகை கதிர்காமத்தம்பி

இன்பருட்டி, எள்ளுக்குண்டானைப் பிறப்பிடமாகவும் அல்வாயை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி.வடிவாம்பிகை கதிர்காமத்தம்பி 08.10.2010 அன்று சிவபதமடைந்தார்.

அன்னார் காலஞ்சென்ற பொன்னையா - செல்லம்மா தம்பதியினரின் மகளும்,காலஞ் சென்ற கதிர்காமத்தம்பியின் அன்பு மனைவியும்,காலஞ்சென்ற வேலுப்பிள்ளை தம்பதியினரின் அன்பு மருமகளும்,காலஞ்சென்ற ஞானாம்பிகை, பத்மநாதன்-(லண்டன்) ,பத்மாவதி ஆகியோரின் சகோதரியும், கணேஸ்வரன் (முன்னாள் கப்பல் கப்டன்),ராஜேஸ்வரன் (மின் அத்தியட்சகர்CEB-வடமராட்சி),யோகேஸ்வரன் (இத்தாலி), ஜெகேஸ்வரன்(லண்டன்) ஆகியோரின் அன்புத் தாயாரும், சுலோசனா,நந்தினி, சாந்தினி,சுமதினி ஆகியோரின் மாமியாரும் ,அரவிந்தன், அகிலேஸ், தர்சன், அபிராமி, அச்சுதன், செந்தில்,ஆனந்தி,ஆதவன்,பிரியங்கா, துவாரகா, திவ்யா ஆகியோரின் பேர்த்தியுமாவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் நாளை (10.10.2010) ஞாயிற்றுக்கிழமை பி.ப. 2 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக மடத்தடி தருகம்பன் இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார்,உறவினர், நண்பர்கள், அயலவர் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

அல்வாய் கிழக்கு,
அல்வாய்.

தகவல்:
க. ராஜேஸ்வரன்
(மகன்).

உதயன்
தொலைபேசி 222 3837, 222 9933 தொலைநகல்.: 222 9944

## உளநல ஆற்றுப்படுத்தல் உடன் தேவை

போருக்குப் பின்னர் கிளிநொச்சியில் நாளாந்தம் நான்கு பேர் தற்கொலை செய்கின்றனர். போரின் போது, குறிப்பாக இறுதிக்கட்டப் போரின் போது கணவர்களை இழந்த விதவைகள், கணவன்மார் காணாமற்போனோர் பட்டியலில் சேர்க்கப்பட்டுள்ளதால் ஏதிலிகளாகி, எதற்கும் வக்கற்றவர்களாகி விட்ட பெண்கள் ஆகியோரே அதிக எண்ணிக்கையில் தமது உயிரை மாய்த்துக் கொள்ள முயல்கின்றனர்.

இதேபோன்று, போரினால் தமக்கு எற்பட்ட இழப்புக்களையும் பாதிப்புக்களையும் தாங்கிக்கொள்ள முடியாத பல நூற்றுக்கணக்கானோர் மன நோயாளிகளாக மாறி உள்ளனர். இந்த வகையில் கிளிநொச்சி மாவட்டத்தில் 500 பேர் மனநோயாளிகளாகி இருக்கின்றனர்..

இவற்றுக்குப் புறம்பாக போரினால், வன்னிமீது வீசப்பட்ட உயிராபத்துத் தரும் குண்டுகள், எறிகணைகள் எழுப்பிய கர்ண கொடூரமான, மரண பயத்தை விளைவிக்கும் ஓசைகளால், அதிர்வுகளால் நரம்புத் தளர்ச்சியும் ஏக்கமும் அடைந்த நூற்றுக்கணக்கான சிறுவர்கள் பாடசாலைகளுக்குச் செல்லாமல் இருக்கிறார்கள். அதனால் அவர்களின் எதிர்காலம் சூனியமாகிக் கிடக்கிறது.

மொத்தத்தில் பயங்கரவாதத்தை ஒழிப்பதாகக் கூறிக்கொண்டு, அரசாங்கம் நடத்திய போரின் பயங்கரம் நிகழ்காலச் சந்ததியினரை மட்டுமன்றி, வருங்காலப் பிரசைகளான சிறுவர், இளைஞர்களையும் வெகுவாகப் பாதித்துள்ளது.

கிளிநொச்சி மாவட்ட மனநல வைத்தியர் வெளியிட்டுள்ள தகவல்கள், தமிழ் மக்கள் மத்தியில் போர் உண்டாக்கிய உடனடியான பேரிழப்புகளையும் பாதிப்புக்களையும்விட போர் எதிர்காலத்தில் உண் டாக்கக் கூடிய பாரதூரமான பாதிப்புக்களையும் சமூகத் தாழ்வையும் கட்டியம் கூறுவதாகவும், முகவுரை எழுதுவதாகவும் மட்டுமே அமையும். இப்போதைய புள்ளி விவரம் வெறும் ஆரம்ப (Initial) நிலையையே சுட்டுவதாகக் கொள்ளலாம்.

போர் விளைவித்த பயங்கர உளநலப் பாதிப்புக்கள், மெல்ல மெல்லத்தான் வெளிவரும். அவற்றின் விளைவுகள் எமது மக்களின், எதிர்காலச் சந்ததியினரின் வாழ்வை முற்றாகச் சிதைத்துப் புதைக்கும். ஆழ்ந்துணர்ந்து நினைத்துப் பார்த்தால் எவரின் இதயத்தையும் இரத்தம் வடிக்கச் செய்யும்.

போர் முடிந்து ஒன்றரை வருடங்கள் கடந்து விட்ட நிலையில், இப்போதுதான் அதன் பயங்கர விளைவுகள் மேலெழத் தொடங்கியுள்ளன. உயிரிழப்பு, உடைமைகள் இழப்பு, சொத்திழப்பு என்ற வரிசைக்கு அப்பாற்பட்டு உள நலப் பாதிப்புக்கள் பல்வேறு வடிவங்களில் பல்கிப் பெருகி வெளிக்கிளம்பும் போது பெரும் சமூகப் 'பிரளயம்' தோன்றும்.

சிறைகளில் நீண்டகாலம் தடுத்துவைக்கப்பட்டுள்ள தமிழ் இளைஞர்கள் மூளைச் சலவை செய்யப்படுவதாகச் சந்தேகங்கள் எழுப்பப்படுகின்றன. ஆனால் சிறுவயதிலேயே உளநலப் பாதிப்புக்களால் பாதிப்புறுவோர் எண்ணிக்கை உயர்ந்து செல்லும் ஒரு காலகட்டத்தில் தமிழர் சந்ததி - எதிர்காலத் தமிழர் சந்ததி - மலினமுற்ற ஒன்றாக, சக்திகுன்றிய ஒன்றாக மாறும் பேரபாயம் தென்படுகிறது.

உளநலம் பாதிக்கப்பட்ட ஒரு குழுமம் அல்லது சமூகம் எல்லா வகைகளிலும் பலவீனமுற்றதாகவும், எதனையும் செவ்வனே சிந்தித்து செயற்பட நினைக்காத, தனக்கு இழைக்கப்படும் அநீதிகளையும் அக்கிரமங்களையும் இனங்கண்டு கொள்ள முடியாத, எதிர்த்துக் குரல் கொடுக்க முடியாத மனநலப் பாதிப்புற்ற (Insane) சமுதாயமாக மாறிவிடும் பேராபத்து நெருங்கி வருகிறது.

இதனைத் தடுப்பதற்கு, போர் நடைபெற்ற பகுதிகளில் வாழ்வோர்களின் உளநலத்தைச் சீராக்குவது முதற்பணியாக ஆற்றப்பட வேண்டிய பிரதான, தவிர்க்க முடியாத, தட்டிக்கழிக்கக் கூடாத இன்றியமையாத பணியாகும்.

எதிர்காலத் தமிழ்ச் சமுதாயத்தை நிரந்த மனநலம் பாதிப்புற்றதாக மாற்றுவதன் மூலம், தமிழர்கள் தங்களுக்கு உரிமைகள் உண்டு என்று தலையெழுப்பிக் கூறாமல் தடுப்பதற்கான சூழ்ச்சி மிகுந்த உத்தி அரசாங்கம் நடத்திய போரின் பக்க விளைவாகக் கருதப்பட்டாலும் -

தமிழர்களின் எதிர்காலத்தை வேரோடு நாசமாக்க வகுக்கப்பட்ட வஞ்சனை அதில் உள்ளோடும் இலக்காகும்.

அபிவிருத்தி அதனூடாக வளமான வாழ்வு என்ற சொற்பதங்களும் அவை நாடிய செயற்பாடுகளும் வெறும் வெளிப்பூச்சுகளே என்பதனை இனங்கண்டு -

தமிழர் இளம் சமுதாயத்தைப் பீடித்துள்ள உளநலத் தாக்கங்களைக் களைவதற்கான செயற்திட்டங்களுக்கு முதன்மைத்துவமும் முக்கியத்துவமும் தரப்பட வேண்டும்; அவர்களை ஆற்றுப்படுத்தி சீரான மன நிலைக்குத் திரும்பச் செய்வதற்கான பெரும் செயற்றிட்டங்கள் வகுக்கப்பட்டு நடைமுறைப்படுத்தப்படவேண்டும். போரின் கொடுமைகளை அவர்கள் மறக்கத்தக்க சோர்வில்லாத படிமுறைத் திட்டங்கள் தேவை. இத்துறையில் கைதேர்ந்தவர்கள், பயிற்சி உள்ளவர்கள் அணிதிரண்டு கருமமாற்ற வேண்டிய காலம் இது. இன்றைய காலத்தின் முதற் தேவை என இதனைக் கருதிக் கருமமாற்ற வேண்டும்.

# அண்மையில் பெய்த மழையினால் வெள்ளக்காடாகியுள்ள பொம்மைவெளி

## தண்ணீரில் மிதக்கும் குடிசைகள்

யாழ்ப்பாணம்,ஒக்.9

அண்மையில் பெய்த மழையினால் பொம்மைவெளிப் பிரதேசத்தின் ஜே/87 கிராம சேவகர் பிரிவுக்கு உட்பட்ட 7 குடும்பங்களைச் சேர்ந்த 40 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர். இவர்களுடைய வீடுகளுக்குள் முற்றாக வெள்ளம் உட்புகுந்துள்ளது.

இதனால் இருப்பிட வசதிகளற்ற நிலையில் தாம் ஆதரவற்று ஒஸ்மானியாக் கல்லூரியில் தங்கியுள்ளதாக அவர்கள் தெரிவிக்கின்றனர்.

கடந்த 8 மாதங்களுக்கு முன்னர் இப்பகுதியில் முஸ்லிம் மக்கள் மீளக் குடியமர்த்தப்பட்டனர்.

இதுதொடர்பாக பாதிக்கப்பட்ட குடும்பங்கள் தெரிவித்தவை வருமாறு:

இதுவரைகாலமும் அரச நிறுவனங்களோ, அரச சார்பற்ற நிறுவனங்களோ, மாநகர சபை உறுப்பினர்களோ யாருமே எம்மை வந்து பார்க்கவில்லை. எமக்குத் தேவையான அடிப்படை வசதிகள் எதுவும் பெற்றுத் தரப்படவில்லை. நாம் வெள்ளத்தினால் மோசமாகப் பாதிக்கப்பட்டுள்ளோம். இதுபற்றி பலரிடம் முறையிட்டும் பயன் எதுவும் கிடைக்கவில்லை.



நாம் தங்கியிருக்கும் காணி சின்னப் பள்ளி வாசலுக்குச் சொந்தமானது. இது தாழ்ந்த பகுதி என்பதால் 3 அடி உயரத்துக்கு வெள்ளம் தேங்கி நிற்கிறது. இனி வரப்போகும் மழைகாலத்தில் எமது நிலை மேலும் மோசமாகி விடும். குழந்தைகளுடன் பாடசாலையில் எத்தனை நாள்கள் தங்க முடியும் - என்றனர் அவர்கள்.

அகதிகளுக்கான ஐ.நா தூதரகம் வீடுகளை அமைத்துக் கொடுப்பதாகக் கூறி எமது குடும்ப விவரங்களைப் பதிவு செய்து கொண்டு போனார்கள். ஆனால் இதுவரைக்கும் எந்த நடவடிக்கைகளும் எடுக்கப்படவில்லை.

அன்றாடம் நாம் கூலி வேலையும் இரும்பு வியாபாரமும் செய்து வருகின்றோம். அன்றாட உணவுத் தேவைக்கு மட்டுமே வருமானம் போதுமானதாக உள்ளது.

எனவே குடும்பங்களின் வறுமை நிலையைக் கருத்தில் கொண்டு எமக்குத் தேவையான அடிப்படை வசதிகளான வீடுகள், குடிதண்ணீர், மின்சாரம், மலசலகூட வசதி என்பவற்றை பெற்றுக்கொடுக்க வேண்டும் எனவும் அவர்கள் கோரியுள்ளனர்.

பாடசாலையில் தங்கி இருப்பதால் தொற்று நோய்களுக்கு உள்ளாகும் நிலையும் ஏற்படுவதாக அவர்கள் தெரிவித்துள்ளனர்.

(த-201-313-311)

# அரச அதிகாரிகளுக்கும் இனிப் புதிய வாகனங்கள்

## அமைச்சரவை அனுமதி

கொழும்பு, ஒக்.9

உத்தியோகபூர்வ வாகனங்களைப் பெறுவதற்கு உரித்துடைய அரச அதிகாரிகளுக்குப் புதிதாக வாகனங்களைக் கொள்வனவு செய்ய அரசு தீர்மானித்துள்ளது.

இது தொடர்பாக ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவினால் சமர்ப்பிக்கப்பட்டுள்ள அமைச்சரவைப் பத்திரத்துக்கு அமைச்சரவை அனுமதி வழங்கியுள்ளது.

அரச நிறுவனங்கள் வசமுள்ள வாகனங்களின் எண்ணிக்கை போதுமானதாக இல்லை. உத்தியோகபூர்வ வாகனங்களுக்கு உரித்துடைய அரச அதிகாரிகளுக்கு வாடகை அடிப்படையில் வாகனங்களை அமர்த்திக் கொள்வதற்குச் செலுத்தப்படும் கட்டணத்துக்கு நல்ல நிலையில் வாகனம் ஒன்றைப் பெற இயலாதுள்ளதாக அதிகாரிகள் சுட்டிக்காட்டியுள்ளதை கவனத்தில் கொண்டே அரசு இத் தீர்மானத்தை எடுத்துள்ளது.

ஐந்தாண்டு காலக் குத்தகை அடிப்படையில் இந்த வாகனங்கள் கொள்வனவு செய்யப்படவுள்ளன.

அதற்கமைய, அமைச்சுக்களின் செயலாளர்கள் அல்லது அதற்குச் சமமான பதவி நிலையிலுள்ள அதிகாரிகளுக்கு 50 லட்சம் ரூபா, அமைச்சுக்களின் மேலதிக செயலாளர்கள், பணிப்பாளர் நாயகம், மாவட்டச் செயலாளர்கள் அல்லது அதற்குச் சமமான பதவி நிலையிலுள்ள அதிகாரிகளுக்கு 40 லட்சம் ரூபா, சிரேஷ்ட உதவிச் செயலாளர், பணிப்பாளர் அல்லது அதற்குச் சமமான பதவி நிலையிலுள்ள அதிகாரிகளுக்கு 30 லட்சம் ரூபா, அமைச்சுச் செயலாளர்களின் தொடர்பாடல் செயலாளர் அல்லது அதற்குச் சமமான பதவி நிலையிலுள்ள அதிகாரிகளுக்கு 25 லட்சம் ரூபா பெறுமதியுடைய புதிய வாகனங்களைக் கொள்வனவு செய்வதற்கு நிதியமைச்சு பரிந்துரை செய்துள்ளது.

இவை அரச நிறுவனங்களுக்குக் கொள்வனவு செய்யப்படவுள்ளதால் சுங்கவரி மற்றும் உற்பத்தி வரியிலிருந்தும் விலக்களிக்கப்பட்டுள்ளது.

இவை தவிர, அரச நிறுவனங்களுக்குத் தேவைப்படும் ஏனைய வாகனங்களையும் 'லீஸிங்' அடிப்படையில் கொள்வனவு செய்வதற்கும் அமைச்சரவை அனுமதி வழங்கியுள்ளது. (த-22)

# பிரம்ம குமாரிகள் நிலையத்தில் நாளை விசேட் சொற்பொழிவு

கொழும்பு, ஒக்.9

யாழ்ப்பாணம், நாவலர் வீதியில் உள்ள பிரம்ம குமாரிகள் ராஜயோக நிலையத்தில் நாளை ஞாயிற்றுக் கிழமை இந்தியாவில் இருந்து வருகை தந்துள்ள இவ்வியக்கத்தின் பிரமுகர் சகோதரி பி.கே.உமாமேதா நஞ்சுண்டையா விசேட சொற்பொழிவு நிகழ்த்தவிருக்கிறார்.

இந்தியாவில் திருவண்ணாமலை பிரம்ம குமாரிகள் நிலையத்தைச் சேர்ந்த இவர் 'சுய முகாமைத்துவ தலைமைத்துவம்' எனும் தலைப்பில் உரை நிகழ்த்தவிருக்கிறார்.

# கைத்தொலைபேசி பற்றறி வெடித்தது கண்பார்வையை இழந்தார் சிப்பாய்!

வண்ணை, ஒக்.9

பளை, சுண்டிக்குளம் இராணுவ முகாம் சிப்பாய் ஒருவர் கைத்தொலைபேசியின் பற்றறி வெடித்துச் சிதறியதில் கண்கள் இரண்டும் பார்வை இழந்த நிலையில் யாழ்.போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

இச்சம்பவம் கடந்த மாதம் 29ஆம் திகதி காலை நடைபெற்றது. சம்பவத்தில் குருணாகலையைச் சேர்ந்த பொடிபண்டா விஜயக்கோன் (வயது 20) என்பவரே கண்களில் காயமடைந்தவராவார்.

இது பற்றி மேலும் தெரியவருவதாவது:

கைத்தொலைபேசிக்கு மின் இணைப்பைப் பொருத்திக்கொண்டு தொலைபேசியை இயக்கி உரையாடிக் கொண்டிருக்கையில் பற்றறி வெடித்துச் சிதறியதாகவும் இதனை அடுத்துக் கண்கள் இரண்டும் இரசாயன வீச்சினால் பார்வை இழக்க நேரிட்டதாகவும் மேலும் தெரிவிக்கப்பட்டது. (த-160)

# 76 நிறுவனங்களில் 2,690 கோடி ரூபா சேமலாப நிதியத்திலிருந்து முதலீடு

கொழும்பு, ஒக்.9

ஊழியர் சேமலாபநிதி நிதியத்திலிருந்து இது வரை 2,690 கோடி ரூபா 76 நிறுவனங்களில் முதலீடு செய்யப்பட்டுள்ளதாக தொழிலாளர் தொடர்புகள் மற்றும் பெறுபேறுகளை மேம்படுத்தல் பிரதியமைச்சர் கலாநிதி ஜகத் பாலசூரிய நாடாளுமன்றத்தில் தெரிவித்தார்.

ஊழியர் சேமலாப நிதியத்திலிருந்து மேலும் 68 கோடி 90 லட்சம் ரூபா இலங்கை ஹோட்டல்கள் கூட்டுத்தாபனத்தில் முதலீடு செய்யப்பட்டுள்ளதுடன் மேற்படி முதலீட்டினால் இது வரை 12 கோடி 74 லட்சம் ரூபா இலாபம் கிட்டியுள்ளதாகவும் பிரதியமைச்சர் தெரிவித்தார்.

கொழும்புப் பங்குச்சந்தை மூலமாகக் குறிப்பிட்ட 76 நிறுவனங்களில் நிதித்தொகைகள் முதலீடு செய்யப்பட்டதனால் 2,037 கோடி ரூபா இலாப மீட்ட முடிந்துள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்தார்.

இவ்விதம் முதலீடு செய்யப்பட்டுள்ள நிறுவனங்களுள் அப்பலோ மருத்துவமனை, ஆசிரி மருத்துவமனை, டோர்டன் நிறுவனம், ட்ரான்ஸ் ஏசியா ஹோட்டல், டயலொக் நிறுவனம், கீல்ஸ் நிறுவனம், ஸ்ரீலங்கா ரெலிகொம் நிறுவனம், நவலோகா மருத்துவமனை மற்றும் நெஸ்லே நிறுவனம் ஆகியவையும் உள்ளடங்கியுள்ளன.

(த-22)

## நாளை

| | | |
|---|---|---|
| புரட்டாதி 24 | | 10.10.2010 |
| | | ஞாயிற்றுக்கிழமை |
| திதி: | : | திருதியை |
| | | மு.இ 07.45 வரை |
| நட்சத்திரம் | : | விசாகம் |
| | | பி.இ. 03.49 வரை |
| சுபநேரம் | : | 09.02-10.32 வரை |
| ராகுகாலம் | : | 04.32-06.02 வரை |

## வீடு வாடகைக்குத் தேவை

சிறிய குடும்பம் ஒன்றுக்கு வீடு வாடகைக்குத் தேவை. முழுமையாகவோ அல்லது பகுதியாகவோ கொக்குவில், கோண்டாவில் ஆகிய இடங்களில் விரும்பத்தக்கது. தொடர்பு: 0772487653



## பாராட்டி வாழ்த்துகின்றோம்



யாழ்ப்பாணப் பல்கலைக்கழகப் பட்டமளிப்பு விழாவில் கல்வியியல் முதுமாணி (M.Ed Distinction) பட்டம் பெற்ற எமது பாடசாலையின் ஆசிரியை

திருமதி

**பிரபாலினி வரதராஜன்**

அவர்களுக்கு உள்ளம் நிறைந்த பாராட்டுக்களைத் தெரிவிப்பதோடு மேலும் பல பட்டங்கள் பதவிகளைப் பெற்று உயர்வடைய வாழ்த்து கின்றோம்.

**ஆசிரியர் கழகம்,**

**யா/யாழ்.இந்து மகளிர் ஆரம்பப் பாடசாலை**


## உடுவில் பகுதியில் டெங்கு ஒழிப்புச் செயற்பாடு

வலி.வடக்கு, ஒக். 9

டெங்கு ஒழிப்பு வாரத்தையொட்டி உடுவில் பிரதேச செயலாளர் பிரிவில் சுகாதார வைத்திய அதிகாரி தலைமையிலான குழுவினர் நேரில் சென்று நீர் தேங்கும் இடங்கள், குப்பைகள் தேங்கி வரும் பகுதிகள் ஆகியவற்றை இனம் கண்டு அழிக்கும் நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

இந்தக் குழுவில் உடுவில் பிரதேச சுகா தார வைத்திய அதிகாரி, உடுவில் பிரதேச செயலக உதவிப் பிரதேச செயலாளர், சுன்னாகம் பொலிஸ் அலுவலர்கள், இராணுவத்தினர், உடுவில் பிரதேச சபை சுகாதார பரிசோதகர்கள் ஆகியோர் இணைந்து செயல்பட்டு வருகின்றனர்.

இவர்களுடன் உரிய கிராம அலுவலர்கள், கிராமிய டெங்கு குழு உறுப்பினர்கள், பொதுமக்கள் ஆகியோரும் இணைந்து தமது பகுதிகளில் நுளம்பு பெருகும் இடங்களை இனம் கண்டு அந்த இடங்களில் உள்ள கழிவுப்பொருள்களை தீயிட்டு நிலத்தினுள் புதைத்தும் வருகின்றானர்.

பல இடங்களில் காணிகளை துப்புரவு செய்யாத உரிமையாளர்கள் இந்தக் குழுவினரால் எச்சரிக்கப்பட்டனர்.

(த-86)


## வாசனா சம்பத

உத்தியோகபூர்வ முடிவுகள்

சீட்டிழுப்பு இலக்கம்: 838 திகதி: 07.10.2010

| ஆங்கில எழுத்து | வெற்றி இலக்கங்கள் | | | | போனஸ் இல: |
|---|---|---|---|---|---|
| J | 04 | 16 | 34 | 60 | 26 |

| | கூட்டு | பரிசுத் தொகை | வெற்றி பெற்றோர் |
|---|---|---|---|
| சுப்பர் பரிசு | ஆங்கில எழுத்தும் 4 இலக்கங்களும் சரியாயின் | 20,727,407.00 | - |
| 1ம் பரிசு | 4 இலக்கங்கள் சரியாயின் | 1,000,000.00 | 01 |
| 2ம் பரிசு | 3 இலக்கங்களும் போனஸ் இலக்கமும் சரியாயின் | 100,000.00 | 04 |
| 3ம் பரிசு | 3 இலக்கங்கள் மட்டும் சரியாயின் | 2,000.00 | 318 |
| 4ம் பரிசு | 2 இலக்கங்கள் மட்டும் சரியாயின் | 100.00 | 14720 |
| 5ம் பரிசு | 1 இலக்கம் மட்டும் சரியாயின் | 20.00 | 207487 |
| 6ம் பரிசு | ஆங்கில எழுத்து மட்டும் சரியாயின் | 20.00 | 30892 |

இவ்வாரம் வெல்லப்பட்டுள்ள மொத்த பரிசுத் தொகை ரூ.

**8,275,580.00**

சுப்பர் பரிசுத்தொகை அடுத்த வியாழக்கிழமை

**21,069,400.50**

ஐந்து இலட்சம் அல்லது அதற்குக் கூடிய தொகைக்கான பரிசு அரசாங்க வரிச் சட்டதிட்டங்களுக்கு உட்பட்டது. பரிசைப் பெறுவதற்கு தேசிய அடையாள அட்டை கட்டாயமாக்கப்பட்டுள்ளது.

வெற்றி பெறும் டிக்கட்டுகள் சீட்டிழுப்புத் திகதியிலிருந்து 6 மாதங்கள் மட்டுமே செல்லுபடியாகும்.

தேசிய லொத்தர் சபை

234/2, காலி வீதி, கொழும்பு 03.
தொலைபேசி: 2470662, 2470663
அவசர தேவைக்கு: 2473360, 2433631
இணையம்: www.nlb.lk



# வெற்றிடங்கள்

## Tokyo Cement Company

### Ready Mixed Concrete Plant

*Mirusuvil*

டோக்கியோ சிமெந்து நிறுவனம் இலங்கையில் பெருமை மிக்கதொரு ஸ்தாபனம். வெளிநாட்டு ஒத்துழைப்புடன் செயற்பட்டுவரும் இந்த நிறுவனம் இலங்கையின் கண்ணியம் மிக்க முதற்தர சிமெந்து தயாரிப்பு மற்றும் இறக்குமதி நிறுவனங்களில் ஒன்று.

எமது நிறுவனத்தில் பின்வரும் பதவிகளுக்குப் பொருத்தமான நபர்கள் தேவையாக உள்ளனர்.

**பாரஊர்தி சாரதி/தொடர் இழுவை இயக்குநர்**

**(Heavy Vehicle Driver/ Wheel Loader Operator)**

விண்ணப்பதாரி 30 வயதுக்குக் கீழ்ப்பட்டவராகவும் சிறந்த தேகாரோக்கியம் உள்ளவராகவும் இருக்கவேண்டும். ஆயத்த சிமெந்துக் கலவை காவும் வாகனத்தைச் செலுத்தியதற்கான 2 வருட அனுபவம் இருப்பது மேலதிகத் தகைமையாகக் கருதப்படும்.

**தரக் கட்டுப்பாட்டு உதவியாளர்**

விண்ணப்பதாரி 25 வயதுக்குக் குறைந்தவராக இருக்க வேண்டும். க.பொ.த உயர்தரத்தில் விஞ்ஞான பாடத்தில் சித்தி பெற்றவர்களே இதற்குப் பொருத்தமானவர்கள். கணனி அறிவு அவசியம்.

**கணக்கீட்டு உதவியாளர்/கணக்கு உதவியாளர்**

விண்ணப்பதாரி 25 வயதுக்குக் குறைந்தவராக இருக்க வேண்டும். க.பொ.த உயர்தரத்தில் வர்த்தக பாடத்தில் சித்தி பெற்றவர்களே இதற்குப் பொருத்தமானவர்கள்.

ஆங்கிலத்தில் தொடர்பாடல் செய்யக்கூடியவர்களாகவும் இருக்கவேண்டும்.

கணனி அறிவு அவசியம்

**பாரஊர்தி உதவியாளர்**

மிக உறுதியான சிறந்த தேகாரோக்கியம் உள்ள 25 வயதுக்குக் குறைந்தவர்கள் இப்பதவிக்குப் பொருத்தமானவர்கள்.

அனைத்து விண்ணப்பங்களிலும் பெயர், முகவரி, உறவினர்கள் அல்லாத சிபாரிசு செய்யக்கூடிய இருவரின் பெயர்கள் மற்றும் உரிய ஆவணங்களுடன் நேரில் வரவும்.

எதிர்வரும்11 ஆம் திகதி காலை 8.30 மணி முதல் பி.ப. 12.30 மணிவரை நேர்முகப் பரீட்சை நடைபெறும்.

**சென்.அன்ரனிஸ் ஹாட்வெயர்(வ.து)**

489, நாவலர் வீதி, யாழ்ப்பாணம்.
தொ.பே: 0773070121.



# STUDY IN UK

**ADMISSIONS NOW OPEN FOR OCTOBER & JANUARY**




லண்டனில் உயர்கல்வி கற்பது தொடர்பான இலவச ஆலோசனைகளுடன் IELTS இன்றி ஒரே நாளில் அனுமதிகள் பெற்றுத்தரப்படும்.

October மற்றும் January / February Intake ற்கான அனுமதிகள் தற்போது ஏற்றுக்கொள்ளப்படுவதுடன் பல வருடம் அனுபவம் வாய்ந்த சட்டத்தரணிகளின் உதவியுடன் உங்களது விசா தேவைகள் பூர்த்தி செய்யப்படும்.

தலைநகரில் அதி கூடுதலான விசாக்களை பெற்றுக்கொடுத்துவரும் எமது நிறுவனத்துடன் நீங்களும் இணையுங்கள்.

| காலம் | 12th October 2010 (Tuesday) - 2.30 pm |
|---|---|
| இடம் | Exponet Head office-Colombo |

1) UKBA Highly Trusted College
2) IELTS தேவையில்லை
3) 4 வருட visa உத்தரவாதம்
4) 20 மணித்தியாலம் வேலை செய்யும் வசதி (per week)
5) அனைத்து கட்டணங்களும் After Visa
6) மறைமுக கட்டணங்கள் எதுவும் இல்லை
7) ஒரு மாதத்தில் பயணம்

பதிவுகளுக்கு **COLOMBO - 0117 555511, JAFFNA - 021 7538395**
**Hotline - 0117 555514**

October/January/February மாதங்களுக்கான அனுமதிகள் தற்பொழுது ஏற்றுக் கொள்ளப்படுகின்றன.2000 க்கு மேற்பட்ட மாணவர்களை UK யில் உள்ள பல்கலைக்கழகங்கள் கல்லூரிகளுக்கு அனுப்பி சாதனை புரிந்த எமது நிறுவனத்துடன் நீங்களும் இணையுங்கள்.

EXPONET
Overseas Consultants

Head office -
379-1/2, Galle Road,
Colombo 6, Sri Lanka.
Tel:0714150995

Jaffna Branch -
102 2/2, Navalar Road,
Jaffna.

London Branch -
No:56,The Gradens
Harrow Middlessex
Ha1 4EY,UK

www.expogroup.lk Email:nimal@expogroup.lk

# யாழ்ப்பாணம் வரும் செஞ்சிலுவைக் குழுவினர் மீளக்குடியமர்ந்த மக்களைப் பார்வையிடுவர்

யாழ்ப்பாணம்,ஒக்.9

செஞ்சிலுவைச் சர்வதேசக் குழுவின் பிரதிநிதிகள் எதிர்வரும் 18 ஆம் திகதி யாழ்ப்பாணத்துக்கு வருகை தந்து வடமராட்சியில் மீள்குடியேற்றம் இடம் பெற்ற பகுதிகளைப் பார்வையிடவுள்ளதாக இலங்கை செஞ்சிலுவைச் சங்க யாழ். பிரிவின் செயலாளர் எஸ். பாலகிருஷ்ணன் தெரிவீத்தார்.

இவ்விடயம் தொடர்பாக இவர் தெரிவித்தவை வருமாறு:

எதிர்வரும் 21 ஆம் திகதி வரை மேற்படி திட்டங்களைப் பார்வையிடும் செஞ்சிலுவைச் சர்வதேசக் குழுவின் பிரதிநிதிகள் வடமராட்சி மீள்குடிமயர்ந்த மக்களின் குடிதண்ணீர் பிரச்சினைக்குத் தீர்வு காண்பதற்காக 1.6 மில்லியன் டொலர் நிதிச் செலவில் குடிதண்ணீர் விநியோகத் திட்டத்தை தேசிய நீர் வழங்கல் வடிகாலமைப்புச் சபையுடன் இணைந்து செயற்படுத்தவுள்ளமை தொடர்பாகவும் ஆராய்வர்.

அத்துடன் அவுஸ்திரேலியா செஞ்சிலுவைச் சங்கத்தால் வடமராட்சி கிழக்குப் பகுதியில் மீள் குடியமர்ந்தவர்களுக்கு வழங்குவதற்கெனக் கட்டப்பட்டு இடைநிறுத்தப்பட்டுள்ள வீடமைப்புத் திட்டத்தை தொடர்வதற்கான நடவடிக்கைகளையும் மேற்கொள்வார்கள் எனவும் யாழ். பிரிவுச் செயலாளர் மேலும் தெரிவித்தார். (த-201-7)

# ஆக்கத்திறனும் அர்ப்பணிப்பும் நிறைந்த நாளைய புதல்வர்களாக எழுந்திடுங்கள்

## பட்டமளிப்பு விழாவில் துணைவேந்தர் உரை

யாழ்ப்பாணம்,ஒக்.9

அறிவின் பயனையும் மனதின் செம்மையையும், சமூகத்துக் காக்கிடுங்கள் ஆக்கத்திறனும் அர்ப் பணிப்பும்மிக்க நாளைய புதல்வர்களாக எழுந்திடுங்கள். இவ்வாறு தெரிவித்தார் யாழ். பல்கலைக்கழகத் துணைவேந்தர் பேராசிரியர் நா.சண்முகலிங்கன்.

கடந்த புதன்கிழமை யாழ்ப்பாணம் பல்கலைக்கழகத்தில் நடைபெற்ற 26 ஆவது பட்டமளிப்பு விழாவில் நிகழ்த்திய வாழ்த்துரையில் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் தனது வாழ்த்துரையில் மேலும் கூறியவை வருமாறு:

பட்டமளிப்பு என்பது அறிவின் சாதனைகளைக் கொண்டாடும் நிகழ்வாகும். பல்கலைக்கழக பாரம்பரியத்தின் ஒரு நிகழ்வாக அது அமைந்துள்ளது. நீண்ட இடைவெளிக்குப் பின் இவ்வருடம் தொடக்கத்தில் மூவாயிரத்துக்கும் அதிகமான மாணவர்களின் பட்டமளிப்பை காணக் கூடியதாகவுள்ளது. மீண்டும் இந் நாளில் எல்லோரும் கூடுகின்றோம்.

இன்றைய நாளில் எங்களது கல்வி மேம்பாட்டுக்கும் பண்பாட்டின் மேன்மைக்குமாக உழைத்த சான்றோரைக் கௌரவிக்கும் பெருமையும் எமக்குரியதாகும்.

இன்றைய நாள் பட்டம் பெறும் மாணவர்களாகிய உங்கள் வாழ்வின் புதிய அத்தியாயத்தின் தொடக்கமாகும்.நாம் வரித்துக் கொண்ட உயரிய இலக்குகளையும் கனவுகளையும் நனவாக்கும் கலைப்பணி உங்களைச் சார்ந்ததாகும் - என்றார் அவர். (201)

# யாழ்.– கொழும்பு தபால் பஸ் சேவை; அடுத்த மாதம் ஆரம்பிக்க நடவடிக்கை

யாழ்ப்பாணம்,ஒக்.9

யாழ்ப்பாணத்துக்கும் கொழும்புக்கும் இடையிலான தபால் பஸ் சேவை எதிர்வரும் நவம்பர் மாதம் ஆரம்பமாகும் என வடமாகாண பிரதி அஞ்சல் மா அதிபர் வி.குமரகுரு தெரிவித்தார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில்:

தபால் மா அதிபர் எம்.கே.திஸநாயக்காவின் ஏற்பாட்டில் இந்த தபால் பஸ்சேவையை உடனடியாக ஆரம்பிப்பதற்கு ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. இதற்கென இரண்டு புதிய பஸ்களை தபால் திணைக்களம் வழங்கவுள்ளது.

மேற்படி தபால் சேவை பஸ்சில் பயணிகள் சேவையும் இடம் பெறவுள்ளது. தபால் சேவையுடன் பயணிகள் சேவையையும் நடத்துவதற்கு முன்னோடியாக வவுனியா அஞ்சல் நிலைய வளாகத்தில் பயணிகளுக்கான அடிப்படைத் தேவைகளான மலசலகூடம் மற்றும் வசதிகள் ஏற்படுத்தும் பணிகள் நடைபெற்று வருகின்றன.

பயணிகளுக்கான மேற்படி அத்தியாவசிய பணிகள் விரைவாக நிறைவுறும் பட்சத்தில் தபால் பஸ்சேவை உடனடியாக ஆரம்பித்து வைக்கப்படும் என்றும் பிரதி அஞ்சல் மா அதிபர் குமரகுரு மேலும் தெரிவித்தார். (201-26)

# பொலிஸாரின் நடமாடும் சேவை

சங்கானை,ஒக்.9

வட்டுக்கோட்டை பொலிஸாரின் நடமாடும் சேவை இன்று சனிக்கிழமை காலை 8 மணி தொடக்கம் பி.ப 2.30 மணி வரை வட்டுக்கோட்டை இந்துக் கல்லூரியில் நடைபெறவுள்ளது.

இச்சேவையில் தொலைந்த, சேதமுற்ற புதிதாக தேசிய அடையாள அட்டையைப் பெறுவதற்குரிய சேவைகள் இடம்பெறவுள்ளன.

அடையாள அட்டை பெறுவோர் தமது 3 நிழற்படமும் கிராம சேவகரால் உறுதிப்படுத்தப்பட்ட கடிதமும் , பிறப்புச் சான்றிதழ், திருமணச் சான்றிதழ் போன்ற ஆவணங்களையும் கொண்டு வருமாறு கேட்கப்பட்டுள்ளனர்.

இதேவேளை மேற்படி பொலிஸ் பிரிவுக்குட்பட்ட வறுமைக் கோட்டின் கீழ் உள்ள 10குடும்பங்கள் இனங்காணப்பட்டு இவர்களுக்கு உலர் உணவுப் பொதிகளும் மேலும் 25 பேருக்கு தென்னங்கன்றுகளும் பொலிஸாரினால் இந்நடமாடும் சேவையில் வழங்கப்படவுள்ளன. (த-201-29)

# மானிப்பாய் கூட்டுறவுச் சங்கத்தில் அத்தியாவசியப் பொருள்கள் இல்லை

சண்டிலிப்பாய்,ஒக்.9

மானிப்பாய் பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்தில் கடந்த ஒரு வார காலமாக மா, சீனி, பால்மா, மண்ணெண்ணெய் போன்ற அத்தியாவசியப் பொருள்கள் உட்படப் பல பொருள்கள் முடிவடைந்துவிட்டன. இதனால் சங்கக் கிளைகள் வெறிச் சோடிக் காணப்படுவதுடன் வியாபாரமும் மந்த நிலையிலுள்ளது.

மேற்படி சங்கத்தில் ஏற்பட்ட நிதி பற்றாக்குறை காரணமாக மக்களுக்குத் தேவையான அத்தியாவசியப் பொருள்களைக் கொள்முதல் செய்ய முடியாத நிலை ஏற்பட்டுள்ளது. பொருள்களை வாங்குவதற்காகச் சங்கக் கிளைகளுக்குச் செல்லும் மக்களுக்கு இல்லை என்ற பதில் கிடைப்பதினால் அவர்கள் வேறு தனியார் கடைகளை நாடிச் செல்கின்றார்கள். (த-115)

குடாநாட்டின் பிரதேசச் செய்திகள்



யாழ். மாவட்ட சிகை ஒப்பனையாளர் சங்கத்தின் வடமராட்சிக் கிளை அலுவலகத் திறப்பு விழா நெல்லியடி பழைய சந்தை மேல் மாடியில் நடைபெற்ற போது சிறப்பு விருந்தினராகக் கலந்து கொண்ட நெல்லியடி பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி கே. எம்.திஸ்ஸகாங்கரு உரையாற்றுவதையும் கரவெட்டிப் பிரதேச செயலக தலைமைக் கிராம அலுவலர் வீ. சண்முகநாதன், பிரதம விருந்தினராகக் கலந்துகொண்ட பிரதேச செயலர் எஸ். சத்தியசீலன், வடமராட்சிக் கிளைத் தலைவர் கே.வேணுகுமார் ஆகியோர் அமர்ந்திருப்பதையும் படத்தில் காணலாம். (படம்: கர்ணன்)

# சுன்னாகத்தில் சமுர்த்தி வங்கியை பதம் பார்த்தது திருடர் கோஷ்டி

## குப்பிளான் வீடொன்றிலும் கொள்ளை

யாழ்ப்பாணம்,ஒக்.9

சுன்னாகம் சமுர்த்தி வங்கி கடந்த புதன்கிழமை திருடர்களினால் உடைக்கப்பட்டுள்ளது.

இச்சம்பவம் தொடர்பாக தெரிய வருவதாவது:

வங்கியின் கூரைச் சீற்றை கழற்றி உள் நுழைந்த திருடர்கள் அங்குள்ள அறைகளை உடைத்து தேடுதல் நடவடிக்கையில் ஈடுபட்டுள்ள போதிலும் பெறுமதியான பொருள்கள் எவையும் திருடர்களுக்குக் கிடைக்கவில்லை.

வங்கியில் இருந்த கணக்கிடும் பொறி, கல்குலேட்டர் இரண்டு மற்றும் சிறிய வானொலிப் பெட்டி என்பவற்றை எடுத்துக் கொண்டு வங்கியின் பின் கதவைத் திறந்து வெளியேறிச் சென்றுள்ளனர்.

மறுநாள் காலையில் கடமைக்கு வந்த ஊழியர்கள் மேற்படி வங்கி அலுவலகக்கதவு திறக்கப்பட்டு இருப்பதைக் கண்டு சுன்னாகம் பொலிஸாருக்குத் தகவல் வழங்கியுள்ளனர்.

மேற்படி திருட்டுச்சம்பவம் தொடர்பாக சுன்னாகம் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர்.

இதேவேளை- வீட்டுக்காரர் வீட்டினுள் நித்திரையாக இருந்த வேளை வீட்டின் கதவை உடைத்து உள்நுழைந்த திருடர்கள் மிகவும் துணிச்சலான முறையில் சுமார் மூன்று லட்சம் ரூபா பெறுமதியான பணம், நகைகளைக் கொள்ளையடித்துச் சென்றுள்ளனர்.

குப்பிளான் பகுதியில் கடந்த செவ்வாய்க்கிழமை நடைபெற்ற இக்கொள்ளைச் சம்பவம் தொடர்பாகத் தெரியவருவதாவது:

நள்ளிரவு சுமார் ஒரு மணியளவில் வீட்டின் கதவு உடைக்கும் சத்தத்தைக் கேட்டு வீட்டு உரிமையாளர் வெளியே வந்துள்ளார். அந்த நேரம் வெளியே நின்றவர்கள் வீட்டு உரிமையாளர்களைப் பிடித்து மயக்க மருந்தைக் கொடுத்து மயக்கம் அடையச் செய்துள்ளனர்.

தொடர்ந்து வீட்டினுள் சென்ற கொள்ளையர்கள் அங்கிருந்த பணம், மூன்று கையடக்கத் தொலைபேசிகள் மற்றும் நகைகள் என்பவற்றைக் கொள்ளையிட்டுச் சென்றுள்ளார்கள்.

சுமார் இரண்டு மணித்தியாலங்களுக்கு மேல் வீட்டினுள் நின்று பல இடங்களிலும் கொள்ளையர்கள் தேடும் நடவடிக்கையிலும் ஈடுபட்டுவிட்டுச் சென்றுள்ளனர்.

இக்கொள்ளைச் சம்பவம் தொடர்பாக சுன்னாகம் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர். மேற்படி சம்பவத்தில் நான்கு பேர் ஈடுபட்டதாகவும் தெரியவருகின்றது. (201-86)

— புதிய மின்பிறப்பாக்கிகள் மூலம் —

# மண்டைதீவுப் பகுதிக்கு அடுத்த மாதம் மின்சாரம்

யாழ்ப்பாணம்,ஒக்.9

மண்டைதீவுப் பகுதியில் புதிய மின்பிறப்பாக்கிகளைப் பொருத்தி அவற்றின் மூலம் அப்பகுதி மக்களுக்கு அடுத்த மாதம் நடுப்பகுதியில் மின்சாரம் வழங்கும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படவுள்ளதாக மின்சாரசபையின் வடபிராந்திய பிரதிப் பொது முகாமையாளர் என். முத்துரட்ணானந்தம் தெரிவித்துள்ளார்.

மின்சார விநியோகத் திருத்தப் பணிகளுக்காக மின்சார இணைப்புத் தூண்கள், கம்பிகள் இணைக்கப்பட்டுள்ளன.

இதுவரை காலமும் 'சோலர்' மூலம் தமக்குத் தேவையான மின்சாரத்தைப் பெற்று வந்த மக்கள் பெரும் சிரமங்களை எதிர்கொண்டு வருகின்றனர். இதனால் பாடசாலை மாணவர்களின் கல்வி நடவடிக்கைகள் பின் தங்கிய நிலைக்குத் தள்ளப்படுவதாகவும் கூறப்படுகிறது.

தொடர்ச்சியாக இருள் சூழ்ந்து நிலையில் வாழும் இப்பிரதேச மக்கள் கோரிக்கை விடுத்ததை அடுத்தே இந்த நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படவுள்ளன.

மின்சாரத்தைப் பெற விரும்பும் குடும்பங்கள் வேலணைப் பிரதேச மின்சாரத் தொடர்பு நிலையத்துடன் தொடர்பு கொள்ளுமாறும் மட்டுப்படுத்தப்பட்ட இடங்களுக்கு மட்டுமே மின்சாரம் வழங்கப்படும் எனவும் அவர் தெரிவித்துள்ளார். (த-201-313-311)

# கடனடிப்படையில் உழவு இயந்திரம்

தென்மராட்சி கிழக்கு,ஒக்.9

இரண்டு சில்லு உழவு இயந்திரத்தை கடன் அடிப்படையில் பெற்றுக் கொள்வதற்குரிய விண்ணப்பங்களை வரணி இயற்றாலை கமக்காரர் அமைப்பு தனது அமைப்பின் விவசாய அங்கத்தவர்களிடம் இருந்து கோரியுள்ளது.

மேலும் நெற்செய்கைக் காப்புறுதி ஏக்கருக்கு 480 ரூபா எனவும், நெற்செய்கை சார்பில் இலங்கை வங்கி மூலம் 50 ஆயிரம் ரூபா வரை கடனாகப் பெற்றுக் கொள்ளலாம்.

தென்னம்பிள்ளை இலவசமாகத் தேவைப்படுவோர் உடனடியாக தமது விண்ணப்பங்களை சங்கச் செயலாளரிடம் சமர்பிக்குமாறு வரணி இயற்றாலை கமக்காரர் அமைப்பு கேட்டுள்ளது. (த-201-122)

# மீள்குடியமர்வுக் கொடுப்பனவு பெறாதோர் கவனத்துக்கு

தென்மராட்சி ,ஒக்.9

நலன்புரி நிலையங்களிலிருந்து விடுவிக்கப்பட்டு தென்மராட்சிப் பிரதேசத்தில் மீளக் குடியேறிய மக்களுக்கு அகதிகளுக்கான ஐக்கிய நாடுகள் தூதரகத்தால் வழங்கப்பட்ட மீள்குடி யமர்வுக் கொடுப்பனவுத் தொகை யான 20 ஆயிரம் ரூபா நிதி வழங் குவது எதிர்வரும் 15 ஆம் திகதியுடன் நிறுத்தப்படுவதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

பிரதேசத்தில் இதுவரை இக் கொடுப்பனவைப் பெற்றுக் கொள்ளாதவர்கள் தத்தமது பிரிவு கிராம அலுவலரிடம் கடிதம் பெற்று பிரதேச செயலக திட்டமிடல்பிரிவில் பதிவு செய்யுமாறு பிரதேச செயலர் செ.ஸ்ரீநிவாசன் அறிவித்துள்ளார். (த-201-207)

# புராதன காலத்தில் தபால் சேவைக்கு பயன்பட்ட பொருள்கள் பாதுகாக்கப்படும்

## பிரதி அஞ்சல்மா அதிபர் தகவல்



யாழ்ப்பாணம், ஒக்.9

புராதன காலத்தில் தபால் சேவைக்குப் பயன்படுத்தப்பட்ட பொருள்களை ஆவணப்படுத்திக் காட்சிக்கு வைப்பதற்கான நடவடிக்கை களைத் தபால் திணைக்களம் மேற்கொண்டுள்ளது.

தபால் மா அதிபரின் பணிப்புரைக்கமைய புராதன காலத்தில் தபால் சேவைக்குப் பயன்படுத்தப்பட்ட பொருள்கள், வாகனங்கள், போன்றவற்றை வடமாகாணத்தில் தேடி ஒன்று திரட்டுவதற் கான நடவடிக்கை மேற்கொண்டுள்ள தாக வடமாகாண பிரதி அஞ்சல் மா அதிபர் வி.குமரகுரு தெரி வித்தார்.

இது தொடர்பாக அவர் மேலும் கூறியவை வருமாறு:

இவ்வாறு புராதன காலத்தில் தபால் சேவையின் போக்குவரத்துப் பணிக்கு மேற்கொள்ளப்பட்ட பொதி சுமக்கும் திருகை மாட்டு வண்டில் ஒன்று முருங்கன் பிரதேசத்தில் உள்ள தபாலகத்தில் இருந்து யாழ். பிரதம தபாலகத்திற்குக் கொண்டு வரப்பட்டது.

இந்த தபால் வண்டிலின் ஓட்டுநரின் பாதுகாப்பிற்கான கத்திமற்றும்கோடாரி,அரிக்கன்லாம்பு போன்றவையும் இவ்வண்டியில் காணப்படுகின்றன.

முன்னோரினால் பயன்படுத்தப்பட்ட தபால் சேவைக்குரிய பல்வேறு பொருள்களைச் சேகரித்துக் காட்சிப்படுத்துவதற் கான நடவடிக்கைகளை தபால் திணைக்களம் மேற்கொண்டுள்ளது- என்றார் அவர். (த-201-26)

# படுக்கை, மின் விசிறி, உடற்பயிற்சி வசதிகளைக் கோருகிறார் பொன்சேகா

கொழும்பு,ஒக்.9

வெலிக்கடைச் சிறையில் சிறைவாசம் அனுபவித்துவரும் முன்னாள் இராணுவத் தளபதி சரத்பொன்சேகா தமக்குச் சிறையில் படுக்கை வசதி, மின் விசிறி, உடற்பயிற்சிக்கான இயந்திரம் ஆகியவற்றை வழங்குமாறு கேண்டுகோள் விடுத்துள்ளார் எனத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

முன்பு தமக்குக் கீழே பணியாற்றிய கனிஷ்ட உத்தியோகத்தரும், தற்போது சிறைச்சாலைகள் ஆணையாளராகப் பதவி வகிப்பவருமான மேஜர் ஜெனரல் வீ.ஆ.டி.சில்வாவுடனான சந்திப்பின்போதே பொன்சேகா இந்த வேண்டுகோளை விடுத்துள்ளார்.

தாம் வெறுந்தரையில் உட்காரவோ அல்லது படுக்கவோ இயலாத நிலையில் உள்ளதால் தமக்குப் படுக்கை அல்லது அதற்கு ஒப்பான வசதி, மின்விறிசி, உடற் பயிற்சிக்கான இயந்திரம் ஆகியவற்றை வழங்குமாறு பொன்சேகா வேண்டுகோள் விடுத்தார்.

இதற்குப் பதிலளித்த சிறைச்சாலைகள் ஆணையாளர் இந்த வேண்டுகோள் தொடர்பாகத் தாம் அமைச்சருக்கு அறிவிப்பதாகவும், இந்த விடயங்களை விரைவில் கவனிப்பதாகவும் பதிலளித்தார்.

பொன்சேகா இரண்டாவது இராணுவ நீதி மன்றத்தால் 30 மாத சிறைத் தண்டனை விதிக்கப்பட்டு வெலிக்கடைச் சிறைச்சாலையில் சிறைவாசம் அனுபவித்து வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (க)

## 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் வீட்டுக்கிருத்திய அழைப்பும்



தோற்றம்: 1912.07.10

மறைவு: 2010.09.09

**இராசையா சிவகாமி**
**(பாக்கியம்)**

எம் அன்புத் தெய்வமே
எங்கள் நல்வாழ்வுக்காய் உமையுருக்கி
எமக்கொளி தந்தீர் அம்மா
என்றும் உம் ஆத்ம சாந்திக்காக
இறைவனை இறைஞ்சுகின்றோம்

கடந்த 09.09.2010 அன்று சிவபதமடைந்த எமது குடும்பத் தெய்வத்தின் வீட்டுக்கிருத்திய நிகழ்வு இன்று (09.10.2010) சனிக்கிழமை ந.ப.12 மணியளவில் எமது இல்லத்தில் நடைபெறும். இந்நிழ்விலும் தொடர்ந்து இடம்பெறும் மதியபோசனத்திலும் கலந்துகொள்ளுமாறு தங்களை அன்புடன் அழைக்கின்றோம்.

இல.25, கச்சேரி லேன்,
யாழ்ப்பாணம்.

உங்கள் நினைவுடன்:
குடும்பத்தினர்

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



அமரர்
**குழந்தை சின்னையா**

பிறப்பு: 15.01.1925
இறப்பு: 20.09.2009
திதி: துதியை

ஐயா நீங்கள் எங்களை விட்டுப் பிரிந்து
இன்று வருவீர்கள் நாளை வருவீர்கள்
என நினைத்து ஓராண்டு கழிந்ததுவே
ஐயா எத்தனை ஆண்டுகள் சென்றாலும்
உங்கள் நினைவுகளோடு வாழ்வோம்!

54/20, ஆத்திசூடி வீதி,
யாழ்ப்பாணம்.

மனைவி, பிள்ளைகள்.

## மரண அறிவித்தல்

### திருமதி விஜயகுமாரி சற்குணநாதன்

தொல்புரத்தைப் பிறப்பிடமாகவும் தற்போது அவுஸ்திரேலியாவில் வசித்தவருமாகிய திருமதி சற்குணநாதன் விஜயகுமாரி 07.10.2010 (காலை) அவுஸ்திரேலியாவில் காலமானார்.

அன்னார் சங்கானையைச் சேர்ந்தவரும் தற்போது அவுஸ்திரேலியாவில் வசிப்பவருமான நவரத்தினம் சற்குணநாதனின் (நாதன் -Rtd Lake House Printing Manager) அன்பு மனைவியும் இந்து, ஜனன் ஆகியோரின் அன்புத் தாயாரும் காலஞ்சென்ற ஜீவரட்ணம் மற்றும் ஈஸ்வரி தம்பதிகளின் மகளும் காலஞ்சென்றவர்களான நவரட்ணம் - சரஸ்வதி தம்பதிகளின் மருமகளும் சந்திரகுமார், தேவகுமார், ராஜலக்ஷ்மி, ஜெகதா ஆகியோரின் அன்புச் சகோதரியும் சிவராஜேஸ்வரி காலஞ்சென்றவர்களான இலங்கைநாதன் இரத்தினேஸ்வரி மற்றும் சிவனேஸ்வரி, பரமநாதன் (நிறஞ்சனாஸ், சங்கானை), காலஞ்சென்ற ஞானேஸ்வரி ஆகியோரின் அன்பு மைத்துனியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் திங்கட்கிழமை (11.10.2010) அன்று அவுஸ்திரேலியாவில் நடைபெறும்.

தகவல்:
ந.பரமநாதன் (மைத்துனர்), நிறஞ்சனாஸ்,
சரஸ்வதி இல்லம், பொன்னாலை வீதி, சங்கானை
தொ.பே:0213213222 (சங்கானை)
தொ.பே: 0061297494794 (அவுஸ்திரேலியா)

## 30 குளங்கள் துப்புரவு

யாழ்ப்பாணம், ஒக்.9

யாழ்ப்பாணம் மாநகரசபை எல்லைக்குள் அமைந்துள்ள 40 குளங்களில் 30 குளங்கள் துப்புரவு செய்யப்பட்டுள்ளதாக யாழ்.மாநகரசபை வட்டாரங்கள் தெரிவித்தன.

டெங்கு ஒழிப்பு நடவடிக்கையின் முக்கிய அம்சமாக இவை துப்புரவு செய்யப்பட்டுள்ளதாகவும், ஏனைய 10 குளங்களில் சில தூர்ந்துள்ளதாகவும், சில விளையாட்டு மைதானமாகப் பயன்படுத்தப்பட்டு வருவதாகவும் தெரிவிக்கப்பட்டது. (த-7)

## செபமாலை மாதா ஆலய திருவிழா

யாழ்ப்பாணம், ஒக்.9

மூளாய் மாவடி றோட், புனித செபமாலை மாதா ஆலய வருடாந்தத் திருவிழா கடந்த புதன்கிழமை ஆரம்பமாகி நடைபெற்று வருகிறது.

இன்று சனிக்கிழமை மாலை 5 மணிக்கு திருப்பலியும், நற்கருணை வழிபாடும் இடம்பெறும்.

நாளை ஞாயிறு காலை 7 மணிக்கு திருவிழாத் திருப்பலியைத் தொடர்ந்து செபமாலை மாதாவின் திருச்சொரூப பவனியும், ஆசீரும் இடம்பெறும். (201)

## உதவிக் கொடுப்பனவுகள் கிடைக்காதோர் பதிவுசெய்க

யாழ்ப்பாணம், ஒக்.9

யாழ்.மாவட்டத்தில் மீளக் குடியேறிய மக்களில் அகதிகளுக்கான ஐ.நா. தூதரகம் வழங்கிய 20ஆயிரம் ரூபாவையும் நிக்கொட் வழங்கிய 25 ஆயிரம் ரூபாவையும் பெற்றுக்கொள்ளாதவர்களைக் கிராம அலுவலரிடம் பதிவு செய்யுமாறு பொருளாதார அபிவிருத்தி அமைச்சின் வடக்கின் துரித மீட்சித்திட்ட பிரதிப் பணிப்பாளர் ச.குகதாஸ் கேட்டுள்ளார்.

கிராம அலுவலரிடம் பதிவு செய்யும் போது தமது அடையாள அட்டை மற்றும் வங்கிப் புத்தகத்தின் முதற் பக்கத்தின் போட்டோ பிரதியையும் வழங்கி உடனடியாகப் பதிவு செய்யுமாறும், பின்னர் அந்த தகவல்கள் பிரதேச செயலகங்கள் ஊடாக திரட்டப்படும் என்றும் அவர் தெரிவித்தார். (த-15)

## தவறிவிட்டன

16, இராஜேஸ்வரி வீதி, நாயன்மார்கட்டு என்னும் முகவரியைச் சேர்ந்த செல்வராசா இராஜேந்திரன் என்பவரது தே.அ.அட்டை (663290126V), சாரதி அனுமதிப்பத்திரம் என்பன மருதனார்மடம் வங்கிக்கும் இடையில் தவறிவிட்டன. கண்டெடுத்தவர்கள் பின்வரும் தொலைபேசியுடன் தொடர்புகொள்ளவும். தொ.பே:- 0779046301

## வீட்டுடன் காணி விற்பனைக்கு

சீரணிச் சந்தி, ஐந்துகண் மதவடியில், பெற்றோல் நிலையத்துக்கு அருகில், சகல வசதிகளுடன் கூடிய 7 ¾ பரப்பு, வீட்டுடன் காணி விற்பனைக்குண்டு. சனி, ஞாயிறு தினங்களில் நேரில் பார்வை இடலாம்.

தொடர்பு:0212223558,
0774480673 (104391)

## ஜனஜய லொத்தர்

உத்தியோகப்பூர்வ முடிவுகள்

வாரம் 166 — சீட்டிழுப்புத் திகதி 07.10.2010

வெற்றி இலக்கங்கள்: 17 18 21 54 — சுப்பர் இலக்கம்: 03

சுப்பர் பரிசுப்பொதி — ரூ. 5,906,000/=

| வெற்றி இல. | வெற்றியாளர் எண்ணிக்கை | பரிசுத் தொகை | மொத்த பரிசுத் தொகை |
|---|---|---|---|
| சுப்பர் இலக்கம் தவிர்ந்த ஏதேனும் 1 இலக்கத்துக்கும் | 61326 | ரூ. 20/= | ரூ. 1,226,520/= |
| சுப்பர் இலக்கத்துடன் ஏதேனும் 1 இலக்கத்துக்கும் | 5633 | ரூ. 40/= | ரூ. 225,320/= |
| சுப்பர் இலக்கம் தவிர்ந்த ஏதேனும் 2 இலக்கங்களுக்கும் | 4671 | ரூ. 100/= | ரூ. 467,100/= |
| சுப்பர் இலக்கத்துடன் ஏதேனும் 2 இலக்கங்களுக்கும் | 407 | ரூ. 200/= | ரூ. 81,400/= |
| சுப்பர் இலக்கம் தவிர்ந்த ஏதேனும் 3 இலக்கங்களுக்கும் | 98 | ரூ. 1,500/= | ரூ. 147,000/= |
| சுப்பர் இலக்கத்துடன் ஏதேனும் 3 இலக்கங்களுக்கும் | 10 | ரூ. 3,000/= | ரூ. 30,000/= |
| சுப்பர் இலக்கம் தவிர்ந்த ஏதேனும் 4 இலக்கங்களுக்கும் | - | ரூ. 1,000,000/= | |
| சுப்பர் இலக்கத்துடன் ஏதேனும் 4 இலக்கங்களுக்கும் | | ரூ. 5,906,000/= | |
| மொத்த எண்ணிக்கை | 72145 | | ரூ. 2,177,340/= |

வியாழக்கிழமை சுப்பர் பரிசுப்பொதி ரூ. 6,092,180/= உட்பட வரிவிலக்கற்ற புதிய மோட்டார் வாகனமும் அதன் மிகுதிப்பணமும்

வளமான வாழ்விற்கு அபிவிருத்தி லொத்தர்

அபிவிருத்தி லொத்தர் சபை
356, கலாநிதி கொல்வின் ஆர். டி சில்வா மாவத்தை, யூனியன் பிளேஸ், கொழும்பு 02
தொலைபேசி: 2 338 546 - 47 தொலைநகல்: 2 333 545
Website: www.dlb.lk

## 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும் வீட்டுக்கிருத்திய அழைப்பும்



தோற்றம்: 1973.09.05

மறைவு: 2010.09.09

**யதகுலசிங்கம் வைகுந்தன்**

வாழும் தருணத்தில் உன்னை வழி தவறவிட்டோம் வைகுந்தா
விழியிழந்து விட்டோம் உனை இழந்து குலைந்து கிடக்கிறது
நீ கட்டிய கூடு! பனையென நிமிர்ந்து நின்ற வீடு
தனித்து நின்று தொழில்புரியும்
தனித்துவம் கொண்ட உன்னை தனித்தெறிய
நெஞ்சு தவித் தெரிந்தோம் நண்பா
உன் இன்னுயிர் கொடுத்தோ- இங்கு
இன்னுமோர் உயிர் கொடுத்தாய்
கடைவீதியில் உனைத் தொலைத்து
கருவீதியில் கண்டெடுத்தோம்
இன்னொரு பிறப்பாய் இங்கிருக்க
உன்னிழப்பின் கண்ணீர் துடைப்போம்.

கடந்த 09.09.2010 அன்று இறைபதம் அடைந்த எம் அன்புத் தெய்வத்தின் மரணச்செய்திகேட்டு நேரடியாகவும் தொலைபேசியிலும் ஆறுதல் தெரிவித்தோருக்கும் மற்றும் மலர்வளையம் சாத்தியோருக்கும் கண்ணீர் அஞ்சலி பிரசுரம் வெளியிட்டோருக்கும் நினைவுமலர் புத்தகம் அச்சடித்து தந்த மதிகலர் பிறிண்டர்ஸ்க்கும் மற்றும் உற்றார், உறவினர்,நண்பர்கள், அயலவர்கள் அனைவருக்கும் எம் மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றோம். இன்று (09.10.2010) சனிக்கிழமை மு.ப.10 மணியளவில் எமது இல்லத்தில் நடைபெறும் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் தொடர்ந்து இடம்பெறும் மதியபோசனத்திலும் கலந்துகொள்ளுமாறு அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

இதனைத் தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக்கொள்ளவும்.

நாவலடி லேன், கொக்குவில் மேற்கு,
கொக்குவில்.

என்றும் நினைவில்:
குடும்பத்தினர்.

## மரண அறிவித்தல்



### சுப்பிரமணியம் பத்மசுதன்

திருநெல்வேலி, கலாசாலை வீதியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட சுப்பிரமணியம் பத்மசுதன் நேற்று (08.10.2010) வெள்ளிக்கிழமை காலை 9 மணிக்கு இறைபதம் அடைந்து விட்டார்.

அன்னார் சுப்பிரமணியம்- பாக்கியலட்சுமி தம்பதியரின் அன்பு மகனும் சுதன் (யாழ்.பல்கலைக்கழகம்), அச்சுதன் (பலாலி ஆசிரியர் பயிற்சிக் கலாசாலை), யோகராசா (யா/முத்துத்தம்பி மகாவித்தியாலயம்), கோகுலசுதன் (நல்லூர் பிரதேச சபை) ஆகியோரின் அன்புச் சகோதரனும் தயாநந்தி, மோகனராணி, தேவகி (யா/முத்துத்தம்பி ம.வித்தி.) ஆகியோரின் மைத்துனரும் லக்ஷாயினி, மதுஷன், சரண்யன், பிரதாயினி ஆகியோரின் பெரியப்பாவுமாவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் நேற்று (08.10.2010) வெள்ளிக்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் திருநெல்வேலி இந்து மயானத்தில் தகனஞ்செய்யப்பட்டது. இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

கலாசாலை வீதி,
திருநெல்வேலி வடக்கு, திருநெல்வேலி. (104386)

தகவல்:
குடும்பத்தினர்.

# பிரச்சினைக்குத் தீர்வு மதுவா?

விஞ்ஞான வளர்ச்சியில் பலதரப்பட்ட கண்டு பிடிப்புக்கள் நடைபெற்றுக் கொண்டு இருக்கின்றன. இவை எம்மை ஆச்சரியப்படுத்தும் நிகழ்வுகளாய் உள்ளன. இது எப்படி சாத்தியமாகும் என்ற கேள்விகள் மனதில் எழாமலில்லை, மனிதனுக்கு ஏற்படுகின்ற பலவகையான நோய்களுக்கும், அந்த நோய்கள் எந்த வகையைச் சார்ந்தது என்பதையும், இப்போது என்ன நிலையில் உள்ளதென் பதையும் அறியப் பலதரப்பட்ட கருவிகள் நடைமுறையில் உள்ளன.



மனிதனுக்கு ஏற்படுகின்ற உடல் நோய்களும் உள நோய்களும், குணப்படுத்துவதற்கான மருந்து வகைகள் கணிசமான அளவு பாவனையில் உள்ளன. இதில் உள நோய் என்பது 'மனம்' என்று சொல்லப்படுகின்ற, மனதோடு வேலை செய்கிற 'சமாச்சாரமாகும்' மனதை எப்படி பயன் படுத்துவது? செயல்பாடு 'கூடினாலும் பிரச்சினை, குறைந்தாலும் பிரச்சினை, குறைப்பது எப்போது? கூட்டுவது எப்போது? எப்போதும் 'மனதை ஒரு சீரான வேகத்தில் தழும்பாமல், தடம் புரளாமல் வைத்திருப்பது எவ்வாறு, முடியும்? மனிதர்களுக்கு உணவு,உடை, உறையுள் இவை முக்கியமானது போன்று 'மனதும் முக்கியமானது. மனதை 'அலைய விடாமல் குழப்படி செய்ய விடாமல் கட்டுப் பாடாக வைத் திருப்பதற்கு நமது மூதாதையர்கள், பலவகை அறிவு சார்ந்த விடயங்களை நமக்குச் சொல்லி உள்ளனர். அவை புத்தக வடிவில் தந்துள் ளார்கள்.

இப்போதும் மனிதன் 'மனம் போனபோக்கில் போகாமல் அதனை கட்டுப் படுத்தி நல்வாழ்வு வாழ கோயில் திருவிழக் காலங்களில் நன்நெறிப் புராணங் கள் சொற்பொழிவுகளாக சொல்லப்படுகின்றன. நாமும் கிடைக்கும் தருணங் களில் அவற்றினை கேட்டுக்கொண்டுள்ளதாக இருக்கின்றோம்.

சரி விடயத்திற்கு வருவோம். ஒரு குறிப்பிட்ட காலப் பகுதியில் நடந்த தற் கொலைச் சம்பவங்கள், இயற்கை மரணங்கள், குடிப்பவர்கள் தொகை, குடிசன மதிப்பீடு என இப்படியான பல விடயங்களை, தரவுகள் பெறு வதன் மூலம் அவற்றின் பெறுமானங்களைஅறிந்துகொள்ளலாம். மனிதமனங்கள் எவ்வளவு தூரம் நல்ல நிலையில் உள்ள, முன்பு இருந்ததைவிட இப்போது எவ்வளவு தூரம் மாற்றம் பெற்றுவிட்டன என் பதை நாம் எப்படி அறிந்து கொள்ள முடியும்.

அதாவது அளவீடுகள், கருவிகள் உள்ளனவா? நாம் எப்படி இதனை அறிந்து கொள்கிறோம். ஒரு மனிதனது செய்கை நடவடிக்கை மூலமே அறிய முடியும். 'சே.......நல்ல மனுசனப்பா... கோபமே வராது. எப்பவும் போய் கதைக்கலாம்'

'அந்தாளோட கதைக்க நான் வரேல்ல.. கடவுளே....மனுசன் கதைக்கப் பிடிச்சால் விடாது'.

மனிதர்களுக்கு ஒவ்வாத, முரண்பாடான வழமையான நடந்தைக்கு மாறன செயல்களில் ஒருவர் ஈடுபட்டால் அவரை வெறுத்து ஒதுக்கிவைக்க நாம் தயங்குவதில்லை. இப்போது இந்தக் காலகட்டத்தில் நாம் யாரை நம்புவது என்ற கேள்வி எல்லோர் மனதிலும் எழுந்து நிற்கின்றது.

எம்மை சுற்றி நடக்கும் சம்பவங்கள் அதிர்ச்சியடைய வைக்கின்றன. எம்மைப் பலவகையிலும் குழப்புகின்றன. திகைக்க வைக்கின்றன.

யாரிலும் நம்பிக்கை வைக்க மனம் பயப்படுகின்றது. நிலைகொள்ளாமல் தவிக்கின்றது. தனது பாதுகாப் பிற்கு ஒளித்து கொள்ள இடம் தேடுகின்றது. தன் நிலை குறித்த யோசிக்கின்றது.

'இவர்கள் எனக்கெதிராக செயல்படுகிறார்கள்.'

'இவன் அடிக்கடி வீடுவருவதைப்பார்க்க எனக்கு சந்தேகமாக இருக்கிறது.' 'நான் நல்லா இருக்கிறது மற்ற ஆக்களுக்கு பிடிக்காது. எரிச்சல் பொறாமை படுகினம்.'

யுத்தங்கள் தொடர்ச்சியாய் தந்த இடம்பெயர்வுகள், இழப்புக்கள், துயரங்கள் எல்லாம் எமது மனதைக் குத்திக் குதறிக் காயப்படுத்திவிட்டன. மனக் காயங்கள் ஆறுவது என்பது உடனடியாக நடைபெறக்கூடிய விடயம் அல்ல அதற்கு தகுந்தவழிகாட்டலும்மன அமைதிக்கானசிகிச்சைமுறையும்தேவைப்படும்.

இந்த வகை உதவிதேவைப்படுபவர்கள் யாழ்-குடாநாட்டில்இத்துறைசார்ந்த உளவைத்திய நிபுணரின் ஆலோசனைப்படி சிகிச்சை பெற்றுவரு கின்றார்கள்

ஆனால் இந்த வகை மனக் குழப்பத்திற்கு, சாந்தமடையச் செய்ய தீர்வு காணச்செய்ய சிலரின் தவறான வழி காட்டுதலாலோ அல்லது தமது சுயதேடுதலாலோ யாராவது மது மற்று போதைப் பழக்க வழக்கங்களை கையில் எடுத்திர்களாயின்...

அதனை கைவிட்டு விடுங்கள் அது தவறானது. போதை நோயை குணமாக்காது. நல்ல பாதை நோயைக் குணமாக்கு சற்று... இன்றே சிந்தியுங்கள்...

தொல்புரம் சி.கதிர்காமநாதன்




# உள்ளேயொன்று வெளியே வேறொன்று

என்ன தலையங்கத்தைப் பார்த்தவுடன் இப்பவெல்லாம் யாழ்ப்பாணத்தில் இப்பிடித்தானே நடக்குது என்று நீங்கள் நினைக்கிறீர்கள்.

நான் சொல்லப் போற விடயம் சாதாரண இடத்தில் நடந்ததில்லை. எல்லாக் கலைகளும் கற்றுத் தேறும்.... அங்கதான்.

அன்று யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் 26 ஆவது பட்டமளிப்பு விழா.... ஆஹா... அந்த விழா தானே இப்ப பெரியதொரு பாரம்பரிய திருவிழாவாக மாறிவிட்டது.

பாராட்டி வாழ்த்துக்கள், வீட்டில் விருந்துபசாரம் அப்பாடா... சொல்லி வேலையில்லை ஒரே கொண்டாட்டம் தான்.


அந்த விழாவிற்கு... உறவினர் ஒருவரின் அழைப்பின், பேரில் நானும் சென்றேன்.

வீதியின் இரு மருங்கிலும் பலரக வாகனங்கள் அணிவகுத்து நின்றன. பல்கலைக்கழக வளாகத்தில் கறுப்பு நிற சிறகு விரித்தவர்கள் போட்டோ காரனை அங்குமிங்குமாக அலைக்கழித்துக் கொண்டிருந்தார்கள்.

இப்பவெல்லாம் உரிமையாளர் பார்த்துக் கொண்டிருக்க மோட்டார் சைக்கிள் மற்றும் சைக்கிள்களைத் திருடிக் கொண்டு போகின்றார்கள் என்று நினைத்தபடி மோட்டார் சைக்கிளை பாதுகாப்பு நிலையத்தில் விடுவோம் என்று... அந் நிலையத்திற்குள் விட்டாச்சு.

தம்பி 'ஹெல்மட்' கிடக்குமா? ஓம் அண்ணை நீங்கள் பயப்படாமல் போய் வாருங்கள் என்றுகூறிவிட்டு சைக்கிள் ரிக்கற்றைத் தந்தார் ஒருவர்.

அதில் பாதுகாப்புக் கட்டணம் 2 ரூபா என்றிருந்தது. எவ்வளவு குறைந்த கட்டணத்தில் இத்தகைய சேவை புரிகிறார்கள் என்றாலும் படிச்சவர்கள், படிச்சவர்கள்தான் என்று எனக்குள்ளே அவர்களை மெச்சிக் கொண்டு அங்கிருந்து புறப்பட்டேன் 'அண்ணை காசு தந்திட்டு போங்கோ' சில்லறைக் காசு இல்லாததால் 10 ரூபாய் தாளினை எடுத்துக் கொடுத்தேன். மிகுதி 8 ரூபாய் வருமென்று காத்திருந்த போது... 'அண்ணை நீங்கள் இன்னும் 10 ரூபாய் தர வேண்டும் என்று கேட்டார்.




இதுதான் அந்த ரிக்கற்

நானும் ஏன்.....ஏன்... 2 ரூபாய் என்றுதானே ரிக்கற்றில் இருக்குது.... இப்பிடித்தான் அதில இருக்குது ஆனால் மோட்டார் சைக்கிளுக்கு 20 ரூபாயும், சைக்கிளுக்கு 10 ரூபாவும் வாங்கிறோம் என்று கூறி அசட்டுச் சிரிப்புடன் சமாளித்துக்கொண்டிருந்தார். பிறகென்ன 20 ரூபாய் கொடுத்திட்டுதான் வெளியேறியது. என்ன செய்கிறது படிச்சவர்கள் கேட்கேக்க மறுக்கவா முடியும்.

பார்த்தீர்களா? இதனைத்தான் தவிச்ச முயல் அடிக்கிறது என்று சொல்லிக்கொள்வார்கள்.

இப்பவெல்லாம் யாழ்ப்பாணத்தில் புத்திஜீவிகள்தான் புத்தியால் சீவிக்கின்றார்கள். பல்கலைக் கழகத்தின் பட்டமளிப்பு விழாவில் துணைவேந்தரின் உத்தரவு என்று சொல்லி பாதுகாப்பு உத்தியோகத்தர்கள் பதறியடித்து அதுக்க போகாதீர்கள் இதுக்க போகாதீர்கள் என்று சுடுதண்ணி குடிச்சது மாதிரி ஓடித்திரிந்தார்கள்.

ஒரு கட்டத்தில பேப்பருக்கு படம் எடுக்கப் போன 'ரிப்போட்டர்' முதல் அமர்வில் கைலாசபதி கலையரங்கிற்குக் கிட்ட நிற்கேக்க அங்கு வந்த காவலர் ஏன் உதில நிற்கிறாய் என்று கேக்க நான் ரிப்போட்டர் என்று அவர்களுக்கு அனுப்பிய அழைப்பிதழையும் காட்டினர். நீ யாரா இருந்தால் எனக்கேன்ன முதல்ல அங்காலபோ... என்று அதிகாரத்துடன் விரட்டினார்.

மரியாதையா கதையுங்கோ ரிப்போட்டர், சொல்லிவிட்டு விலகினார். இப்பிடியான விழாக்களை நடத்துவதுக்கு முதல்நாள் அங்கு இருக்கிற பாதுகாவலர்களுக்கு 'டிஸிப்பிளின்' பற்றி சொல்லிக் கொடுத்து வகுப்பு நடத்த வேண்டும். அருகில் நின்ற முதியவர் எனக்குச் சொல்லிக் கொண்டிருந்தார்.




வெளியே பார்ப்பதற்கு எல்லாம் திட்டமிட்டு நடப்பது போலத்தான் இருக்குது. ஆனால் உள்ளே நின்று பார்த்தால் தானே.. தெரிகிறது.... அங்க என்ன நடக்குதென்று.... இனிமேலாவது உள்ளேயும் வெளியேயும் ஒரே மாதிரி நடப்பதற்கான ஏற்பாடுகளைச் செய்வார்களா?

கவிநேசன்

# சிங்கராஜவனத்தில் ஒரு சிங்கார உலா



ஜூலை மாத முற்பகுதியில் உலக அருஞ் செல்வங்களுள் ஒன்றான சிங்கராஜவனத்தில் கல்விசார்கள ஆய்வு ஒன்றை மேற்கொள்ளுமுகமாக தெல்லிப்பழை மகாஜனக் கல்லூரியைச் சேர்ந்த இருபது மாணவர்களும், ஐந்து ஆசிரியர்களும், அதிபரும் சென்றிருந்தார்கள். அங்கு அவர்கள் பெற்றுக்கொண்ட அனுபவங்கள் இங்கு தொகுத்து வழங்கப்படுகின்றன.

காலைக்கதிரவன் கண்விழிக்க முன்னரேயே எமது கல்லூரியின் அணி களம்நோக்கி புறப்பட்டது. நாவற்குழி பாலத்தில் எமது சொகுசு வாகனம் பயணித்த போதுதான் சுட்டெரிக்கும் சூரியனின் இதமான செங்கதிர்கள் எம் கண் முன்னே இரம்மியமாய்த் தோன்றின. வீட்டைவிட்டுத் துரத்தினால் தான் பலரும் காட்டுக்கு போவார்கள். ஆனால் நாங்களோ பதினாறும் பதினெட்டும் நிறைந்த மாணவச் செல்வங்களுடன் காட்டுக்குச் செல்கிறோம் குதூகலமாய்.

இரவு எட்டு மணியளவில் சிங்கராயவனம் என அழைக்கப்படும் சிங்கராஜவனத்தின் வாயிலைச் சென்றடைந்தோம்.இது கலவானை நகரில் இருந்து சற்றுத்தொலைவில் குடாவ என்னும் இடத்தில் அமைந்திருந்தது.

ஒரு நாட்டின் பொருளாதாரத்தில் 1.6% தொடக்கம் 2% வரை காடுகள் செல்வாக்குச் செலுத்துகின்றன. மேலும் சூழலியல் காப்பு, நீர்ப்பிடிப்பு நிலங்களின் காப்பு, காபனீரொட்சைட்டின் சமநிலை, மண்ணரிப்பினைத் தடுத்தல் போன்ற பல இன்னோரன்ன பணிகளைக் காடுகள் ஆற்றி வருகின்றன. 1881 இல் காட்டுப்பிரதேசம் மொத்த நிலப்பரப்பில் 82%ஆகக் காணப்பட்டது. ஆனால் இரண்டாயிரத்தில் எடுத்த கணக்கெடுப்பின் படி இது 22.4% ஆகக் காணப்படுகின்றது. இந்தப் பெரும் வீழ்ச்சிக்கு அதிகரித்த சனத்தொகைப் பெருக்கமே காரணம் எனக் கூறப்படுகின்றது. அதாவது 1881 இல் 3.5 மில்லியனாக இருந்த சனத்தொகை 2000 இல் 19 மில்லியனாக அதிகரித்துள்ளமை குறிப்பிடத்தக்கது. இலங்கையின் தென்மேற்குப் பிரதேசத்தில் ஏறக்குறைய 22,500 km பரப்பளவில் மழைக்காடுகள் பரந்துள்ளன. இந்த மழைக்காடுகளுள் பிரதானமாக முதலிடம் வகிப்பது தான் நாம் சென்றடைந்த சிங்கராஜ வனம்.

சிங்கராஜ வனம் இரத்தினபுரி, காலி, மாத்தறை ஆகிய மாவட்டங்களைத் தொட்டு நிற்கின்ற செழிப்பான வனமாகும். இது 11,187 ஹெக்ரேஜர் நிலத்தில் பரந்துவியாபித்துள்ளது. இக்காட்டின் நில உயரம் 100 மீ. தொடக்கம்1200 மீ. வரை வேறுபடக் கூடியது. சாய்வு வீச்சு 10° தொடக்கம் 35° வரை காணப்படுகின்றது. இக்காட்டின் மிகவும் உயரமான உச்சி 1171மீ. உயரமுடைய 'இனிபிற்றிகல' என்றழைக்கப்படும் பிரதேசமாகும். இந்த வனப்பகுதியைச் சூழ கஸ்குல ஆறு,பிற்கல கங்கை, ஜின் கங்கை ஆகியன ஆரோகணித்துப் பாய்ந்து கொண்டிருக்கின்றன. இங்குள்ள காடுகளின் படையமைப்பு கண்கொள்ளாக் காட்சியாக எம் கண்முன்னே விரிகின்றது. வெளிப்பாட்டுப்படை, விதானப்படை, உப விதானப்படை, கீழ்வளரிகள், தரைக்குரியபடை என இங்கு ஐந்து படைகளாக அழகுடன் காட்சியளிக்கின்றது. (வளரும்...)

க.வாணிமுகுந்தன், யா/மகாஜனக் கல்லூரி.

# தென்மராட்சியில் 14 பேருக்கு சுயதொழில் உதவிக் கொடுப்பனவு

தென்மராட்சி,ஒக்.9

தென்மராட்சிப் பிரதேசத்தைச் சேர்ந்த 14 பேருக்கு சுயதொழில் உதவிக் கொடுப்பனவு கிடைக்கவுள்ளது.

'யுனிசெப்' செயற்றிட்டத்தின் கீழ் இக் கொடுப்பனவை மாகாண சமூக சேவை கள் திணைக்களத்தினர் பிரதேச செயலக சமூக சேவைகள் பிரிவு ஊடாக வழங்கவுள்ளனர்.

பின்வரும் பயனாளிகள் எதிர்வரும் 13 ஆம் திகதி புதன்கிழமை தமது தேசிய அடையாளஅட்டை, குடும்பஅட்டை ஆகியவற்றுடன் வருகை தருமாறு பிரதேச செயலர் செ.ஸ்ரீநிவாஸன் அறிவித்துள்ளார்.

அ. தங்கம்மா- (தவசிகுளம், மிருசுவில்), ப.லோகேஸ்வரி (நுணாவில் மேற்கு), சொ.ஜெயகலா- (விடத்தற்பளை), யோ. கோகுலவாணி ( இராமாவில்),ப.அர்சியா- (மட்டுவில் கிழக்கு), ஜெ.புஷ்பராணி ( தவசிகுளம்), ம.சுதர்சினி- (பெருங்குளம்), உ.தாகிலா (நாவற்குழி மேற்கு), ஜெ.ரேணுகா- (மீசாலை வடக்கு), சு. கிருபாவதி- (சரசாலை வடக்கு), கா. ராதிகா- (இராமாவில்) ஆகியோருக்கு தலா 25 ஆயிரம் ரூபாவும்,

க.நிஷாந்தினி- (இராமாவில்), செ. சிவபாக்கியம் ( மந்துவில்), யோ.செல்வர்தி (கெருடாவில் வடக்கு) ஆகியோருக்கு தலா 15 ஆயிரம் ரூபாவும் சுய தொழில் உதவிக் கொடுப்பனவு வழங்கப் படவுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டது.

(த-207)

## ஜயோதா

உத்தியோகபூர்வ முடிவுகள்

சீட்டிழுப்பு இலக்கம் 688 திகதி 07-10-2010

வெற்றி எண்கள்

ஆங்கில எழுத்து

**01 03 38 50 G**

ஜக்பொட் பரிசு ரூ. **17,695,360/-** வெல்லப்படவில்லை

| வெற்றி எண்கள் | வெற்றி பெற்றோர் | பரிசுத் தொகை | முழு பரிசுத் தொகை |
|---|---|---|---|
| 4 இலக்கங்களுடன் ஆங்கில எழுத்து பொருந்தினால் | - | 17,695,360/= | - |
| 4 இலக்கங்கள் பொருந்தினால் | 02 | 400,000/= | 800,000/= |
| 3 இலக்கங்களுடன் ஆங்கில எழுத்து பொருந்தினால் | 07 | 2,000/= | 14,000/= |
| 3 இலக்கங்கள் பொருந்தினால் | 403 | 1,000/= | 403,000/= |
| 2 இலக்கங்களுடன் ஆங்கில எழுத்து பொருந்தினால் | 660 | 1,000/= | 660,000/= |
| 2 இலக்கங்கள் பொருந்தினால் | 15601 | 60/= | 936,060/= |
| 1 இலக்கத்துடன் ஆங்கில எழுத்து பொருந்தினால் | 7432 | 40/= | 297,280/= |
| 1 இலக்கம் பொருந்தினால் | 182946 | 20/= | 3,658,920/= |
| | | மொத்தம் ரூ. | 6,769,260/- |
| வெல்லப்படாத டிக்கட்டுகளுக்காக கொடுக்கப்பட்ட பணப்பரிசுகளின் பெறுமதி | 08 | 50,000/= | 400,000/= |

ரூ.50,000 வீதம் பணப்பரிசுகள் வெற்றிபெற்ற 5 டிக்கட்டுகளின் தொடர் இலக்கங்கள்.

| | |
|---|---|
| காலி | 700434903-1-41 |
| கேகாலை | 700426453-4-34 |
| திருகோணமலை | 700431559-0-40 |
| அம்பாறை | 700429295-1-01 |
| கொழும்பு | 700427828-1-11 |
| களுத்துறை | 700437582-3-03 |
| நுவரேலியா | 700423531-7-17 |
| குருநாகல் | 700420815-2-42 |

வெல்லப்பட்ட மொத்த பரிசுத் தொகை **7,169,260/=**

எதிர்வரும் திங்கட்கிழமை சுப்பர் ஜக்பொட்

ரூ. **18,190,900/=**

மஞ்சள் நிற டிக்கட்டுகள் 2010 ஒக்டோபர் 11 ஆம் திகதி திங்கட்கிழமை சீட்டிழுப்புக்கு செல்லுபடியாகும்.
வெற்றி பெறும் டிக்கட்டுகள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.

அபிவிருத்தி லொத்தர் சபை
356, கலாநிதி கொல்வின் ஆர் டி சில்வா மாவத்தை, யூனியன் பிளேஸ், கொழும்பு - 02
தொ.பே: 2333546/7

வளமான வாழ்விற்கு அபிவிருத்தி லொத்தர்

## உலக உளநல நாள் நாளை அனுஷ்டிப்பு

யாழ்ப்பாணம், ஒக்: 9

உலக உளநல நாள் நிகழ்வு 'மனச சஞ்சாரம் 2010' எனும் தலைப்பில் நாளை ஞாயிற்றுக்கிழமை மாலை 4 மணிக்கு யாழ்.பொது நூலக கேட்போர் கூடத்தில் யாழ்.பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்திய கலாநிதி ஆ.கேதீஸ்வரன் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்த நிகழ்வில் யாழ்.போதனா வைத்தியசாலையின் பொது வைத்திய நிபுணர் வைத்திய கலாநிதி தி.குமணன் 'நாள்பட்ட உடல் நோய்களும் உளநலமும்' எனும் தொனிப்பொருளில் கருத்துரை வழங்கவுள்ளார்.

'மஞ்சள் வெயிற் பொழுது....' என்னும் கருப் பொருளில் இசை நிகழ்வும் இடம் பெறவுள்ளது. நிகழ்வில் பிரதம விருந்தினராக ஸ்கந்தவரோதயக் கல்லூரியின் அதிபர் ஆறுதிருமுருகன் கலந்துகொள்ளவுள்ளார்.

(த-6)

## பாராட்டி வாழ்த்துகின்றோம்



சாவகச்சேரி இந்து ஆரம்ப பாடசாலை மாணவன் **செல்வன் குகன் ரிஷிகேசவன்** ஐந்தாம் தரப் புலமைப்பரிசில் பரீட்சை - 2010 இல் 162 புள்ளிகளைப் பெற்று சித்தியடைந்துள்ளார். அவரைப் பாராட்டுவதோடு மேலும் கல்வியில் சிறப்புற்று மிளிர வாழ்த்துகின்றோம்.

வாழ்த்துவோர்: தவம் தாத்தா
இந்திரா, நந்தி அம்மம்மாமார்
கச்சாய் வீதி, சாவகச்சேரி.

## பாராட்டி வாழ்த்துகின்றோம்



யாழ்.பல்கலைக்கழகத்தில் நடைபெற்ற 26 ஆவது பட்டமளிப்பு விழாவில் இளநிலைகலைமாணி பட்டம்பெற்ற

**திருமதி பிரியங்கா மாறன் (B.A.)**

அவர்கள் மேலும் பல பட்டங்களையும் சிறப்புக்களையும் பெற வாழ்த்துகின்றோம்.

வாழ்த்துவோர்: கணவர்-மாறன் (கனடா)
மற்றும் குடும்பத்தினர்
சர்வோதயா வீதி, அச்சுவேலி தெற்கு, அச்சுவேலி.

## பாராட்டி வாழ்த்துகின்றோம்

யா/உடுவில் மகளிர் கல்லூரி மாணவிகளான



செல்வி கெங்காசுதன்
தேமதுரா



செல்வி நவனீதன்
சோபிகா

ஆகிய இருவரும் 2010 தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தியடைந்ததைப்போல் மேலும் கல்வியில் பல சாதனைகள் படைத்து மேலோங்கி வளர வெட்டுக்கட்டை விநாயகர் அருள்வேண்டி இவர்களின் வெற்றிக்கு பின்புலமாக இருந்த உடுவில் மகளிர் கல்லூரி வகுப்பாசிரியர், அதிபர் மற்றும் மங்களகோபி அனைவருக்கும் எமது வாழ்த்துக்களையும் நன்றியையும் தெரிவித்துக்கொள்கின்றோம்.

கெங்காசுதன் குடும்பத்தினர்,
மாமா குடும்பம்,
பெரியக்கா குடும்பம்.

சங்குவேலி வடக்கு,
மானிப்பாய்.


**English**
- English for Higher Studies
- Communicative English

**IT & Computing**
- ACS(Australian Computer Society Diploma of IT)
- BCS(The Charted Institute for IT)-(UK) Programme
- ICDL, GIT, Java Programming.

**Vocational Training**
- Certificate in Welding Technology
- Certificate in Aluminium Fabrication
- Certificate in Domestic Electrical Technology
- Certificate in Electrical & Electronics

**Engineering**
- BEng Electronics and Communications Engineering
- BEng Mechatronics
- BEng Mechanical Engineering
- BEng Engineering Design Management
- BEng Automotive Systems Engineering
- BEng Naval Architecture
- BEng Ocean Engineering
- BEng Marine and Offshore Systems

- International Technology Foundation Programme

**Management**
- BSc. International Transportation Mangement & Logistics
- Management Foundation Programme

Win a Scholarship by registering before 15th October 2010

Programme commencement 18th October 2010

CINEC
Jaffna Campus
BRANCH OF CINEC MARITIME CAMPUS

OL, AL பிறகு அடுத்தது என்ன ?

பாடசாலை கல்வியின் பின் உங்கள் எதிர்காலத்தை பற்றி சிந்தித்தீர்களா?

**Higher Education or a job or job+Education or go overseas?**

*Explore Choices, Options and Opportunities available and take the right decision at the right time.*



FREE SEMINARS

October 9 9.30am Weerasigham Hall, Jaffna
October 9 3.00pm Iyaththurai Hall, Navali Rd, Manipay
October 10 9.30am Nellai Wedding Hall, Neliyadi, Point Petro
October 10 3.00pm Sri Ingaran Hall, Dutch Rd, Chavakacheri

**Reserve Your Seat NOW**
for more information **077 9 710 339**

CINEC Jaffna Campus, KKS Road, Maruthanamadam.
Tel: 021 4 925 925 infojaffna@cinec.edu

# பொன்சேகாவின் விடுதலையில் அனோமாவுக்கு அக்கறை இல்லை

## மன்னிப்புக் கேட்கலாம்தானே என்கிறார் ரம்புக்வெல



கொழும்பு, ஒக். 09

சரத் பொன்சேகா வெளியே வருவதை அவரது மனைவி அனோமா பொன்சேகா விரும்பவில்லை போல் தெரிகின்றது. அனோமா பொன்சேகாவோ அல்லது அவரது புதல்விகளோ பொன்சேகாவை விடுதலை செய்யும்படி கோரிக்கை விடுக்கலாம். அப்படிச் செய்யாமல் அரசியல் நோக்கங்களுக்காக போராட்டங்கள் நடத்துவதால் பயனில்லை.

இவ்வாறு ஊடகத் தகவல் துறை அமைச்சர் கெஹலிய ரம்புக் வெல நேற்றுமுன்தினம் தெரிவித் தார்.

அமைச்சரவை முடிவுகளை வெளியிடும் செய்தியாளர் மாநாடு நேற்றுமுன்தினம் காலை தகவல் திணைக்கள கேட்போர் கூடத்தில் நடைபெற்றபோதே அவர் இத் தகவலைத் தெரிவித்தார்.

அவர் தொடர்ந்து கூறியவை வருமாறு:-

சிறைத் தண்டனை விதிக்கப் பட்டவர்களை ஜனாதிபதியின் பொதுமன்னிப்பின் கீழ் விடுதலை செய்வதற்கு அவர்களது குடும்பத்தவர் கோரிக்கை விடுக்க வேண்டும்.

விஜய குமாரணதுங்க சிறைவாசம் அனுபவித்தபோது அவரது மனைவி சந்திரிகா சுமார் 12 தடவைகள் அப்போதைய ஜனாதிபதியிடம் சென்று மன்னிப்பு வழங்கும்படி கோரிக்கை விடுத்தார். அது போன்று முறையான வழிமுறையைக் கடைப்பிடிக்கவேண்டும்.

அரசியல் நோக்கங்களைக் கருத்தில்கொண்டு போராட்டம் நடத்துவது, கையெழுத்து வேட்டை நடத்துவது ஆகியவற்றால் எதுவித பயனும் ஏற்பட்ப் போவதில்லை.

இரண்டாவது இராணுவ நீதிமன்றத்தின் தலைவர்கள் நியமிக்கப் பட்டமை தொடர்பாக சரத் பொன்சேகா அதிருப்தி தெரிவித்திருந்தார். ஆனால், மேஜர் ஜெனரல் பன்னிப் பிட்டியவுக்கு எதிரான இராணுவ நீதிமன்றத்துக்கு சரத்பொன் சேகா இவர்களையே நியமித்திருந் தார். இப்போது அவர்கள் தகுதியற்றவர்களாகி விட்டார்களா?

'ரெண்டர்' நடை முறைகளுக்கு அப்பால் இராணுவத் தள பாடங்களை இறக்குமதி செய்து நிதி மோசடி செய்தமை தொடர்பாகவே இரண்டாவது இராணுவ நீதிமன்றம் சரத்பொன்சேகாவுக்கு எதிராகத் தீர்ப்பு வழங்கியுள்ளது. ரெண்டர் தொடர்பான கம்பனி சரத் பொன் சேகாவின் குடும்பத்தினரது. அவரது மருமகன் தனுனதிலக ரட்ணவும் இக்கம்பனியின் பங்குதாரர். இவர்கள் குற்றமற்றவர்கள் என்றால் தனுன திலகரட்ண ஏன் தலைமறைவாகவேண்டும் - என்றும் அவர் கேள்வி எழுப்பினார். (உ-5)



இலங்கை கடற்படையின் எலரா நிலையத்தின் 55ஆவது வருடநிறைவை யொட்டி காரை நகர் பாலாவோடை இந்து தமிழ் கலவன் பாடசாலை மாணவர்களுக்கு கற்றல் உபகரணங்கள் வழங்கும் நிகழ்வு பாடசாலையில் அண்மையில் இடம்பெற்ற போது எடுக்கப்பட்ட படம் இது.நிகழ்வில் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்ட கடற்படையின் வட பகுதிக்கான கட்டளைத் தளபதி எஸ்.எம்.பி வீரசேகர மாணவர் ஒருவருக்கு கற்றல் உபகரணங்கள் அடங்கிய பாடசாலை புத்தகப் பையை வழங்குவதை படத்தில் காணலாம்.

## புலமைப்பரீட்சையில் சித்திபெற்ற மாணவர்களுக்கு மக்கள் வங்கியின் பரிசுகள்

யாழ்ப்பாணம், ஒக். 09

புலமைப் பரிசில் பரீட்சை யில் சித்தியடைந்த மாணவர்கள் மக்கள் வங்கியால் வழங்கப்படும் பெறுமதி மிக்க பரிசுகளுக்கு விண்ணப்பிக்குமாறு யாழ். பிராந்திய முகாமையாளர் அறிவித்துள்ளார்.

தரம் 5 புலமைப் பரிசில் பரீட்சையில் தோற்றிச் சித்திபெற்ற மாணவர்களில் மக்கள் வங்கி சிசு உதாண அல்லது பராயமடையாதோர் கணக்கில் கடந்த ஓகஸ்ட் மாதம்22 ஆம் திகதிக்கு முன்னர் 2500 ரூபாவுக்கு குறையாத மீதியைப் பேணிவந்தோர் இப்புலமைப் பரிசிலுக்கு விண்ணப்பிக்கத் தகுதியுடையோராவர்.

இவர்கள் தமது விண்ணப்பங்களை அருகிலுள்ள மக்கள் வங்கிக் கிளையில் ஒப்படைக்குமாறு கேட்கப்பட்டுள்ளனர். (ஒ-16)

# இலங்கைப் பல்கலைக் கழகங்களை சர்வதேச தரத்திற்கு மாற்ற நடவடிக்கை

## எஸ்.பி. தெரிவிப்பு

கொழும்பு, ஒக்.9

அரச பல்கலைக் கழகங்களைப் போன்று தனியார் பல்கலைக் கழகங்களும் எமக்கு அவசியம். இலங்கையிலுள்ள பல்கலைக் கழகங்களை ஆசியாவின் சிறந்த பல்கலைக்கழகங்களாகவும், சர்வதேச தரம் வாய்ந்த பல்கலைக் கழகங்களாகவும் மாற்றுவதற்குத் தேவையான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வரு கின்றன.

- இவ்வாறு உயர்கல்வி அமைச்சர் எஸ்.பி.திஸாநாயக்க தெரிவித்தார்.

கொழும்பு பண்டாரநாயக்க சர்வதேச ஞாபகார்த்த மாநாட்டு மண்டபத்தில் நேற்றுமுன்தினம் காலை இடம்பெற்ற தென் கிழக்குப் பல்கலைக்கழகத்தின் ஆறாவது பட்டமளிப்பு விழாவில் பிரதம அதிதி யாகக் கலந்துகொண்டு உரையாற் றும் போதே அவர் மேற்கண்ட வாறு குறிப்பிட்டார்.

உபவேந்தர் கலாநிதி எஸ்.எம்.எம். இஸ்மாயில் தலைமையில் இடம்பெற்ற இப்பட்டமளிப்பு விழாவில் பிரயோக விஞ்ஞானம், கலை, வர்த்தக முகாமைத்துவம் மற்றும் அரபுமொழி ஆகிய பீடங்களைச் சேர்ந்த உள்வாரி மாணவர்கள் 359 பேருக்கும் வெளிவாரி மாணவர்கள் 261 பேருக்கும் பட்டங்கள் வழங்கப்பட்டன.

உயர்கல்வி அமைச்சர் எஸ்.பி. திஸாநாயக்க அங்கு உரையாற்றும் போது மேலும் தெரிவித்தவை வருமாறு:-

"பல்கலைக்கழகங்களின் அபிவிருத்திக்காக வெளி நாடுகளிலிருந்து முதற்கட்டமாக 200 மில்லியன் ரூபாவும் இரண்டாம் கட்டமாக 1,200 மில்லியன் ரூபாவும் கிடைக்கவுள்ளன.

இலங்கையில் வழங்கப்படுவது போன்ற இலவச உயர்கல்வி அபிவிருத்தியடைந்த நாடுகளிலும் கூட வழங்கப்படுவதில்லை. இவ்வாறு இலவச உயர்கல்வி மூலம் பட்டம் பெற்று வெளியேறுபவர்கள் நாட்டை மதிக்க வேண்டும்.சிறந்த கற்றலின்மூலம் தரமான கல்வி உறுதியை ஏற்படுத் துவதே எனது பிரதான நோக்கம்." (சி)

## 'கலைமுகம்' 50 ஆவது இதழ் வெளியீடு

யாழ்ப்பாணம், ஒக். 09

திருமறைக் கலாமன்றத்தின் கலை, இலக்கிய, சமூக இதழான கலைமுகம் சஞ்சிகையின் 50ஆவது இதழ் நாளை ஞாயிற்றுக் கிழமை மு.ப10.30 மணிக்கு இடம்பெறவுள்ளது. கலைத்தூது கலையகத் தில் நடைபெறும் இந்த நிகழ்வுக்கு கவிஞர் கோ.பத்மநாதன் தலைமை தாங்குவார்.

வெளியீட்டுரையை திருமறைக் கலாமன்றப் பிரதி இயக்குநர் யோ.யோண்சன் ராஜ்குமாரும் மதிப்பீட்டுரைகளைக் கீரிமலை நகுலேஸ்வர மகாவித்தியாலய அதிபர் சு.ஸ்ரீகுமரனும் யாழ்.பல்கலைக்கழகச் சமூகவியல் துறை விரிவுரையாளர் இ.இராஜேஸ் கண்ணனும் நிகழ்த்துவார். முதற் பிரதியைத்தேசிய கலை இலக்கியப் பேரவைச் செயலாளர் கோ.தேவராஜா பெறவுள்ளார். (த-55)

# பொன்சேகாவின் எம்.பியின் பதவியைப் பறிக்க முடியாது

## போல் பெரேரா சட்டத்தரணிகள் கம்பனி

கொழும்பு, ஒக். 09

ஜனநாயக தேசியக் கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர் சரத் பொன்சேகா பதவி இழந்தார் எனக் கருத வேண்டாம் என போல் பெரேரா சட்டத்தரணிகள் கம்பனி, நாடாளுமன்றச் செயலாளர் நாயகம் மற்றும் தேர்தல் ஆணையாளருக்கும் வேண்டுகோள் விடுத்துள்ளது.

இராணுவ நீதிமன்றமே சரத் பொன்சேகாவுக்குத் தண்டனை வழங்கியுள்ளது. இதில் நீதிமன்றம் அரசமைப்பின்படி நீதிமன்றமாகக் கொள்ள முடியாது. எனவே இராணுவ நீதிமன்றம் விதித்த தண்டனையால் சரத் பொன்சேகாவின் நாடாளுமன்ற உறுப்பினர் பதவியை பறிக்க முடியாது எனவும் அக் கடிதத்தில் கூறப்பட்டுள்ளது.

மேலும் இரண்டாவது இராணுவ நீதிமன்றத் தீர்ப்பை எதிர்த்து சரத் பொன்சேகா மேன் முறையீட்டு நீதிமன்றத்துக்கு மனுவொன்றையும் தாக்கல் செய்துள்ளதாகவும் அக்கடிதத்தில் சுட்டிக் காட்டப் பட்டுள்ளது. (ளி)

### —பொன்சேகாவின் எம்.பி. பதவியை ரத்துச் செய்யுமாறு—

# தேர்தல் ஆணையாளருக்கு கடிதம் எழுதியது தவறானது

## சபையில் ரணில் ஒழுங்குப் பிரச்சினை



கொழும்பு, ஒக். 09

சரத் பொன் சேகாவின் நாடாளுமன்ற உறுப்பினர் பதவியை இரத்துச் செய்யுமாறு கோரி நாடாளுமன்ற பதில் செயலாளர் நாயகம் தம்மிக்க கித்துல்கொட, தேர்தல்கள் ஆணையருக்குக் கடிதம் அனுப்பியது மிகவும் தவறானது என்று எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க நேற்று முன் தினம் நாடாளுமன்றில் கூறினார்.

ரணில் நேற்று முன்தினம் ஒழுங்குப் பிரச்சினை ஒன்றைக் கிளப்பி இந்த விடயத்தைக் கூறினார்.

அவர் இது தொடர்பாக மேலும் கூறியவை வருமாறு:-

சரத் பொன்சேகாவின் நாடாளுமன்ற உறுப்பினர் பதவியை இரத்துச் செய்யுமாறு கோரி நாடாளுமன்ற செயலாளர் நாயகம் தேர்தல்கள் ஆணையாளருக்கு கடிதம் ஒன்றை அனுப்பியுள்ளார்.

பொன்சேகாவின் பதவி இரத்துச் செய்யப்படுமா, இல்லையா என்று தனது தீர்மானத்தை அவர்அறிவிப்பார் என்று சபாநாயகர் செப்டெம்பர் 24ஆம் திகதி இந்தச் சபையில் கூறினார்.

ஆனால், சபாநாயகர் அவரது தீர்மானத்தை அறிவிப்பதற்கு முன் நாடாளுமன்ற செயலாளர் நாயகம் பொன்சேகாவின் பதவியை இரத்துச் செய்யுமாறு கோரி தேர் தல் ஆணையாளருக்குக் கடிதம் அனுப்பியுள்ளார். சபாநாயகர் அவரது தீர்மானத்தை அறிவிப்பதற்கு முன் இவ்வாறு கடிதம் அனுப்பப்பட்டது தவறு. - என்றார்.

அரசமைப்பின்படியே நாடாளுமன்ற செயலாளர் நாயகம் இவ்வாறு செய்துள்ளார். இதில் எதுவித பிழையும் இல்லை - என்று அப்போது சபைக்குத் தலைமை தாங்கிக்கொண்டிருந்த பிரதி சபாநாயகர் பிரியங்கர ஜயரட்ன கூறினார்.

ரணில் விக்கிரமசிங்க நேற்று முன்தினம் ஒழுங்குப் பிரச்சினையை எழுப் பிக்கொண்டிருந்த போது மேர்வின் சில்வா உட்பட அரச அமைச்சர்கள் பலர் மேசைகளின் மீது புத்தகங்களைப்போட்டுத் தட்டிக் கூச்சலிட்டுக் குழப்பிக் கொண்டிருந்தனர். (உ-சி)

# பாடசாலை வாழ்வில் கற்றுக் கொள்பவையே எதிர்கால நல்வாழ்வுக்கு அடித்தளமாகின்றன

## சிவில் மேன்முறையீட்டு மேல் நீதிமன்ற நீதிபதி உரை



அச்சுவேலி,ஒக்.9

மனிதவாழ்க்கையில் பாடசாலைப் பருவம் மிகவும் முக்கியமானது. பாடசாலையில் கற்றுக் கொள்பவையே எதிர்கால நல்வாழ்வுக்கு அடித்தளமாக நின்று உதவுகின்றன. எனவே ஒழுக்கத்தோடு கூடிய அறிவை பெற்று மாணவர்கள் சமூகத்தில் நற்பிரஜைகளாக வாழக்கற்றுக்கொள்ள வேண்டும். ஒழுக்கம் இல்லாத சமூகம் உயர்வடைந்ததாக வரலாறு இல்லை

இவ்வாறு கூறினார் சிவில் மேன் முறையீட்டு மேல் நீதிபதி எஸ். தியாகேந்திரன்

அச்சுவேலி மத்திய கல்லூரி அதிபர் வே.பா.பாலசுப்பிரமணியம் தலைமையில் நடைபெற்ற கல்லூரியின் வருடாந்த பரிசளிப்பு விழாவில் பிரதம விருந்தினாராக கலந்து கொண்டு நீதிபதி எஸ்.தியாகேந்திரன் தொடர்ந்து உரையாற்றும் போது.

நாம் கல்வி அறிவினால் மேம்பட்டாலும் ஒழுக்கமில்லாத கல்வியால் உயர்வடைய முடியாது. பாடசாலைப் பருவத்தில் கற்றுக் கொள்பவை எமது எதிர்காலத்துக்கு உறுதியான அடித்தாளமானக அமைகின்றன.இந்தப் பருவத்தில் ஒழுக்க சீலங்களுடன் கூடிய கல்வி யைக் கற்றுக் கொள்ள வேண்டும்

நான் இன்று கல்லூரியின் உள்ளே நுழையும் போது எனது பாடசாலைப்பருவ நிகழ்வுகள் நினைவுக்கு வந்தன. கிராமப் புற கல்விக் கூடமான இந்தக் கல்லூரி நாங்கள் கல்விகற்ற காலக் கட்டத்தில் கல்வித் தரத்திலும் விளையாட்டிலும் உயர் நிலையைப் பெற்று விளங்கியது. துடுப்பாட்டத்தில் அகில இலங்கை ரீதியில் முன்னணி வகித்தது. இங்கே கல்வி பயின்ற மாணவர் கள் பலர் உயர்பதவிகளை வகிக்கின்றனர்.ஒழுக்கத்தில் மாணவர்களின் கல்வி அடைவு மட்டத்தில் உயர் நிலை பெற்று விளங்கியது.

மாணவர்கள் தாய், தந்தையருக்குஅடுத்த நிலையில் ஆசிரியர்களை மதித்து அவர்களின் அறிவுரைகளை ஏற்றுக் கல்வியில் உயர்பெறுபேறுகளை அடைய வேண்டும் .எமது வாழ்க்கை யில் மூன்று ஆல யங்கள் முக்கியத்துவம் பெறுகின்றன முதலாவது ஆலயம் இறைவன் எழுந்தருளி இருந்து அருள் செய்யும் இடம். இது எல்லாச் சமயத்தின் வழிபாட்டு நிலையிலும் முக்கியத்துவம் பெறுகின்றது. இரண்டாவது வித்தியாலயம் இங்கே ஆசிரியர் கல்வியை மாணவர்களுக்கு வழங்குகின்றார். மூன்றாவது காரியாலயம். இங்கே கடமை முக்கியத்துவம் பெறுகின்றது இந்த மூன்று ஆலயங்களிலும் இறை, குரு, கடமை என்பன போற்றுதலுக்கு உரியன. போற்றப்பட வேண்டியன. இவற்றை உணரவேண்டும்

இளம் வயதில் பெற்றுக் கொள்ளும் அறிவும் பழக்கமுமே இறக்கும் வரை நின்று உதவுகின்றன. செய்யும் தொழிலை தாம் நேசிக்க வேண்டும். செய்யும் தொழிலே தெய்வம் என்பது அதனையே வலியுறுத்தி நிற்கின்றது.

இன்று காணப்படும் வசதிகளை உரிய முறையில் பயன் படுத்துவதன் முலம் நாம் உயர் வடையலாம். வசதிகளைத் துஷ் பிரயோகம் செய்து வாழ்க்கையை அழித்து கொள்ளக் கூடாது மாணவர்கள் பாடசாலை பருவத்தில் சமகாலவசதிகள் வழங்கலால் திசை மாறி விடாமல் கற்றல் செயற்பாடுகளால் உறுதியான நம்பிக்கையுடன் ஈடுபட வேண்டும்எனக் கூறினார். இந்நிகழ்வில் கல்லூரிக்கான இணையத் தளத்தையும் நீதிபதி ஆரம்பித்து வைத்தார். (த-11)

# இன்றைய நாள் உங்களுக்கு எப்படி?

தருபவர்: வித்யா

**மேடம்:**



முயற்சிகளில் முத்தான வெற்றிபெறும் நாள். பெண்கள் வழியில் பெருமைப்படும் சம்பவங்கள் நடக்கலாம். புதிய தொழில் ஒப்பந்தங்களை மேற்கொள்ளலாம். விவசாயிகள் விளைபொருள்கள் விற்பனையால் ஆதாயம் பெறலாம். நடக்குமோ, நடக்காதோ என சந்தேகத்தில் இருந்த காரியம் ஒன்று நல்ல விதமாக நடந்து விடலாம்

**இடபம்:**



எந்த வேலையும் குறித்த நேரத்தில் முடிவடையாமல் இழுத்தடிக்கலாம். சில விடயங்களில் மனம் தளராமல் விடாமுயற்சியுடன் செயற்படுவீர்கள். நீங்கள் செல்லும் இடத்தில் உறவினர் அல்லது நண்பர் ஒருவரைச் சந்திக்கலாம். பெண்கள், வீட்டுக்குத் தேவையான பொருள்களை வாங்கலாம். முன்னோர் வழிபாட்டில் அக்கறை காட்டுவீர்கள்.

**மிதுனம்:**



உறவினர்கள் தொடர்பான விடயங்களில் பட்டும் படாமல் நடந்து கொள்ள வேண்டும். அயலாரின் அதிருப்தி, கோபத்திற்கு ஆளாகலாம். மற்றவர்களின் பேச்சை நம்பி சில காரியங்களில் இறங்குவீர்கள். ஒரு விடயம் நடக்கும் முன்னரே அதுபற்றிப் பெரிய அளவில் கற்பனை செய்ய வேண்டாம். மருந்துப் பொருள்கள் வாங்கலாம்.

**கடகம்:**



புதிய பணவரவுகளால் பொருளாதார நிலைமை மேம்படும். நீண்ட நாள் பிரச்சினை ஒன்று சூரியனைக் கண்ட பனி போல விலகும். பிரிந்திருந்த குடும்ப உறுப்பினர்கள் மீண்டும் ஒன்று சேருவர். அரசு தொடர்பான காரியங்கள் அனுகூலமாக முடியலாம். தாய் வழியில் உருவான தொல்லைகள் நீங்கி மகிழ்ச்சி அடைவீர்கள். உற்சாகம் கூடும்.

**சிங்கம்:**



தடை, தாமதங்களுக்குப் பின் வெற்றி கிடைக்கும். பயணங்களின் போது விலை உயர்ந்த பொருள்களை கவனமாகப் பார்த்துக் கொள்ள வேண்டும். வெறுப்பு, விரக்தி அதிகரிக்கலாம். மறைமுக போட்டிகள், எதிர்ப்புகளைச் சந்திக்கலாம். செலவுகளில் சிக்கனம் காட்ட வேண்டும். உல்லாசமாகப் பேசி மற்றவர்களிடம் வம்பில் மாட்டிக் கொள்ளலாம்.

**கன்னி:**



இனிமையான அனுபவங்களால் இன்னல்களை மறக்கும் நாள். புத்திசாலித்தனம் வெளிப்படும். தொழில் புரிவோர் வழக்கத்தை விடக் கூடுதலாக லாபம் பெறலாம். சக ஊழியர்கள் வழியில் எதிர்பார்த்த உதவிகள் கிடைக்கலாம். பிள்ளைகள் செயற்பாடுகளை மற்றவர்களிடம் சொல்லி பெருமை அடைவீர்கள். பிரியமானவர்கள் சந்திப்பு உண்டு.

**துலாம்:**



மறதியால் அவதிகளுக்கு ஆள்படலாம். வீட்டுத் தேவைகளை நிறைவேற்றி வைக்க பணத்தைத் தாராளமாகச் செலவு செய்வீர்கள். எந்த விடயத்திற்கும் வாக்குவாதம் செய்வதை தவிர்க்க வேண்டும். உங்கள் உதவி பெற்ற சிலரே உங்களை மதிக்காமல் செயற்படுவது கண்டு வெறுப்பு அடையலாம். இறை வழிபாடு மூலம் நிம்மதி பெறுவீர்கள்.

**விருச்சிகம்:**



பெண்கள் வழியில் சந்தோஷமான அனுபவங்களைப் பெறலாம். நாளைய நிகழ்ச்சிகளைக் கருத்தில் கொண்டு இன்றே சில வேலைகளை முடிக்க முற்படுவீர்கள். நண்பர்களை நம்பி ஒப்படைத்த காரியங்கள் நல்ல விதமாக முடிவுக்கு வரலாம். நீங்கள் எதிர்பாராத வகையில் சில தரப்பில் இருந்து பணவரவுகளைப் பெறலாம். கொண்டாட்டம் உண்டு.

**தனுசு:**



வீண் விரயங்களைக் குறைத்து சேமிப்பை அதிகரிப்பீர்கள். தவறு எனத் தெரிந்தும் சில வேலைகளை துணிச்சலாகச் செய்வீர்கள். தொழில் ரீதியாக வரவேண்டிய ப்ணவரவுகளைப் பெறலாம். குடும்பத்தினர் மீது அதிக பாசம் வைப்பீர்கள். சிலருக்காக வெளியிடங்களில் காத்திருக்கலாம். வெளிவட்டாரத் தொடர்பு விரிவடையும்.

**மகரம்:**



இரண்டு நாள்களாக தடைப்பட்ட காரியம் ஒன்று இன்று சுறுசுறுப்பாக நடந்தேறும். உறவினர்கள் விவகாரங்களில் தலையிட்டு மன உளைச்சலுக்கு ஆள்படலாம். வியாபாரிகள் அகலக்கால் வைக்காமல் செயற்பட வேண்டும். பெற்றோரின் தேவைகளை நிறைவேற்றி வைப்பீர்கள். பல நாள்களாக சந்திக்க நினைத்த ஒருவரைச் சந்திக்கலாம்.

**கும்பம்:**



புதிய முயற்சிகளைத் தள்ளி வைக்க வேண்டிய நாள். தேக ஆரோக்கியக் குறைபாடுகளால் அவதிகளுக்கு ஆள்படலாம். எங்காவது செல்லும் போது வாகனங்க்ள் பழுதாகி தொந்தரவு கொடுக்கலாம். செலவில்லாமல் முடிக்க நினைத்த காரியம் ஒன்றுக்கு அதிகமாக செலவாகலாம். போட்டி, எதிர்ப்புகளால் எரிச்சல் அடையலாம்

**மீனம்:**



தொல்லை கொடுத்தவர்கள் எல்லை விட்டுச் செல்லும் நாள். புதிய சொத்துக்கள் வாங்கப் போட்ட திட்டங்கள் தள்ளிப் போகலாம். சக ஊழியர்களுக்காக சில காரியங்களைச் செய்ய முற்படுவீர்கள். குடும்பத்தினருடன் வெளியிடங்களுக்கு செல்லலாம். மனைவி வழி உறவுகளின் சந்திப்பு நிகழும். ஆடை, அலங்காரப் பொருள்கள் வாங்கலாம்.

# யாழ். பாடசாலைகளின் புலமைப் பரிசில் முடிவுகள்

யாழ்ப்பாணம்,ஒக்.9

2010ஆம் ஆண்டு, தரம் 5 புலமைப்பரிசில் பெறுபேறுகள் அண்மையில் வெளிவந்துள்ளன. எனவே சித்தியடைந்த மாணவர்களின் விவரங்களை உதயன் தொடர்ச்சியாக வெளியிட்டு வருகிறது. ஒரு தொகுதி மாணவர் விவரம் வருமாறு:

**உடுப்பிட்டி அமெரிக்கன் மிஷன் கல்லூரி**

ர.ரஜிராஜ்-184, இ.ஆரூரன்-161, சி.ஆதித்தன்-151, த.தேனுஜன்-160, ம.அபிராம்-152, த.கார்த்தீபன் -161, மு.ஆர்த்திகன்- 151, ர.ராஜபக்தன்-143, பா.நிரோஜன்-153.

**பருத்தித்துறை சித்தி விநாயகர் பாடசாலை**

அ.அனுஷ்மன்-160, கி.கேசியா-160, சு.அகர்ணா -158, ரா.குணதீப்- 155, தி. அக்மிதா- 155, வி.ரமணராஜ்-143, ந.ஜெனிஸ்டன்-143.

**கரவெட்டி விக்னேஸ்வரா ஆரம்பப் பாடசாலை**

கெ.ரகுராஜ்- 159, ப. புனாயினி-154, இ. விதுர்சன்- 149, ப. தனோஜா- 149.

**தேவரையாளி இந்துக் கல்லூரி**

சு.சுகிர்தன்-162, சி.நிருசன்-164, ஆ.சாகித்தியா- 159, சி.திரவியா-148.

**கரவெட்டி ஞானாசாரியார் கல்லூரி**

ச.சாரங்கா -149, சி. ஸ்ரீரம்மியா- 144.

**கரவெட்டி மாணிக்கவாசகர் வித்தியாலயம்**

ந.விதுர்சன்- 169, ப.கோபிகா- 169, பா. பானுஜா- 158, க. கோபிகா- 158, பு.வித்சசி- 158, சி. கோகுலன்- 157, கு.தர்மினி- 156, வ. ஹரிராஜ்- 154, ப.திசானி- 151, பி.மிதுரா- 150, ஜெ. நிலாந்தி- 148, வ.அரிராஜ்- 147, வே. டிலக்சன்- 147, கி.சேயோன்-146, அ.அனோஜன்-146, வி.சிவகாந்- 145, மு.கீதனன்- 145, இ.மதுசா- 144, வே.மதிவேணி- 144, கி.நிதுர்சா- 144.

**வட இந்து மகளிர் கல்லூரி**

பு.பவுமியா- 172, ந.மிதுனா- 170, பு. டோபோராஜோய்- 161, பீ. யதீஸ்வர்யா- 161, பா. ஜெயமிதுலா-160, கி. கம்சாயினி- 159, பு. சுமித்தா- 158, ஸ்ரீ.விதுர்சினி-153, தே.தேவாம்பிகை- 152, ந.சந்தியா- 150, பு.கீர்த்திகா-146, ந. லக்சிகா- 145, ய.சங்கவி- 144, இ. சர்மினி-143, மா.மயூரி-142, பு.ரக்சாயினி- 142.

**ஆனைப்பந்தி மெ.மி.வித்தியாலயம்**

ஜெ.கிருஷிகன்- 187, து. மயூரன்- 155,அ வினோஜிகா- 154, நி. யனுஸ்ரன்- 148, ஜெ. டிலக்சன்- 145, சி. சுஜீபன்- 143, ஐ.ஜெயதிலகா- 142. (201-135-319)

*(முடிவுகள் தொடரும்)*

# சாவகச்சேரி பிரதேச சபையின் தேசிய வாசிப்பு மாத நிகழ்வு

நாவற்குழி,ஒக்.9

சாவகச்சேரி பிரதேச சபையின் கைதடி பொது நூலகம் தேசிய வாசிப்பு மாதத்தை முன்னிட்டு இம்மாதம் பலவித நிகழ்வுகளை நடத்தவுள்ளது.

நாளை ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணிக்கு கைதடி மத்தி வளர்மதி சனசமூக நிலையத்தில் வாசிப்பின் அவசியம் எனும் தலைப்பில் உரை நிகழ்த்தப்படவுள்ளது. வலி.கிழக்கு- கோப்பாய் பிரதேச செயலக சமூக சேவை உத்தியோகத்தர் இந் நிகழ்வில் வளவாளராகக் கலந்துகொள்ளவுள்ளார்.

அத்துடன் வீட்டில் 100 நூல்கள் எனும் கருப்பொருளுக்கமைய பொதுமக்களின் வீடுகள், சனசமூக நிலையங்கள், முன்பள்ளிகளிடையே புத்தகம் சேர்ப்பதற்கான போட்டிகள் நடத்தப்படவுள்ளன. அத்துடன் புத்தகம் சேர்ப்பது, அதன் பயன்பாடுகள் தொடர்பான விழிப்புணர்வுக் கருத்தரங்குகளும் நடத்தப்படவுள்ளன.

புத்தகம் சேர்க்கும் போட்டியில் வெற்றிபெறுபவர்களுக்கு வாசிப்பு மாத இறுதியில் பெறுமதிமிக்க பரிசுகள் வழங்கப்படவுள்ளன.

தனிநபர் தமது இல்லத்தில் குறைந்தது 100 நூல்களையாவது சேகரித்து அவற்றின் விவரப் பட்டியலை இம்மாதம் 20 ஆம் திகதிக்கு முன் கைதடி பொது நூலகத்தில் சமர்ப்பிக்க வேண்டும்.

கைதடி பிரதேசத்தில் வாழுவோர், மாணவர்கள், முன்பள்ளிகள், சனசமூக நிலைய அங்கத்தவர்கள் இப்போட்டிகளில் கலந்துகொள்ளலாம். (த-121)

# உண்மை எது? பொய் எது?



ஓர் ஊரில் ஒரு ராஜா இருந்தார். அவர் அடிக்கடி காட்டுக்குச் சென்று வேட்டையாடுவார். சில நண்பர்களையும் அழைத்துக் கொண்டு போவார். காட்டுக்குச் சென்றதும் ஆளுக்கு ஒரு பக்கமாகப் போய் வேட்டையாடி பொழுதுசாய்ந்த பின்புதான் திரும்புவார்கள்.

அரசன் அவரவர் வீரத்திற்கு ஏற்ப பரிசில்கள் வழங்குவார்.

ஒருவன் தன் வீரத்தைப் பற்றிச் சொல்ல ஆரம்பித்தான்.

''அரசே நேற்று எனக்கு நேரே ஒரு சிங்கம் வாயைத் திறந்து கொண்டு வந்தது. உடனே ஒரு கல்லை குறிவைத்து எறிந்தேன். அந்தச் சிங்கம் என்னைப் பார்த்துப் பயந்து ஓடியது'' என்றான்.

''ஆஹா'' எல்லோரும் கைதட்டினார்கள்.

மற்றவன் ஆரம்பித்தான்.

நான் போன வழியிலே மலைப்பாம்பு கிடந்தது. அது என்னை விழுங்கப் பார்த்தது. நான் என்ன செய்தேன் தெரியுமா? அதன் வால்களை வளைத்து சேர்த்து முடித்து விட்டேன்.

''அற்புதம்'' என்றுசொல்லி கைதட்டினார்கள்.

அடுத்தபடியாக மூன்றாவது ஆள் ஆரம்பித்தான்.

''ஒரு ஆற்றிலே இறங்கிக் குளித்தேன். யாரோ காலைப் பிடித்து இழுப்பது போல் இருந்தது. பார்த்தால் பெரிய முதலை!

உடனே நான் பாய்ந்து அதன் முதுகிலே இருந்து கரைக்கு நீந்த வைத்தேன். கரைக்கு வந்ததும் குதித்துவிட்டேன்.'' என்றார்.

அடடா எப்படிப்பட்ட வீரம் எல்லோரும் கைதட்டினார்கள். அடுத்தவன் மன்னா! நான் போன இடத்தில் ஒரு கரடி என்னைத் துரத்த ஆரம்பித்தது. நான் ஒரு மலை உச்சிக்கு வந்துவிட்டேன். ஒரு அடி வைத்தாலும் அது பாதாளத்துக்கே விழ வேண்டியதுதான். ஒரு பெரிய கழுகு அந்தப் பக்கமாக வந்தது. உடனே எழும்பி அதன் காலைப்பிடித்து தொங்கிக் கொண்டே வந்தேன். நல்ல இடம் வந்ததும் குதித்துவிட்டேன்''

எல்லோரும் கைதட்டினார்கள்.

கடைசியாக ஒருத்தன் எழுந்தான்.

''அரசே நான் போன வழியிலே ஒரு பெரிய யானை குறுக்கே வந்தது. நான் பயப்படவில்லை. என்ன செய்தேன் தெரியுமா? அதன் வாலைப் பிடித்துத் தூக்கினேன். தலைக்கு மேலே தூக்கி சுற்றி எறிந்தேன். வேகமாகப் போக ஆரம்பித்தது. இன்னும் கூட போய்க்கொண்டே இருக்கு கீழே விழவில்லை''

இதைக் கேட்டதும் ராஜாவிற்கு கோபம் வந்தது.

''யானையை நீ வாலைப் பிடித்துத் தூக்கியதை நான் நம்ப வேண்டுமா?''

அவன் பணிவாகப் பதில் சொன்னான்.

''அரசே சிங்கத்தின் வாயில் கல் மாட்டியதையும் மலைப்பாம்பு வாலை முடித்ததையும், முதலை சவாரியையும் , கழுகு பறந்ததையும் நம்பும்போது நான் சொன்னதை மட்டும் ஏன் நம்பக் கூடாது?''

பொய் சொன்னவர்கள் தலையைத் தொங்கப் போட்டார்கள்.

''நீங்க எல்லோருமே என்னை முட்டாள் ஆக்கிவிட்டீர்கள். கடைசியாக பேசியவன்தான் எது உண்மை, பொய் எனப் புரிய வைத்தான். உண்மையான் தைரியசாலி '' என்று சொல்லி பரிசைக் கொடுத்துப் பாராட்டினார்.

**கோ.சுவாமிநாதன்.**

# பக்திப் பண்ணையில் வீர விவசாயம்

அது ஒரு கதலி வளரும் வாழைக்காடு. உரோமங்கள் அடர்ந்த முதிய குரங்கு ஒன்று முணுமுணுத்தபடி அடக்க ஒடுக்கமாய் தியானத்தில் இருந்தது.

மனைவிக்குப் பூப்பறிப்பதற்காக அந்த வனத்தின் வழியே ஒரு முரட்டு மனிதன் வருகிறான்.

வழியில் ஏதோ கிடக்கிறது. மிதிக்காமல் போகச் சொன்னது இதயம். தாண்ட முடியாதபடி பண்பாடு தடுக்கிறது. அது அந்தக் குரங்கின் வால்.

''கிழட்டுக் குரங்கே வாலைச் சுருட்டு. இப்படியா வழியில் நீட்டிக் கொண்டு இருப்பது.'' உறுமினான்.

அது வேறுயாரும் அல்லர். அனுமனும் பீமனும்தான். அனுமனுக்கு பீமனைத் தெரியும். ஆனால் பீமனுக்கு தெரியாது அந்தக்குரங்கு அனுமன்தான் என்று.



அனுமன் விழிகளைத் திறந்தார். ''தம்பி நானே சொர்க்கத்துக்குப் போக முடியாமல் இருக்கிறேன் நீ அனுப்பி வைக்கிறாயா? என்னைக் கிழம் என்கிறாயா? நாளைக்கு உனக்கு முதுமை வராதா?முதுமை வந்தபடியால்தான் உறுப்புக்கள் செயல் இழந்து போய்விட்டன. நீயே நகர்த்தி விட்டுப் போ. ''பீமன் அலட்சியமாக வாலை அசைத்தான் முடியவில்லை. கண்ணனை வேண்டினான். கருணையில் குரங்கின் சுயரூபம் தெரிந்தது. அண்ணா எனக் கதறி காலில் விழுந்தான்.

''தம்பி நீ உன்னை மட்டும் நம்பினாய் இறைவனையும் நம்பினால் உனக்கு ஆசியும் வெற்றியும் கிடைக்கும்'' என்றார் அனுமார்.

**சுகி.சிவம்.**

# மீள் குடியேற்றப் பிரதேசப் பிள்ளைகளின் கல்வி எதிர்பார்ப்புகள்

'கல்வி பிள்ளைகளின் பிறப்புரிமை'. இது மனித சமுதாயத்தின் இயற்கைப் பண்புகளிலொன்று. சமுதாயமொன்றின் குறிப்பிடத்தக்க மாற்றங்கள் கல்வியின் நோக்கங்களையும், முறைகளையும் காலங்காலமாக மாற்றி வந்துள்ளன. பிள்ளையொன்று பெறுகின்ற கல்வியானது தன்னையும் பிறரையும் முன்னேற்ற உதவும் கருவியாக விளங்கவேண்டும்.

மீள் குடியேற்றத்திற்குட்பட்ட மாணவர்கள் கல்வியைத் தமது முன்னேற்றத்திற்கும் வெளியுலகுடன் போட்டியிடுவதற்குமான கருவியாக கொள்வதுடன் தமது சமூகத்தின் அபிவிருத்திக்கான பிரதான ஆயுதமாகவும் கொள்ளவேண்டும். துரிதமாக மாறிவரும் சமூகத்தில் ஒத்துப்போகக் கூடிய தன்மையுடைய முழு நபராக ஆக்குவதே கல்வியின் விளைவாக இருக்க வேண்டும்.

ஏனைய பிரதேசங்களின் கல்வி விளைவுகளை மீள் குடியேற்றப் பகுதிகளிலும் ஏற்படுத்த வேண்டும் என்பது மீள்குடியேற்றப் பிரதேசங்களிலுள்ள பிள்ளைகளின் எதிர்பார்ப்பாகவுள்ளது. பொருளாதார, சமூக அபிவிருத்தியில் கல்வி பிரதான பங்கு வகிக்கின்றது. இது மீள் குடியேற்றப் பகுதி வாழ் மாணவர்களின் எதிர்காலத்திற்கும் விதிவிலக்கானது அல்ல.

மீள்குடியேற்றப் பிரதேசங்கள் பெரும்பாலும் நகரப் பகுதிகளாகவன்றி கிராமங்களாகவே உள்ளன.

இவ்வாறு இனம்காணப்பட்ட இடங்கள் பெரும்பாலும் விவசாயப் பிரதேசங்களாகவே உள்ளன. இப் பகுதிப் பிள்ளைகளின் பெற்றோர்களில் அநேகமானவர்கள் விவசாயிகளாகவே உள்ளனர். இங்குள்ள கிராமப்புறப் பாடசாலைகள் அப்பகுதி விவசாயிகளின் பங்காளியாகவே திகழ வேண்டும். இந்த விவசாயப் பெற்றோர்கள் படிப்பறிவில்லாத, மூடக் கொள்கையுள்ளவர்கள் அல்லர். அவர்கள் தன்மானமுள்ளவர்களாகவும், தமது பிரதேச, கலாசார, குல தனித்துவங்களை இழக்க விரும்பாதவர்களாகவும் இருக்கிறார்கள்.

இடப்பெயர்வுக்கு முந்திய நிலையில் இப்பகுதிப் பாடசாலைகள் மாணவர்கள் உயர்கல்விக்குள் நுழைவதற்கான கல்வியைச் சிறப்பாக வழங்கியிருந்தன. அந்த வேளையில் இப்பகுதிப் பாடசாலைகள் சுயதொழிலுக்கான வழிகாட்டுதல்களை அல்லது செய்முறைத் தொழிலுக்கான அல்லது தொழில்நுட்ப வாழ்க்கைக்கான வழிகாட்டியாக இருக்கவில்லை என்று கூறுவது நியாயமாகாது. இப்பகுதிப் பாடசாலைகள் அவ்வேளையில் செய்த கல்விச் சேவைகள் காலத்தின் வளர்ச்சியாகவே கருதவேண்டும். இருக்கும் வளத்தைக் கொண்டு இவை சிறப்பாகச் செயலாற்றி வந்தன. தற்போது காலவளர்ச்சியின் அடிப்படையில் இப்பாடசாலைகளின் பணிகள் மேலும் சிறப்பாக இருக்க வேண்டும் என்று எதிர்பார்க்கப்படுகின்றது.

அத்துடன் பின்தங்கிவிட்டோம் என்ற எண்ணம் செயற்படும் வேகத்தைத் துரிதப்படுத்தும் என்பதால் மீள்குடியேற்றப்பிரதேசக் கல்வியில் ஒரு விறுவிறுப்புத் தென்பட வாய்ப்புள்ளது. தமது பிரதேசத்தை வெளியுலகுடன் இணைத்துக் கொள்ள கல்வியை ஒரு கருவியாக இவர்கள் பயன்படுத்த வேண்டும்.

இந்தச் சிறிய தீவில் கல்வியை ஒரு முன்னேற்றத்துக்கான முக்கியமான - உபாயமாக முதன் முதலில் கையாண்ட நாம் காலங்காலமாகப் பல சவால்களையும் எதிர்கொண்டு நாட்டுக்கு உள்ளேயும் வெளியேயும் நல்ல பெயரைப் பெற்றது போல இந்த இடப்பெயர்வு, மீள்குடியேற்றம் என்ற தடைகளையும் தாண்டிக் கல்வியுலகில் எம் நற்பெயரைக் காப்பாற்ற வேண்டியுள்ளது.



தேவையேற்படின் மீள்குடியேற்றப் பாடசாலைகளின் பழைய மாணவர்களில் உயர்கல்விக்குள் நுழைந்து இதுவரை வேலைவாய்ப்பைப் பெறாதவர்களின் உதவியுடன் கற்பித்தலுக்கான மேலதிக ஆளணியினரை இனங்காண வேண்டிய பொறுப்பு பாடசாலைச் சமூகத்துக்கு உண்டு.

உலகமயமாக்கலின் பெரும் விளைவுகளில் ஒன்றாகக் கருதப்படுகின்ற இலாபத்தில் மனிதர்களுக்கு உண்டாகின்ற வேட்கை கட்டுமீறிச் செல்லும் சந்தர்ப்பங்களில் தார்மீக நெறிமுறைகளும், நீதி மற்றும் மனித உரிமைகளுக்குள்ள மதிப்பும் சோதனைக்குள்ளாகின்றபோது இந்த மாணவர்கள் நிலைமைகளை எதிர்கொள்ளும் சாதுரியத்தைப் பெற்றவர்களாக இருக்கக் கல்வி உதவ வேண்டும் என்று எதிர்பார்க்கப் படுகின்றது.

மீள்குடியேற்றப் பிள்ளைகளின் பாதுகாப்பின்மை, நிச்சயமற்ற நிலைமை என்ற கசப்பான அனுபவங்களிலிருந்து முற்றாக விடுபடக் கூடிய கல்வி கற்கும் சூழ்நிலையொன்று அவசியமான தேவையாகவுள்ளது. யுத்தத்தின் பாதிப்புக்கள், இடப்பெயர்வுகளின் அலைக்கழிவுகள் இந்த மாணவர்களின் வாழ்க்கைப் போக்கில் பெரும் மாற்றங்களை ஏற்படுத்தியுள்ளன. இவை பன்முகப்பட்ட துன்பங்களாகும். உள நெருக்கீடுகள், தொழிலிழப்புக்களால் குடும்பங்களில் ஏற்பட்ட சச்சரவுகள், மீள முடியாத வறுமை நிலைமைகளின் தாக்கங்களை உய்த்துணர முடியாமையினால் ஏற்படும் அதீத கற்பனையால் வரும் கையாலாகாத் தனமான தன்னம்பிக்கையின்மை என்பன இந்த மாணவர்களின் வாழ்வில் பாதிப்பை ஏற்படுத்தா வண்ணம் கல்விச் செயற்பாடுகளை உருவாக்க வேண்டியது பெரும் பொறுப்பாகின்றது.

**பாடசாலைச் சமூகத்தின் பங்கு**

இந்த மாணவர்களைப் பரீட்சைக்குத் தயார்ப்படுத்துதல், மன உளைச்சல்களைப் போக்குதல் என்ற இரண்டையும் சமாந்தரமாக மேற்கொள்ள வேண்டிய நிலையில் அதிபர், ஆசிரியர்கள் உள்ளனர். பிள்ளைகளுக்கு அனைத்து வகையிலும் நம்பிக்கையை ஊட்டுவதில் பாடசாலை என்ற நிறுவனம் முக்கிய பங்காற்ற வேண்டும்.

தாம் வழிபட்ட கோயில்களும்,தாம் வசித்த வீடுகளும், தாம் கல்வி பயின்ற பாடசாலைகளும் தரை மட்டமாகக் கிடப்பதைப் பார்க்கும் பிள்ளையொன்று இயல்பாகவே நம்பிக்கையிழந்து விரக்தி நிலைக்குள்ளாகும்.

இடப்பெயர்வு, மீள்குடியேற்றம் என்ற இயல்பு நிலைக்குப் புறம்பான நிலைமைகள் எமது கல்வியின் வேகத்தைக் கட்டுப்படுத்த விடாது முன்னேற வேண்டியதொரு கடப்பாடு பாடாசலைச் சமூகத்துக்கும், கற்கும் பிள்ளைகளுக்கும் இருப்பதை மறந்து விடக்கூடாது. தடைகளென்பது தாண்டுவதற்காகச் செதுக்கப்பட்ட படிகளன்றி வேறில்லை.

பாடசாலை அதிபர் நிர்வாகத்தில் மட்டுமல்லாது வகுப்பறைக் கற்பித்தலிலும் திறமையுடன் ஈடுபட வேண்டும். ஆற்றல் மிக்க பிள்ளைகளுக்கு மட்டுமல்லாமல் மெல்லக் கற்கும் பிள்ளைகளை வழிப்படுத்துவதிலும் அதிபரின் நேரடி மேற்பார்வையும், பங்களிப்பும் அவசியமாகின்றது.

மீள்குடியேற்றப் பிரதேசங்களில் ஒரு பசுமைப் புரட்சியாளனாகச் செயற்படவேண்டிய கடமையும் அதிபருக்கு இருக்கின்றது. போரினால் சிதைவடைந்த மரங்களின் தேவையை ஈடுசெய்வதற்கு மரங்களை நாட்டுதல் எதிர்காலச் சந்ததியினரின் வளம் மிக்க வாழ்வுக்கு அவசியமாகின்றது. மீள்குடியேற்றக் கிராமங்களில் கண்ணிவெடி அபாய விழிப்புணர்வை ஏற்படுத்த வேண்டிய தார்மீகப் பொறுப்பு பாடசாலை அதிபருக்கு உண்டு. கண்ணிவெடிகள் எதிர்பாராத சந்தர்ப்பங்களில் உயிர்ச் சேதங்களை விளைவிக்கக் கூடியன. பாடசாலைப் பிள்ளைகள் வெடிபொருள்களை விளையாட்டாகக் கையாள்வதனால் ஏற்பட்ட உயிரிழப்புக்கள் பலவற்றை நாம் அறிந்திருக்கின்றோம். மேலும் இத்தகைய செய்திகளைக் கேள்விப்படாத நிலைமையை உருவாக்க வேண்டும்.

இதனோடிணைந்ததாக டெங்கு ஒழிப்பு நடவடிக்கையிலும் அதிபரின் கவனம் தேவையானதாகவுள்ளது. டெங்கு ஒரு உயிர்கொல்லி நோயாகும். வருகின்ற பெருமழைக்கு முன்னர் மீள்குடியேற்றப் பிரதேசங்களில் வேகமான பிரசாரங்களால் நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட வேண்டிய அவசிய நிலைமையொன்றுள்ளது.

கல்விச் சுற்றுலாக்கள், களப்பயணங்கள் போன்றவற்றை ஏற்பாடு செய்வதன் மூலம் மீள்குடியேற்றப் பிள்ளைகளின் உற்சாகத்தை அதிகரிக்க முடியும். இது இவர்களைக் கல்வியின் பால் நாட்டமும் - ஈடுபாடும் கொள்ள வைக்கும். ஏனைய பிரதேசப் பாடசாலைகளைத் தரிசிக்கும் சந்தர்ப்பங்கள், தாம் எந்த நிலையில் நிற்கிறோம் என்பதை அறியவும் இயல்பான முன்னேற்றத்துக்கு இன்னும் எவ்வளவு தூரம் பயணிக்க வேண்டும் என்பதை ஒப்பிட்டறியவும் உதவுகின்றது.

ஒரு முகாமையாளர் என்ற அடிப்படையில் அதிபரும், வருங்காலச் சந்ததியினரை உருவாக்குபவர்கள் என்ற ரீதியில் ஆசிரியர்களும் உற்சாகத்துடன் செயற்பட வேண்டியவர்களாக உள்ளனர். இவர்கள் உற்சாகத்துக்கும், பதகளிப்பு - பதட்டத்துக்கும் இடையேயுள்ள வேறுபாட்டைச் சரியாகப் புரிந்து கொள்ள வேண்டும். புகையிரதம் புறப்படுவதற்குப் போதிய நேரமிருந்தும் புகையிரத நிலையத்தை நோக்கி ஓடும் ஒரு பிரயாணியைப் பார்த்து சக பிரயாணியும் ஓடுவது போல பதற்றம் என்பது தொற்றிக் கொள்ளக் கூடியது. நிர்வாகிகள் பதட்டப்பட்டால் ஆசிரியர்கள், மாணவர்களின் செயற்பாட்டிலுள்ள காத்திரம் குறைவடையும்.

அதிபர், ஆசிரியர்கள் கடமைக்காகத் தொழில்புரிதல் என்பதைத் தவிர்த்து மனப்பூர்வமாக தமது தொழிலுடன் ஒன்றுகின்ற போதுதான் திட்டமிட்ட வேலைத் திட்டங்கள் சரியான வேளையில் பூர்த்தியடைய முடியும். பாடசாலைச் சமூகத்தின் அர்ப்பணிப்புமிக்க சேவைகள் - பாடசாலையில் கல்வி பயிலும் மாணவர்களின் எதிர்காலத்துக்கு மட்டுமல்லாமல் இதுவரைக்கும் இந்த மண்ணில் ஜனனிக்காத உயிர்களின் எதிர்காலச் சுபீட்சத்துக்கும் அடிப்படையாக அமையும்.

மீள்குடியேற்றப் பிரதேசப் பிள்ளைகளின் கல்வி எதிர்பார்ப்பென்பது பாடசாலை உயர் சமூகத்தினதும், வெளிச் சமூகத்தினதும், பெற்றோரினதும் இறைமையுள்ள அரசாங்கத்தினதும்,தொண்டு நிறுவனங்களினதும் பெரும் ஒத்தாசையுடன் வென்றெடுக்கப்பட வேண்டியது காலத்தின் கட்டாயமாகவுள்ளது. *

**யோகராசா ஜெயகாந்தன்**
**அதிபர்,**
**யா/சகலகலாவல்லி வித்தியாலயம்**
**மறவன்புலோ, சாவகச்சேரி.**

## வீடு வாடகைக்குத் தேவை

இரண்டு பிள்ளைகளுடன் கூடிய குடும்பத்திற்கு வீடு வாடகைக்குத் தேவை.
யாழ்.மாநகர சபைக்குள் விரும்பத்தக்கது.
தொடர்பு:- 0777222262

## முன் அறை வாடகைக்கு

திருநெல்வேலி வியாபார ஸ்தாபனங்களுக்கு அண்மையில் அமைதியான சூழலில் அமைந்துள்ளது.
தொழில் புரிபவர் விரும்பத்தக்கது.
தொடர்பு: 0772517640 (104365)

## கோழிக்குஞ்சு விநியோகம்

BAHIRAHA No.1 புறொயிலர் கோழிக்குஞ்சுகள் 09.10.2010 காலை 8 மணிக்கு விநியோகிக்கப்படும். பதிவுகளை முன்கூட்டியே மேற்கொள்ளவும்.

**ராஜீவ்,**
நவாலி வீதி, ஆனைக்கோட்டை,
தொ.பே.இல:- 2222867, 0776090926.

## ஆங்கிலக் கல்வி

பாடசாலை மாணவ, மாணவிகள், தொழில் தேடுவோர், தொழில் புரிவோர், வெளிநாடு செல்லவிருப்போர் அனைவருக்கும் அவர்கள் அறிவுக்கேற்ப யாழ். நகர் சுண்டிக்குளி மகளிர் கல்லூரி மற்றும் வேம்படி மகளிர் கல்லூரிக்கு அண்மித்த பிரதேசங்களில் வீடுகளுக்கு வந்து 25 வருடங்களுக்கு மேலான அனுபவமுள்ள ஆசிரியரினால் ஆங்கில பாடம் அல்லது ஆங்கிலமொழிமூல பாடங்கள் கற்பித்துக் கொடுக்கப்படும். ஒரு மணித்தியாலம் ரூபா நூறு மட்டுமே.
தொடர்பு கொள்ள வேண்டிய தொலைபேசி இலக்கம்: 0777110872.
(தினமும் மாலை 7மணியின் பின்னர் தொடர்பு கொள்ளவும். அல்லது SMS அனுப்பவும்)

# உடும்புடன் சென்றவருக்கு ரூ.10 ஆயிரம் அபராதம்!

தென்மராட்சி, ஒக்.9

உடும்பு கொண்டு சென்ற நபருக்குச் சாவகச்சேரி நீதிமன்றில் கடந்த புதன்கிழமை 10 ஆயிரம் ரூபா அபராதம் விதிக்கப்பட்டது. காணி துப்புரவாக்கிய வேளையில் பிடிக்கப்பட்டதாகக் கூறப்படும் உடும்பைக் கட்டி எடுத்துச் சென்ற வேளையில் பிடிக்கப்பட்ட நபருக்கு எதிராக கொடிகாமம் பொலிஸார் மிருகவதை சட்டத்தின் கீழ் நீதிமன்றில் வழக்குத் தாக்கல் செய்தனர். இந்த வழக்கை விசாரித்த நீதிவான் என்.எம்.எம்.அப்துல்லா, குறித்த நபர் குற்றத்தை ஒப்புக் கொண்டதையடுத்து 10 ஆயிரம் ரூபா அபராதம் விதித்து உடும்பை விடுவிக்குமாறும் உத்தரவிட்டார்.

(ஓ-207)

## மணமக்கள் தேவை

B.Sc.(Computer Science) MCSA, MCSE 31 வயதுடைய, அரச நிறுவனத் தில் பணி புரியும் மணமகனுக்கு உயர்தரம் படித்த இந்து கௌரவ குடும்பத்தைச் சேர்ந்த மணமகள் தேவை.
தொடர்புக்கு: 0712924878. (104357)

பல்கலைக்கழக மாணவர்களுக்கு

## Free English Workshop

காலம்: 09.10.2010 சனி (இன்று)
பிரிவுகள் (நேரம்): 1-2, 2-3, 3-4, 4-5, 5-6
(ஏதாவதொரு பிரிவில் கலந்துகொள்ளலாம்)

அனுமதி இலவசம்

Keyboard, சான்றிதழ், Guide இலவசம்

**MyWay English**
182, Stanley Rd, Jaffna. Ph : 0773363456

## கணனி விற்பனைக்கு

நல்ல நிலையில் உள்ள P4 1.7 GH, Computer full set (17' flat monitor) மற்றும் கணனிப் பொருள்கள் என்பன ஒருவருட உத்தரவாதத்துடன் உடன் விற்பனைக்குண்டு. விலை 15750/=
தொடர்பு: **SKY Computer System**
162, Main Street, Jaffna.
(பெ வீற் ரீரீஸ் மோட்டார் கொம்பனிக்கு முன்னால்) தொ.பே:- 0212221417

## யாழ். நகர ஹோட்டலின் மதிய உணவில் அட்டை!

யாழ்ப்பாணம், ஒக்.9

யாழ்.நகரப் பகுதியிலுள்ள உணவகம் ஒன்றில் மதிய உணவில் 'அட்டை' காணப்பட்டதாகக் கூறப்படும் விடயம் தொடர்பாக பொதுச் சுகாதாரப் பரிசோதகர் ஊடாக யாழ். நீதிமன்றுக்கு கொண்டு வரப்பட்டுள்ளது.

குறித்த உணவகத்தில் நேற்று முன்தினம் மதிய உணவு உட்கொள்ளச் சென்ற வாடிக்கையாளர் ஒருவருக்கு வழங்கப்பட்ட உணவிலேயே அட்டை காணப்பட்டுள்ளது.

இதனை பிரஸ்தாப நபர் மாநகர சபையின் பொதுச்சுகாதாரப் பரிசோதகரின் கவனத்துக்குக் நிலையில் வந்திருந்தார்.

இது தொடபாக வழக்கு விசாரணை இன்று எடுத்துக் கொள்ளப்படவுள்ளது.

(ஓ-10-9)

## நாய் குறுக்கே பாய்ந்ததில் கரவெட்டியில் விபத்து

யாழ்ப்பாணம், ஒக். 8

கரவெட்டி கலிகைச் சந்தியில் நேற்றுமுன் தினம் இடம்பெற்ற மோட்டார் சைக்கிள் விபத்தில் ஒருவர் படுகாயமடைந்த நிலையில் யாழ். போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார். அரசடி, புதுத்தோட்டம் பகுதியைச் சேர்ந்த ஈ.சிவராஜா (வயது 48) என்பவரே காயமடைந்தவர் ஆவார்.

நாய் குறுக்கே பாய்ந்ததால் மோட்டார் சைக்கிளில் இருந்து சறுக்கி வீழ்ந்ததில் அவர் படுகாயமடைந்ததாகத் தெரிவிக்கப்பட்டது.

(ஓ-319)

## காணி விற்பனைக்கு

A-9 கண்டி வீதியில் கிளிநொச்சி அரச வைத்தியசாலை முன்பாக வியாபார நிலையங்களுக்கேற்ற காணி 35அடி×65 அடி அளவில் விற்பனைக்குண்டு.
தொடர்புகளுக்கு:- 0776910573, 021 222 8637

## காணி விற்பனைக்கு

சுதுமலை தெற்கு, மாவடி வீதியில் (தாவடி, மானிப்பாய் வீதியிலிருந்து 100m தூரத்தில்) 4 பரப்பு 5.71 குழி, தனிக்கிணறு, வான்பயிர்களும் உள்ள காணி விற்பனைக்கு உண்டு.
தொடர்பு: 0777111389. (104352)

நீங்கள் பீனிசம், பீனிச வாய்வு இளநரை, தலையிடி, தலைப்பாரம், மூக்கினால் இரத்தம் வடிதல், காதடைப்பு, கண்மங்கல் என்பவற்றால் அவதிப்படுகிறீர்களா ?
இதோ பாவியுங்கள்
கண்ணுக்குக் குளிர்ச்சியும் முகத்திற்கு அழகும் உண்டாக்கி கூந்தலை நீளமாகவும் கறுப்பாகவும் அழகாகவும் வளரச்செய்யும் சித்த ஆயுர்வேத முறைப்படி தயாரிக்கப்பட்ட

**சித்தாரா பொன்னாங்காணித் தைலம்**

பொன்னாங்காணித் தைலம் வாங்கும்போது வர்ணமூடியுடன் சித்தாரா டிஸ்பென்ஸரி வைத்திய முத்திரைக் குறியீடு உள்ளதா எனப் பொதி செய்யப்பட்ட பெட்டியைத் திறந்து சரிபார்த்து வாங்குங்கள்.

Manufactured By:
SITHARA PRODUCTS
Puttalam Road, Chilaw
(Reg.No:- 6382) AR/PR/No.228

யாழ்.மாவட்ட ஏகவிநியோகஸ்தர்:
சிவா நறுமணப்பூங்கா
இல.288, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
தொ.பே: 021 222 2567

(C/564561)

# மரண அறிவித்தல்

## திருமதி பொன்னுத்துரை இராசலட்சுமி (பத்தர்)



இலக்கம் 11, கன்னார ஒழுங்கை, நல்லூர், யாழ்ப்பாணத்தைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி பொன்னுத்துரை இராசலட்சுமி (வேளம்மா) கடந்த 05.10.2010 செவ்வாய்க்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற சுப்பையா பொன்னுத்துரை அவர்களின் அன்பு மனைவியும்காலஞ்சென்றவர்களான கதிரவேலு- மாணிக்கம் தம்பதியரின் ஏக புதல்வியும் காலஞ்சென்றவர்களான அப்பையா- செல்லாச்சி தம்பதியரின் அருமை மருமகளும் தனபாலன் (கனடா), பரமேஸ்வரன், சந்திரகுமார் (கனடா), உதயகுமார் (கனடா), தனலட்சுமி, நிர்மலாதேவி (ஜேர்மனி) ஆகியோரின் பாசமிகு தாயும் வர்ணகுலசிங்கம் (வெள்ளை அண்ணா), ரஞ்சன் (ஜேர்மனி), ஜெயந்தி, குமுதா (கனடா), சுதா (கனடா), சசி (கனடா) ஆகியோரின் பாசமிகு மாமியும் ஹேசிகா, பிரியங்கா, சஜீவன், சாகித்தியா, கஜானி, டோரிசா, ஹரீசா, மனிசா, டெனிசன், பவிசன், காயத்திரி, சங்கீத், ஜிந்துஜன், தமியா, றஜீவன், அனுசன் ஆகியோரின் அன்புப் பேர்த்தியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (10.10.2010) ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10.30 மணிக்கு அவரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக நல்லூர் செம்மணி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்: மகன்மார்:
தனபாலன் (கனடா), சந்திரகுமார் (கனடா),
உதயகுமார் (கனடா), பரமேஸ்வரன் (பரா).
மருமகன்மார்:
வர்ணகுலசிங்கம் (வெள்ளை அண்ணா, பிரியங்கா ஜுவலறி),
றஞ்சன் (ஜேர்மனி).

11, கன்னார ஒழுங்கை,
நல்லூர்,
யாழ்ப்பாணம்.

(104380)

# நீங்காத நினைவில் ஓராண்டு



அமரர்
**சிவசம்பு செந்தில்நாதன்**
(முன்னாள் இலங்கை வங்கி முகாமையாளர்)
மலர்வு: 26.09.1949
மறைவு: 20.09.2009
திதி:09.10.2010

அன்பாய் அறிவாய் அரவணைப்பால் அறமாய் அருளாய்
ஆன்மீகமாய் ஆயிரமாய் ஆற்றுப்படுத்தும் ஆற்றலின் ஆற்றலாய்
இலங்கை வங்கியின் இணையில்லா முகாமையில் இணைந்திருந்திர்
ஈகையில் சமூகத்தின் ஈடில்லாச் சேவையில் சிறந்துமிருந்த
உயர்திரு செந்தில்நாதன் அமரராகி ஆண்டொன்றானதையா.

கண்ணியமாய் கருணையாய் புண்ணியப் புருசனாய்
எண்ணியாங்கு புத்திரரை முந்தியிருந்திய தந்தையாய்
மண்ணுலகில் மாண்புமிகு மாதிரியான மாமனாய்
புண்ணியப் பயனான பேரனின் பாசப் பாட்டனாய்
திண்ணிய அளவையூர் முத்துமாரியின் தொண்டனாய்
விண்ணுலகுக்கு செந்தில்நாதன் சென்றடைந்து வருடமொன்றானதே
என்றென்றும் தங்கள் அடிச்சுவட்டைப் பின்பற்றி வாழும்

560, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.

குடும்பத்தினர்.

(104372)

**CSC** இன்
COMPUTER EDUCATION





**விஜயதசமி**
கல்வித்திருவிழா

**Vijayathasamy Offer**
**60%-75% Discount**
விஜயதசமி சிறப்புச்சலுகை
ISO 9001 : 2000 சர்வதேசதர அங்கீகாரம்

விஜயதசமி நன்நாளில் உங்களின் கொம்ப்யூட்டர் கல்வியை சிஎஸ்சி. உடன் ஆரம்பியுங்கள். முன்கூட்டியே எமது கிளைகளில் பதிவுகளை மேற்கொண்டு விஜயதசமி அன்று நடை பெறும் விசேட வகுப்புக்களில் கலந்து கொள்ளுங்கள்.

**CSC-ASIAN**
COMPUTER EDUCATION

2G, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம். T.P : 021-222 5677
கொடிகாமம் வீதி, நெல்லியடி. T.P : 021-2262399
230, 1ம் மாடி, கண்டி வீதி, சாவகச்சேரி. T.P : 021-2270267

**IELTS அவசியமில்லை**

**STUDY IN UK**
யாழ்.நகரில் மிகக் குறைந்த செலவில்...

லண்டனில் தரம் வாய்ந்த பல்கலைக்கழகங்கள், கல்லூரிகளில் உங்கள் உயர்கல்வியைத் தொடர்வதற்கு
★ கல்விக் காலத்திலேயே குடும்பத்தினரை U.K.க்கு அழைக்கும் வாய்ப்புகள்

★ Admission within 3 days
★ 100% Visa உத்தரவாதம் - ஆவணங்கள் சரியாக இருப்பது முக்கியம்
★ ஆகக் குறைந்த கல்வித் தகைமை(O/L)
★ U.K - B.A - Highly Trusted College

இறுதிச் சந்தர்ப்பத்துக்கு முந்திக்கொள்ளுங்கள்.

★அலுவலக நேரம்: திங்கள்- சனி வரை காலை 9.00- 4.00 வரை
★அலுவலக விலாசம்: 245, பலாலி றோட், கந்தர்மடம்.
★அனைத்து நாடுகளுக்குமான விசா பெறுவதற்குரிய ஆலோசனைகள்
★ **இலகு தவணைக் கொடுப்பனவு வசதிகள்**
★மிகக் குறைந்த கட்டணத்தில் Sponsor வசதிகள்



தொடர்புகளுக்கு: 0770871616

## தவறவிடப்பட்ட தங்க நகைகள்

யாழ்ப்பாணம்,ஒக்.9

யாழ்.பல்கலைக்கழகத்தில் நேற்று முன்தினம் நடைபெற்ற பட்டமளிப்பு விழாவின்போது தவற விடப்பட்ட தங்க ஆபரணம் ஒன்று கண்டெடுக்கப்பட்டு பல்கலைக்கழக விஞ்ஞானபீட மாணவர் ஒன்றியத்திடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது. தொலைத்தவர் விஞ்ஞான பீட மாணவர் ஒன்றியத்திடம் தொடர்புகொண்டு தகுந்த ஆதாரம்காட்டி நேரில் வந்து நகையைப் பெற்றுக் கொள்ளலாம் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. (ஒ-10)

* * *

யாழ்.பல்கலைக்கழக வளாகத்தில் கண்டெடுக்கப்பட்ட மற்றொரு நகை ஒன்று கொடிகாமம் ஐங்கரன் தொலைத்தொடர்பு நிலையத்தில் கையளிக்கப்பட்டுள்ளது.

தவறவிட்டவர்கள் உரிய ஆதாரம் காட்டி நகையைப் பெற்றுக் கொள்ளுமாறு அறிவிக்கப்பட்டுள்ளது. (ஒ-207)

## விளக்க மறியல்

யாழ்ப்பாணம், ஒக்.9

யாழ்ப்பாணம், கல்வியங் காட்டுப் பகுதியில் கஞ்சா கலந்த 'மதன மோகனக் கட்டி' என்று கூறப்படும் லேகியம் வைத்திருந்த ஒருவர் கோப்பாய் பொலிஸாரால் பிடிக்கப்பட்டு யாழ்.நீதிமன்றில் முன்னிலைப்படுத்தப்பட்டார்.

விசாரணைகளை மேற் கொண்ட நீதவான் குறித்த நபரை 14 நாள்கள் விளக்க மறியலில் வைக்குமாறு உத்தரவிட்டார். (ஒ-10-9)

## மாற்று வலுவுள்ளோருக்கு செயற்கை அவயங்கள்

யாழ்ப்பாணம், ஒக்.9

அங்கவீனமுற்றவர்களுக்கான உதவிப் பொருள்கள் கையளிக்கும் நிகழ்வு இன்று சனிக்கிழமை பிற்பகல் 3 மணிக்கு கோப்பாய் ஆசிரியர் பயற்சிக் கல்லூரியில் நடைபெறவுள்ளது.

இலங்கை இராணுவத்தின் 51ஆவது படையணியின் தலைமையகத்தின் நிர்வாகத்துக்கு உட்பட்ட அங்கவீனர்களுக்கு செயற்கைக் கால்கள், செயற்கை கைகள் மற்றும் சக்கர நாற்காலிகள் போன்ற சுமார் ஐந்து மில்லியன் ரூபா பெறுமதியான பொருள்கள் கையளிக்கப்படவுள்ளன.

கண்டியைச் சேர்ந்த அங்கவீன முற்றோர் நிறுவனத்தின் அனுசரணையுடன் நடைபெறவுள்ள இந்த நிகழ்வில் மேற்படி நிறுவனப் பிரதிநிதிகள் மற்றும் பிரதேச முக்கியஸ்தர்கள் பலர் கலந்துகொள்ளவுள்ளதாக யாழ். பாதுகாப்பு படைகளின் கப்டன் கே.யூ.பி.த. சில்வா அறிவித்துள்ளார். (ஒ-16)

## வயோதிபப் பெண்ணும் நேற்று முன்தினம் மரணம்

யாழ்ப்பாணம்,ஒக்.9

மருமகனின் தாக்குதலுக்குள்ளாகிப் படுகாயங்களுடன் யாழ். போதனா வைத்தியசாலையின் அவசர சிகிச்சைப் பிரிவில் சிகிச்சை பெற்று வந்த மாமியாரும் சிகிச்சை பலனின்றி மரணமானார்.

கடந்த மாதம் 30 ஆம் திகதி முல்லைத்தீவு, முள்ளியவளையில் குடும்பத் தகராறு காரணமாக அவரது மருமகன் மண்வெட்டியால் தாக்கியதில் இவரது மகளும்,தாக்கியவரின் மனைவியுமான தமிழ்வேந்தன் கலைச்செல்வி (வயது-32) சம்பவ தினமே மரணமானார்.

இடம் பெயர்ந்து இராமநாதன் நலன்புரி முகாமில் வசித்து வந்த வருமான அமரசிங்கம் இராசகுல தேவி (வயது-51) என்ற வயோதிப் பெண்ணே நேற்று முன் தினம் மரணமானவர் ஆவார். (ஒ-16)

## மாநகர சபை முன்பள்ளி அடுத்தமாதம் திறப்பு

யாழ்ப்பாணம், ஒக்.9

யாழ்.மாநகர சபையின் முன்பள்ளிக்கான புதிய மாதிரிக் கட்டடம் பூர்த்தியடையும் நிலையில் உள்ளது. அடுத்தமாதம் மேற்படி முன்பள்ளிக் கட்டடம் திறந்து வைக்கப்படவுள்ளதாக யாழ்.மாநகர முதல்வர் திருமதி யோகேஸ்வரி பற்குணராஜா தெரிவித்தார்.

'யுனெப்ஸ்' ஹேமாஸ் நிறுவனங்கள் இணைந்து அமைத்த புதிய மாதிரி முன்பள்ளிக் கட்டடம் மூன்று செயற்பாட்டறைகளைக் கொண்டதாகவும், சிறுவர்களுக்கு வசதியானதாகவும் அமைக்கப்பட்டுள்ளது. (த-7)

# சிறுமிகளுக்கு விவாகப் பதிவு செய்தால் பதிவாளர்களுக்குக் கடும் தண்டனை

## எச்சரிக்கிறார் பதிவாளர் நாயகம்


கொழும்பு, ஒக்.9

18 வயதுக்குக் குறைந்த பெண்பிள்ளைகள் தொடர்பான விவரங்களைப் பதிவுசெய்யும் விவாகப் பதிவாளர்களுக்குக் கடுமையான தண்டனைகள் வழங்கப்படுமென பதிவாளர் நாயகம் ஈ.எம். குணசேகர அறிவித்துள்ளார்.

ஏற்கனவே, இவ்வாறு சட்டத்துக்கு முரணான விதத்தில் செயற்பட்டுள்ள 20 விவாகப் பதிவாளர்கள் பணிநீக்கம் செய்யப்பட்டுள்ள பிறப்பு, இறப்பு மற்றும் விவாகப் பதிவுகளைச் செய்யும் பதிவாளர்கள் 1500 பேர் செயற்படுவதாகவும்,சிறுமிகளின் விவாகங்களைப் பதிவு செய்யும் பாரதூரமான சம்பவங்கள் தொடர்பாக பொலனறுவை, வெலிக்கந்தை மற்றும் பதுளை பிரதேசங்களிலிருந்து தகவல்கள் கிடைத்துள்ளதாகவும் மாவட்டச் செயலாளர்களிடம் அது தொடர்பான அறிக்கைகளைக் கோரியுள்ளதாகவும் தெரிவித்தார்.

18 வயதுக்குக் குறைந்த பெண்களின் விவாகங்களைப் பதிவு செய்வது சட்டத்துக்கு முரணானது என்பதை வலியுறுத்தும் பணிப்புரைகளை உள்ளடக்கிய சுற்று நிரூபமொன்று வெளியிடப்பட்டுள்ள நிலையில் அவ்விதமான செயற்பாடுகளில் ஈடுபடும் விவாகப் பதிவாளர்களுக்கு எதிராகக் கடும்தண்டனை வழங்கப்படவுள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

விவாகப்பதிவு தொடர்பான சட்டங்கள், விதிகள் உள்ளடக்கிய புதிய சுற்று நிரூபமொன்றை மீளவும் வெளியிடுவதற்கு பதிவாளர் நாயக அலுவலகம் நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (த-22)



நவாலி கிழக்கு முதியோர் சங்கத்தினருடன் மானிப்பாய் இலங்கை வங்கி கிளையினர் வங்கியின் செயற்பாடுகள் பற்றிய கருத்தரங்கில் வங்கியின் முகாமையாளர் க.இலட்சுமணசர்மா முதியவர் ஒருவருக்கு சுடுதண்ணீர் போத்தலொன்றை வழங்குவதைப் படத்தில் காணலாம்.

*(படம்:- நவாலி செய்தியாளர்)*

## தேங்கியுள்ளது கழிவுநீர்; சுகாதாரச் சீர்கேட்டு அபாயம்!

கொழும்புத்துறை, ஒக்.9

யாழ்.ஆஸ்பத்திரி வீதியில் வைத்தியசாலைக்கும் சிவில் அலுவலகத்திற்கும் இடைப்பட்ட பிரதான கழிவுநீர் வாய்க்கால் நீரோட்டம் தடைப்பட்டு கழிவுநீர் தேங்கி நின்று சுகாதாரச் சீர்கேடுகளை விளைவிப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இக்கால்வாயில் இடையிடையே குப்பை கூழங்களும் பெரிய புற்களும் வளர்ந்து கழிவுநீர் கடலுக்குச் செல்வதைத் தடுத்து வருகின்றன.

தாதியர் பயிற்சிக் கல்லூரி, சிவில் பாதுகாப்பு அலுவலகம் என்பனவற்றின் முன்பாகச் செல்லும் இக்கால்வாயில் நீர் தேங்கி நிற்பதால் அப்பகுதிகளில் கடமை புரிவோரும் பயணிகளும் பெரும் அசௌரியங்களை சந்தித்து வருகின்றனர். நுளம்புகள் பெருகும் அபாயமும் காணப்படுவதாகத் தெரிவிக்கப்படுகிறது. (த-135)

# ஒரு நாட்டின் சமுதாயக் கட்டமைப்பை ஸ்திர நிலையில் வைத்திருக்கும் மகத்தான பொறுப்பு ஆசிரியர்களிடம்

## ஆசிரியர் தின நிகழ்வில் அரச அதிபர் உரை

கொழும்புத்துறை, ஒக். 9

ஒரு நாட்டின் சமுதாய கட்டமைப்பை ஸ்திரமான நிலையில் வைத் திருக்கும் மகத்தான பொறுப்பின் பெரும்பங்கு ஆசிரியர்களின் கையில் உள்ளது. அழகியதோர் சமுதாயத்தின் சிற்பிகளாக மாணவர்களை உருவாக்கும் ஆசிரியர்கள் இறைவனுக்கு சமமானவர்கள்.

கனகரத்தினம் மத்திய மகா வித்தியாலயத்தில் கடந்த 6 ஆம் திகதி மாலை நடைபெற்ற ஆசிரியர் தின விழாவில் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்டு உரையாற்றும் போது யாழ்.அரச அதிபர் திருமதி இமெல்டா சுகுமார் இவ்வாறு தெரிவித்தார்.

கல்லூரி அதிபர் வே.ஞானகாந்தன் தலைமையில் நடைபெற்ற ஆசிரியர்தின விழாவில் உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அரச அதிபர் மேலும் உரையாற்றும் போது தெரிவித்தவை வருமாறு:-

இந்தப் பாடசாலையில் என்னுடன் படித்தவர்கள் பலர் பட்டதாரிகளாக அரச அதிகார பொறுப்புகளில், வெளிநாடுகளில், பல்துறைதொழில்களில் பிரகாசிக்கிறார்கள். இதே மேடையில் மாணவியாகப் பங்குபற்றிய நிகழ்வுகள் நண்பர்களின் நீங்காத நினைவுகளை மீட்டிப் பார்க்கிறேன்.அன்றிருந்த ஆசான்களின் அளப்பரிய சேவைதான் எம்மை இந்த உயர் நிலைக்கு உயர்த்தியது. எங்களைச் சுமந்த ஆசிரியர் திலகங்களையும் கல்விக் கூடங்களையும் சுமக்கும் பொறுப்பு எங்களுக்கும் உண்டு. இப்பாடசாலையின் குறைகளை நிறைவேற்றுவதில் பழைய மாணவி என்ற வகையில் முனைப்புடன் செயற்படுவேன் - என்றார்.

சிறப்புவிருந்தினர்களாக யாழ்.நகர முதல்வர் திருமதி யோ.பற்குணராசா, யாழ். வலயக் கல்விப் பணிப்பாளர் திருமதி அவேதநாயகம் ஆகியோரும் கலந்து கொண்டனர்.



விசேட தேவையுடைய மாணவர்களுக்கு கற்றல் உபகரணங்களும் வழங்கப்பட்டன. (த-135)

## சிறுவர்களுக்கான மாகாண மட்டப் போட்டி

யாழ்ப்பாணம், ஒக். 9

ஆரம்பக்கல்வி மாணவர்களுக்கான மாகாண மட்டப் போட்டிகள் இன்று சனிக்கிழமை வவுனியா வில் நடைபெறவுள்ளன. இதில் வலய மட்டத்தில் முதலாம் இடத்தைப் பெற்ற மாணவர்கள் மாத்திரமே கலந்துகொள்ள முடியும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

சிறுவர் நாடகம் இன்று சனிக்கிழமை வவுனியா இறம்பைக் குளம் மகளிர் கல்லூரியில்இடம்பெறவுள்ளது.

நாளை ஞாயிற்றுக்கிழமை சைவப் பிரகாச மகளிர் கல்லூரி யில் கோலம் போடுதல், வவுனியா தெற்கு வலய அலுவலகத்தில் திருக்குறள் மனனப் போட்டி, துரித கணிதச் செய்கையும் தமிழ் மகா வித்தியாலயத்தில் வாய்ப்பாடு மனனப் போட்டியும் இடம் பெறவுள்ளன.

மாகாண மட்டப் பரிசளிப்பு விழா இம்மாதம் 30ஆம் திகதி வவுனியா இறம்பைக்குளம் மக ளிர் கல்லூரியில் முதற்தடவை யாக இடம்பெறவுள்ளது என்பது குறிப்பிடத்தக்கது. (த-6)

## அதிகாலையில் வீட்டுக்குள் புகுந்த திருடர்களால் பணம், நகை கொள்ளை

யாழ்ப்பாணம், ஒக்.9

சாவகச்சேரியில் கடந்த புதன் கிழமை அதிகாலை வீடொன்றுக்குள் புகுந்த திருடர்கள் அங்கிருந்த பணம் மற்றும் நகைகளைத் கொள்ளையிட்டுச் சென்றனர்.


இச்சம்பவம் கடந்த புதன்கிழமை அதிகாலை 2.30 மணியளவில் வீரபத்திரர் வீதி, நுணாவில் மேற்கு, சாவகச்சேரியில் இடம்பெற்றுள்ளது.

சம்பவம் தொடர்பாக மேலும் தெரிய வருவதாவது:

சம்பவ தினத்தன்று ஏற்கனவே வீட்டுக்குள் புகுந்த பதுங்கியிருந்த திருடர்கள் நள்ளிரவு 2.30 மணியளவில் வீட்டார் உறக்கத்தில் ஆழ்ந்த வேளை வீட்டின் பின்புறமுள்ள சமையலறையின் ஜன்னலை உடைத்து உட்புகுந்து வீட்டிலிருந்த உடைமைகளை வெளியில் எடுத்து வந்து அதனுள் தேடுதல் நடத்தி பெறுமதியான பணம் மற்றும் நகைகளைக் கொள்ளையிட்ட பின்னர் உறக்கத்திலிருந்த வயோதிபப் பெண்ணின் கழுத்திலிருந்த தங்கச் சங்கிலியை அபகரிக்க முற்பட்ட வேளை திடீரென அப்பெண் விழித்துள்ளார். உடனே அப்பெண் கூக்குரலிட குறித்த திருடர்கள் பின் வாசல் வழியாகத் தப்பிச் சென்றுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது.

இச்சம்பவத்தை அடுத்து அப்பகுதிக்கு விரைந்த சாவகச்சேரிப் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டதுடன் சந்தேகத்தின் பேரில் இருவரைக் கைதுசெய்த விசாரணை நடத்தி வருகின்றனர். (த-16)

## மக்கள் முகம்



சூரியன் எவ்.எம்.மின் சிரேஷ்ட செய்தியாசிரியரும், அகில இலங்கை சமாதான நீதிவானும், சாகித்திய விருது பெற்றவருமான வி.எஸ். சிகாமணி அண்மையில் கொழும்பு மாவட்ட நீதிபதியினால் அங்கீகாரம் பெற்ற மொழி பெயர்ப்பாளராக நியமிக்கப்பட்டுள்ளார்.

இவர் ஏற்கனவே பல தனியார் வங்கிகள் மற்றும் அரச சார்பற்ற வெளிநாட்டு, உள்நாட்டு அமைப்புகளின் மொழிபெயர்ப்பாளராகவும் பணியாற்றுகிறார்.

இது தவிர, இவர் பிரித்தானியா, அமெரிக்கா, அவுஸ்திரேலியா, தென்னாபிரிக்கா, ஜேர்மனி உள்ளிட்ட பல நாடுகளில் இருந்து வெளியாகும் சஞ்சிகைகளிலும் செய்தித்தாள்களிலும் தொடர்ந்தும் ஆங்கிலத்தில் கட்டுரைகள் எழுதி வருகிறார்.

அத்துடன், இந்திய மத்திய அரசாங்கத்தினால் அங்கீகரிக்கப்பட்ட நச்சுரல் ஹீலர்ஸ் அசோசியேஷன்ஸ் இன்டர்நஷனல் அமைப் பினால் மருத்துவ தொடுகை மாற்று சிகிச்சை முறையில் மருத்துவ கலாநிதி பட்டமும் பெற்றுள்ளார்.

அதுதவிர, ஜப்பானிய ரேக்கி மற்றும் ஜோரி மருத்துவ முறைகளிலும் பயிற்சி பெற்றுள்ளார்.

வடமராட்சியைப் பிறப்பிடமாகக் கொண்ட இவர் பம்பலப்பிட்டி மற்றும் இரத்மலானை இந்து கல்லூரிகளின் பழைய மாணவர் என்பதுடன் பல சமூக சேவைகளிலும், ஈடுபட்டு வருபவர் என்பது குறிப்பிடத்தக்கது. (ஐ)



யாழ்.நீதிவான் நீதிமன்ற பதிவாளர் திருமதி யசோதராதேவி சிவசுந்தரம் பதிவாளர் தரம் III இல் இருந்து, தரம் II இற்கு பதவி உயர்தப்பட்டுள்ளார்.

1975 ஆம் ஆண்டு கிளிநொச்சி நீதிவான் நீதிமன்றில் சுருக்கெழுத்தாளராக அரச சேவையில் இணைந்து கொண்ட இவர் 01.06.2008 ஆம் ஆண்டு நீதிச்சேவை ஆணைக்குழுவால் மல்லாகம் மாவட்ட நீதிமன்றில் பதிவாளராக நியமிக்கப் பட்டார்.

36 ஆவது வருட அரச சேவையினைத் தொடரும் இவர் தெல்லிப்பழை கொல்லங்கலட்டியைப் பிறப்பிடமாகக் கொண்டவர். அத்துடன் தெல்லிப்பழை மகாஜனக் கல்லூரியின் பழைய மாணவியுமாவார்.

# கல்விச்சுடர்

## மாவட்ட வலம் - 2010



### கல்விப் பொதுத்தராதர மாதிரிவினாத்தாள் -2010

## வரலாறு விடைகள் பகுதி - II

01. 1) A - போர்த்துக்கீசர், B - ஆரியர், C - றொபர்ட் நொக்ஸ், D - தாதுசேனன்.
2) A - எம்பக்க தேவாலய மரச்செதுக்கல் கலை, B - குட்டம் பொக்குண, C - மெத்திரிகிரி வட்டதாகே, D - குளக்கட்டின் காவற்கல்.
3) A - செனரத், B - அரிட்டன், C - கலிகால சாஹித்ய சர்வஞ்ஞ பண்டித, D - மல்வானை ஒப்பந்தம்.

02. 1) A - யான் ஓயா, B - மகாவலி, C - மல்வத்து ஓயா.
2) குறித்த காலத்தில் மட்டும் மழை, அதிக வரட்சி, பெருகிவரும் சனத்தொகை, குறித்த காலத்தில் மட்டும் ஆற்றுநீர் போதியதாக இருந்தமை.
3) மாதுறு ஓயா அகழ்வில் கண்டெடுக்கப்பட்ட கலிங்கல் தொட்டி, வசபனின் சுரங்கவழி நீர்ப்பாசனம்.
4) அபயகிரி சூழல்தொகுதி, சிகிரியா சூழல்தொகுதி.

03. 1) A - கபாடகம், B - இராஜகாரிய முறை, C - மாஅமைச்சு மண்டபம் (மகவாசல).
2) கண்டியின் இயற்கை அரண்கள், கண்டியப் படையின் கொரில்லா போர்முறை, நாயக்க மன்னர் ஆட்சி, பிரித்தானியரின் தந்திரம்.
3) குடிபோதைக்கு ஆளாகியமை, கண்டிய மக்களைத் துன்புறுத்தியமை.
4) ஆண்டுதோறும் தலதா பெரஹர நடைபெற்றமை, தொடர்ந்து உபசம்பதா சடங்கு நடைபெற்றமை.

04. 1) வீரபுரன் அப்பு, குடாபொல தேரர், கொங்காலே பண்டா.
2) 1840 தரிசுநிலச் சட்டம், புதிய வரிக்கொள்கை, பௌத்தமதப் புறக்கணிப்பு, மதுபானக் கடைகள் திறக்கப்பட்டமை.
3) போராட்டம் ஒழுங்குபடுத்தப்படாமை, சிங்களவரிடம் நவீன ஆயுதம் இல்லாமை.
4) ஆளுநர் இங்கிலாந்து அழைக்கப்பட்டார், வரிகள் அகற்றப்பட்டன.

05. 1) அரசியல் அமைப்பு முறை, பொருளாதார முறை, சமூக அமைப்பு முறை.
2) கீழைத்தேய-மேலைத்தேய வர்த்தக விருத்தி, புதிய வர்த்தகப் பாதைகள் கண்டுபிடிப்பு.
3) திருச்சபை பிளவுபட்டது, சமய எதேச்சாதிகாரம் பிளவுபட்டு புதிய எண்ணக்கரு தோற்றம் பெற்றது.
4) இசபெல்லா தம்பதிகள் - 7ஆம் ஹென்றி, தேசிய அரசு ஆட்சியாளர் உதவி, போர்த்துக்கீசர் ஆபிரிக்கக் கரை சென்றமை.

06. 1) A - பஸ்ரில் சிறைச்சாலை உடைப்பு, B - ரஷ்யப் புரட்சி, C - கரிபால்டி தலைமையில் இத்தாலி.
2) மன்னர், குருமார், பிரபுக்கள், மத்தியதர வகுப்பினர், சிந்தனையாளர்.
3) சிறைச்சாலை உடைக்கப்பட்டு கைதிகள் வெளிவரல், டெனிஸ் மைதானத்தில் மக்கள் ஒன்றுகூடல், பிரான்சின் நிதி நெருக்கடி.
4) மனித உரிமைகள் பிரகடனம் (ஆவணம்), மானிய முறையின் வீழ்ச்சி, சுதந்திரம், சமத்துவம், சகோதரத்துவம்.

07. 1) கலிலியோ கலிலி, ஐசாக் நியூட்டன், வில்லியம் ஹார்வே, நிக்கலஸ் கொப்பனிக்கஸ்.
2) தேசிய அரசுகள் தோற்றம் பெற்றமை, சிலுவை யுத்தங்கள் ஏற்பட்டமை, நாடுகாண் பயணங்கள் வளர்ச்சியடைந்தமை, கிறிஸ்தவ சமய சீர்திருத்த இயக்கங்கள் தோற்றம் பெற்றமை.
3) கி.பி 1453 இல் கொன்ஸ்தாந்திநோபிள் ஒட்டோமன் துருக்கியரால் கைப்பற்றப்பட்டமை, சிலுவை யுத்தங்கள் ஏற்பட்டமை, கீழைத்தேசங்களில் வாசனைத் திரவியங்கள் முக்கிய இடம்பெற்றிருந்தமை, நாடுகாண் பயணங்களுக்கு அரசர்கள் ஆதரவு வழங்கியமை, ஐரோப்பாவில் கப்பல் கட்டும் தொழில் விருத்தியடைந்திருந்தமை.
4) நாட்டின் நிலம் முழுவதும் அரசனுக்குச் சொந்தமாக இருக்கும், அரசன் தொடக்கம் கீழ்மட்ட மக்கள் வரையும் எல்லாத் தொடர்புகளும் நிலவுரிமை தொடர்புடையதாகக் காணப்படுதல், அரசனுக்குச் சேவையாற்றுவோருக்கு வேதனத்துக்குப் பதிலாக நிலம் வழங்கப்பட்டது, நிலங்களைப் பெற்ற பிரதானிகள் தமக்குக் கீழ் மட்டத்தில் உள்ளவர்களுக்கு பயிர்ச்செய்கைக்காக வழங்குதல், விவசாயத்தை அடிப்படையாகக் கொண்ட பொருளாதாரம், தொழிலை அடிப்படையாகக் கொண்ட சாதிமுறை தோற்றம்பெற்றமை.

08. 1) ஸ்பானியா, பிரான்ஸ், இங்கிலாந்து.
2) மானிய முறை வீழ்ச்சியடைந்தமை, பகுத்தறிவாதம் ஏற்பட்டமை, நாடுகாண் பயணங்கள் வெற்றியளித்தமை, கிறிஸ்தவ மதவாதிகளுக்கிடையே பிளவுகள் ஏற்பட்டமை.
3) 175 வருடங்கள் கூட்டப்படாமல் இருந்த ஸ்ரெல் ஜெனரல் 16ஆம் லூயி மன்னனால் கூட்டப்பட்டமை, கூட்டப்பட்ட ஜெனரலின்போது சாதாரண மக்கள் புறக்கணிக்கப்பட்டமை, டெனிஸ் மைதானத்தில் உறுதியுரை மேற்கொள்ளப்பட்டமை, 1789 ஜூலை 14ஆம் திகதி பஸ்ரில் சிறைச்சாலை உடைக்கப்பட்டமை, 1791 இல் மனித உரிமைப் பிரகடனம் உருவாக்கப்பட்டமை.
4) முடியாட்சி ஒழிக்கப்பட்டு குடியாட்சி மலர்ந்தமை, சமூக அமைப்பு மாற்றமடைந்தமை, 1791 இல் மனித உரிமைப் பிரகடனம் ஏற்படுத்தப்பட்டமை, மத்தியதர வகுப்பினர் தோற்றம் பெற்றமை, மானியமுறை பொருளாதார அமைப்பு வீழ்ச்சியடைந்து விவசாயிகள் சொந்தமாக நிலங்களைப் பெற்றமை.

09. 1) A - சுரேந்திரநாத் பானர்ஜி, B - தடாபாய் நபரோஜி, C - பாலகங்காதர திலகர்.
2) பிரித்தானியரின் ஆட்சியில் இந்தியாவின் அரசியல், பொருளாதார, சமூக, சமய காரணிகள் பாதிக்கப்பட்டமை, பிரித்தானியர் இந்தியாவின் பிரதேசங்களை இணைக்கும்போது வஞ்சகமாகச் செயற்பட்டமை (உதாரணம்-அவுத பிரதேசம் இணைத்தல்), இந்தியத் தலைவர்களை மதியாமை (பகதுர்ஷா நானாசாகிப், ஜான்சிராணி), புகையிரதசேவை, தந்தி, தபால் சேவை என்பன ஆரம்பிக்கப்பட்டமையால் உள்நாட்டுப் பிரதேசங்களுக்கிடையே தொடர்புகள் ஏற்பட்டமை, பிரித்தானியரின் மதப் பிரசாரம், ஆப்கான் யுத்தம், யுத்தத்தில் பிரித்தானியர், பன்றி மற்றும் மாட்டுக் கொழுப்புகள் பூசப்பட்ட குண்டுகள் பிரயோகிக்கப்பட்டமை.
3) கோமிங்டாங் கட்சி மற்றும் கொமியூனிசவாதக் கட்சியினரை ஒழித்துக்கட்டும் நடவடிக்கைகளில் ஈடுபட்டமை, கிராமிய மட்டத்தில் கூட்டுறவு முறையை ஆரம்பித்தமை, நீண்ட நடைப் பயணத்திற்கு தலைமைதாங்கிச் செயற்படுத்தியமை.
4) டொகுகாவா-சோகுன்களின் ஆட்சி முற்றுப்பெறல், பேரரசனின் ஆட்சி தோற்றுவிக்கப்பட்டது, புதிய அரசியல் யாப்பு ஒன்று உருவாக்கப்பட்டது, மானிய முறைமை ஒழிக்கப்பட்டமை, ஜப்பான் நவீன நாடாக உருவாகுவதற்கு வழிவகுத்தமை, டயட் என்ற பாராளுமன்றம் உருவாக்கப்பட்டமை.

10. 1) A - ஹெரி ட்ருமன்ட், B - ஹிரோ ஹிற்டோ, C - ஜவஹர்லால் நேரு.
2) ஹிட்லரின் நாசிசவாதத்தினால் ஜேர்மனி வலுவடைந்தமை, முசோலினியின் பாசிசவாதத்தால் இத்தாலி வலுவடைந்தமை, ஜப்பானின் ஆதிக்கச் செயற்பாடு, சர்வதேச சங்கம் வலுவிழந்தமை.
3) மியூனிக் உடன்படிக்கையை ஹிட்லர் மீறியமை இதனால் இவர் செக்கோஸ்லோவாக்கியாவை ஆக்கிரமித்தமை, 1939 இல் ஹிட்லர் போலந்தின் மீது ஆக்கிரமிப்பை மேற்கொண்டமை, ஜேர்மனியின் இராணுவ பலத்தால் ஐரோப்பிய நாடுகளும் மற்றும் ரஷ்யாவும் தனது இராணுவ பலத்தை அதிகரித்தமை.
4) சர்வதேச சமாதானத்தையும் பாதுகாப்பையும் பேணுதல், நாடுகளுக்கிடையே நட்புறவை வளர்த்தல், மனித உரிமைகள் மற்றும் சுய கௌரவத்தைப் பேணுதல், உலக நாடுகளின் பொருளாதார வளர்ச்சிக்கு ஆலோசனை மற்றும் நிதியுதவிகளை வழங்குதல்.

(முற்றும்)

## தமிழ் விடைகள் பகுதி - II

01. சுருக்கமான விடை தருக.
1) உடுக்கை + இழந்தவன் + கை + போல் + அங்கே
2) எழுவாய் - நீங்கள் (தோன்றா எழுவாய்)
3) கனம்:- பெரியோரைக் கனம் பண்ணு.
கணம்:- இறைவனே! நான் உன்னை ஒருகணமும் பிரியாதிருக்க வரந்தருவாய்.
4) விழுந்தவனை — வினையாலணையும் பெயர்.
மிதித்தது — வினைமுற்று.
5) ஆதிகால வேடர் அரையில் மரவுரி தரித்தனர்.
6) நாளை பாடசாலை விடுமுறை. ஆனால், நான் ஊருக்குச் செல்லவில்லை.
7) 1. கருத்தூன்றி செம்மையாக வாசித்தல் 2. பொருளை கிரகித்து வாசித்தல்
3. ஓசையுடன் வாசித்தல் 4. இரசித்து வாசித்தல்
5. தொனி ஏற்ற இறக்கம்
8) உம் → முற்று, தான் → தேற்றம்.
9) தானே என்பது பொருள் மயக்கம்.
திருத்தம்:- அவனே போவதாகக் கூறினான்/அவன் தானும் போவதாகக் கூறினான்.
10) * ஒரு பொருளை அல்லது விளக்கக் குறிப்பு ஒன்றைப் பலரும் விளங்கிகொள்ளும் வண்ணம் பொருள் புலப்பட விளக்கி விரித்து எழுதலாகும்.
* சொற்பொழிவுகள், தொலைக்காட்சி நிகழ்ச்சி, நூல்கள், பத்திரிகைச் செய்தி.

02. அ. போதைவஸ்துத் தடுப்பு
1) முன்னுரை - உலகை அச்சுறுத்தும் முக்கியபிரச்சினை.
2) போதைவஸ்துக்கள் பற்றிய விளக்கம்.
உ+ம்: கஞ்சா, அபின், மரிஜூவானா, ஹெரோயின் போன்றவை.
3) போதைவஸ்துப் பாவனையின் விளைவுகள்.
4) போதைவஸ்துக்கு அடிமையானோர் நிலை.
5) போதைவஸ்துத் தடுப்பு நடவடிக்கைகள்.
6) முடிவுரை.

ஆ. வாசிப்பு மனிதனைப் பூரணமாக்குகின்றது.
* மேடை பேச்சு வடிவத்தில் அமைந்திருத்தல்.
* சபையோரை விளித்து பேசுதல்.
* இடையிடையே சபையோரை முன்னிலைப்படுத்தல்.
* வாசிப்பின் முக்கியத்துவம் பற்றிய அறிமுகம்.
* தொலைக்காட்சி பார்ப்பதால் கற்கும் நேரம் குறைவடைகிறது.
* மாணவர்கள் வாசிக்கும் பழக்கம் அருகிவருதல்.
* ''கண்டது கற்கப் பண்டிதன் ஆவான்'' முதுமொழி விளக்கம்.
* நூல்கள் வாசித்தல் சிறந்த பொழுதுபோக்கு.
* வாசிப்பு மனிதனைப் பூரணமாக்குகிறது என்பதை வலியுறுத்தல்.

இ. இணையத்தின் முக்கியத்துவம்.
* இணையம் பற்றிய அறிமுகம்.
* தொழில்நுட்பம் அசுரவேகத்தில் வளர்ச்சியடைகின்றது.
* 21ஆம் நூற்றாண்டில் இணைய வளர்ச்சி.
* உலகமயமாதலில் அதன் பங்கும் பணிகளும்.
* செய்திப்பரிமாற்றம், கல்வி, வணிகம், சுற்றுலா, தொலைதொடர்பு, நூலகம், அருங்காட்சியகம், விளையாட்டு, விவாதங்கள் போன்ற பணிகள்.
* இணையத்தில் தமிழ் அகராதிகள்,கலைசொற்றொகுதிகள், சுருக்கச் சொற்கள், நிகண்டுகள், தமிழ் ஆவணக்காப்பகங்கள் காணப்படுகின்றன.
* இலங்கைத் தமிழர்கள் தொடர்பான செய்திகள் ''தமிழ் நெட்'' இல் காணப்படுகின்றன.
* தமிழ் பத்திரிகை, சஞ்சிகைகள், செய்தித்தாள்கள், சினிமா, இலக்கிய ஆய்வு போன்றவற்றிற்கு அவசியம்.

ஈ. சிறுகதை
1) பொருத்தமான தலைப்பிடல்.
2) சிறுகதைக்குரிய அமைப்பு இருத்தல்.
3) கற்பனையாக எழுதப்படல்.
4) கண்ணனின் வாழ்வில் ஏற்பட்ட தடைகளும், அவன் அவற்றை எதிர்கொண்ட விதமும் விவரிக்கப்படல்.
5) அவன் உறுதியோடு செயற்பட்ட விதம்.
6) இலட்சியத்தில் அடைந்த சாதனை.
7) கதையினூடாக படிப்பினை மறைமுகமாக வெளிப்படல்.

03. இடம்பெற வேண்டிய கருத்துக்கள்:
1) மக்கள் இன்பத்தை அடைய கருவியான செல்வம் கல்வி,பொருள் என இருவகைப்படும்.
2) கல்விச் செல்வமே சிறந்தது.
3) பொருட் செல்வத்தை ஈட்டுவதும், காப்பதும் கடினமானது.
4) உடல் அழிந்தாலும் கற்றகல்வி அழிவுறாது.
5) எனவே இன்று வேண்டப்படுவது கல்விச் செல்வமே.

04. 1) மனிதன் உடலையும் ஆன்மாவையும் பயன்படுத்துவதன் மூலம் சுயமதிப்புப் பெற்றுத் திருப்தியடைகிறான்.
2) எவரெஸ்ட் சிகரத்தை ஒருவன் தானாக ஏறப்போவதாகும்.
3) சுவாரசியமற்றதாக இருக்கும்.
4) இருபெயரொட்டுப் பண்புத்தொகை.
5) தனித்திறமைகளைப் பயன்படுத்துவதனால் உண்டாகக்கூடிய பல சுகங்களை நாம் இழக்க வேண்டியிருக்கிறது.

05. கடித அமைப்பு
1) எழுதுபவரின் முகவரி.
2) செய்தித்தாள் ஆசிரியரின் முகவரி.
3) விளிப்பு.
4) கடிதத்தின் தலைப்பு.
5) கடிதத்தின் உள்ளடக்கம் (சொல்லளவு கவனிக்கப்பட வேண்டும்)
அ. பொலித்தீன் பாவனையால் ஏற்படும் பிரச்சினைகள்:
* எரித்தும்,புதைத்தும் அழிக்க முடியாதிருத்தல்.
* கண்டபடி எறிவதால் எங்கும் பறந்து சூழலை அசுத்தமாக்குதல்.
* நீரைத் தேக்கி நுளம்பு பெருக வாய்ப்பளித்தல்.
* உக்காதிருத்தல், பிராணிகள் உண்டு அவதியுறல்.
* நிறுவனங்கள், சுகாதாரத் திணைக்களம் இதற்கு தடைவிதித்துள்ளது.
* சிவனொளிபாதமலை, கதிர்காமம் போன்ற தலங்களில் பொலித்தீன் பாவனைக்கு தடைவிதித்தும் பாவனை தொடருகிறது.
ஆ. பிரச்சினையை தீர்ப்பதற்கான வழிமுறைகள்:
* பொலித்தீனுக்கு பதிலாக கடதாசி, துணிப்பைகளைப் பாவித்தல்.
* தீமைகள் குறித்து ஊடகங்கள் மூலம் அறிவுறுத்தல்.
* அரசு பொலித்தீன் பாவனையைத் தடைசெய்ய சட்டத்தை அமுலாக்கல்.
* மக்களுக்கு பொலித்தீன் பாவனையை குறைக்க ஆர்வமூட்டல்.

## தமிழ் விடைகள் பகுதி - III

01. 1) அ. திருவள்ளுவர்
ஆ. * ஒருவனுக்கு அழிவில்லாத சிறந்த செல்வம் கல்வியேயாகும்.
* ஏனைய பொன், மண், வீடு முதலிய செல்வங்கள் அழியக்கூடியன.
* ஆதலால் அவை செல்வங்கள் ஆகா.
2) * நமசிவாயப் புலவர். * பரராசசேகர மன்னன்.
3) * யாரால்:- குமாரப்புலவரால். * யாருக்கு:- ஒட்டக்கூத்தருக்கு.
4) படுக்கை.
5) சென்றுபோன காலம் இனித் திரும்பவரமாட்டாது என்ற கருத்தில் காலத்தின் முக்கியத்துவத்தைக் கூறமுற்படுகிறார்.
6) அணி:- உருவக அணி.
விளக்கம்:- மருபூசியாக, மார்போலையாக என்பன உருவக அணி.
யானையின் கொம்பை ஊசியாக (எழுத்தாணியாக) உருவகித்துள்ளார்.
அதே போன்று பகையரசர்தம் மார்பை ஓலையாகவும் உருவகித்துள்ளார்.
7) 1. ஒப்பற்றவன். 2. குலப் பெருமை கொண்டவன்.
3. தன்னலம் துறந்தவன். 4. ஆற்றல் மிக்கவன்.
5. கொடைப்பண்பு கொண்டவன். 6. நல்ல குணப்பண்புடையவன்.

(17 ஆம் பக்கம் பார்க்க)

மாணவர்களே: உங்களுக்கு எழும் விளக்கமின்மை, தெளிவின்மைகள் என்பவற்றை குறித்த ஆசிரியரின் தொலைபேசி இலக்கத்தின் ஊடாகத் தொடர்புகொண்டு இன்றைய தினம் இரவு 7.00 மணி முதல் இரவு 9.00 மணி வரையும் தெளிவுபடுத்திக்கொள்ள முடியும். (ஆசிரியர்: கே.கே.மோகன் தொலைபேசி இலக்கம்: 077 9356859)

(16 ஆம் பக்கத் தொடர்ச்சி)

8) யாரால்:- ரோஹினியால்.யாருக்கு:- அம்மாவுக்கு.
வானத்தை/வானம்
9) தோட்டத்தொழிலாளி, எழுதுவினைஞர், வைத்தியர், துவிச்சக்கரவண்டி.
10) கு.அழகிரிசாமி.

02. 1) இவ்வுலகில் உள்ள யாவரும் நன்கு வாழ, மேகத்தைப் போலக் கொடுக்கின்ற கைகளை உடைய, இன்பம் உலவுகின்ற இயற்கைப் பண்புகள் பொருந்திய தமிழ் மொழிக்குரியவனான நந்தி மன்னனது பயனுள்ள நாட்டிலே, பெண்களே இல்லாத நகரிலே பிறந்தவர்கள் போல இரக்கமே இல்லாது தோற்றம் தரும் வெண்ணிறமுடைய சந்திரனே இந்தக் கொடிய தன்மை உனக்கு இருப்பது தகாது.
சிறப்பு:
* மன்னனது நாடு மட்டுமல்லாது உலக மக்கள் எல்லோரும் வாழ வழிவகுத்தான் மன்னன் எனச் சிறப்பிக்கப்பட்டுள்ளது.
* நந்தி மன்னன் மழை பொழிவது போல கைமாறுகருதாது கொடை வழங்கி வந்தான் என்பதும் சிறப்பாகும்.

2) தாழம் பூ இதழ்கள் மிகப்பெரிதாகவும் வாசனை உடையதாகவும் இருந்தாலும், மகிழம் பூ இதழ்கள் மிகச் சிறியதாயினும் தாழம்பூவைவிட வாசனை மிக்கது. தாழ மரத்தருகே கிடைக்கும் நீரோ உடம்பின் அழுக்கைப் போக்குவதற்குரியதாயில்லை. அதேவேளை மகிழம்பூ மரத்தருகே சிறிய மணற்குழியில் சுரக்கும் நீரானது தூய்மையான பருகத்தக்கதாக இருக்கிறது. எனவே, உருவத்தில் சிறியது என மதிக்காமல் இருக்க வேண்டாம். சிறிய உருவத்தினர் என மனிதரை மதிக்காமல் விடுவது பிழை.
சிறப்பு:
* உருவத்திற்கும் அறிவுக்கும் எவ்வித சம்பந்தமும் இல்லை. ஒன்றின் பயன்பாடு கருதியே அதன் இயல்பு மதிக்கப்படும் என்பது உவமை அணி மூலம் விளக்கப்பட்டுள்ளது.

3) நாம் உயர்வடைவதற்கு எமது தொழிலை ஒழுங்காகச் செய்யவேண்டும். அவ்வாறு செய்தால் உயர்வடையலாம். ஒரு தொழிலின் கீழ்மையை நினைத்து அத்தொழில் செய்பவரை ஒருநாளும் கீழ்த்தரமாக நினைக்கக்கூடாது. கீழ்மையான தொழில் செய்பவரை விட மேன்மையான தொழில் புரிபவர் சிறந்தவரென கருதுவதும் பிழையாகும்.
சிறப்பு:
* ஒருவரின் தொழிலைக்கொண்டு அவரை மதிப்பிடாது. அவர் அத் தொழிலைச் செய்யும் விதத்தையும், திறத்தையும் கொண்டுதான் அவரை மதிப்பிட வேண்டும்.

4) பாரதியார் பாலர் தொடக்கம் படித்தவர்கள்வரை எல்லோரும் கற்று மகிழ்வதற்குரிய வண்ணத் தமிழ் செய்யுட்களைப் படைத்தளித்தமையாற் பாமரர்களும் தாய்மொழிச் செய்யுட்களைக் கற்று மகிழ்வடையும் சுதந்திரத்தை அவர்களுக்கு அளித்துள்ளார்.
சிறப்பு:
* பாரதியின் பாடல்கள் யாவும் பாமரர் முதல் படித்தபண்டிதர்வரை எல்லோரும் படித்து இன்புறக்கூடியதாக அமைந்துள்ளது.

03. * மலையகத் தொழிற்பாடல்.
1) காதல் வயப்பட்ட ஒரு பெண்ணின் உள்ளத்திலே தோன்றும் உணர்வுகள் வெளிப்படல்.
''கைபுடி லேஞ்சு கண்டு என்
கள்ள மனம் துள்ளுதையா''
2) இப்பாடலில் இடம்பெறும் பேச்சுவழக்குச் சொற்கள்:
உ+ம்: வெத்தல போடயிலே, கைபுடி, சாவல், முள்ளு மூனும் மண்ணுக்குள்ள.
3) பிரதேச வழக்குச் சொற்கள்
உ+ம்: ''எனக்கு வேலை செய்யக் கூடலியே
பணிய லயத்துக்கு சாவல்''
4) தொழில்கள் - கவ்வாத்து வெட்டுதல், முள்ளுக்குத்துதல்.
5) சுவைகள் - நகைச்சுவை, சிருங்காரச் சுவை.
* விளையாட்டுப் பாடல்
1) சொற்கள் அடுக்கி வருதல்.
உ+ம்: கவடியடிக்கக் கவடியடிக்க, தேடிக்கட்டுத் தேடிக்கட்டு
2) வல்லின எழுத்துக்கள் மேம்படல்.
3) கிராமியவழக்குச் சொற்கள்.
உ+ம்: மாம்பட்டை, மருதம்பட்டை, தென்னம்பட்டை
4) அடுக்குத்தொடர் - கவடிக் கவடி, பட்டணம் பட்டணம்
5) ஓசைச் சிறப்பு.
* மீன்பிடிப்பாடலிலுள்ள சிறப்புக்களையும் எடுத்துக்காட்டல்.

அல்லது

மங்கையர்கரசி கருணாகரன் மீது உண்மைகாதல் கொண்டவள் கருணாகரன் எந்தவகை பசப்பு வார்த்தைகளைக் கூறியபோதிலும் மயங்காத உறுதியான சிந்தனை உள்ளவள். நடுநிசியிலும் காதலன் வருவான் என எதிர்பார்த்துக் கூறிய சொல்லுக்காக தனியாகவே காட்டுக்குச் சென்றவள். துணிச்சல்மிக்க வீராங்கனை. இறுதியில் கருணாகரனைக் கொன்ற பின் அவளே மார்த்தாண்டனைக் கொன்றொழித்த வீரம்மிக்கவள். இறுதியில் கருணாகரனின் உடல் கிடந்த இடத்திலேயே சென்று தானும் தன்னைக் குத்திக்கொண்டு இறந்து வீழ்ந்தாள்.

04. * மனித வாழ்க்கையில் ஒரு குறிப்பிட்ட சம்பவத்தை எடுத்துக்காட்டல் என்ற பண்பிற்கமைய ''பார்வைகள்'' என்ற சிறுகதையில் விமலன் என்ற சிறுவனைப் பாடசாலைக்கு அனுமதிப்பதற்கான நேர்முகப் பரீட்சைக்குச் செல்வது தொடர்பான சம்பவம் விளக்கப்பட்டுள்ளது.
* சிறுகதையில் அளவுக்கதிகமாக கதாபாத்திரங்கள் இருத்தல் ஆகாது. அதற்கு ஏற்ப பார்வைகள் கதையிலும் விமலனின் தந்தை, டாக்டர், விமலனின் தாய், விமலன் ஆகியோர் மட்டுமே அதிகமாக உரையாடுவதாக உள்ளது.
* சிறுகதையின் மொழிநடையானது சிறுசிறு வசனங்கள் கொண்டதாய் பேச்சுத் தமிழில் அமைந்திருப்பது சிறப்பியல்பாகும்.
* கதைப் பின்னலும் பொருத்தமான தளங்களைக்கொண்டு பின்னப்பட்டிருப்பது சிறப்பியல்பாகும்.

அல்லது

* வெண்ணிலாவை முத்துச்சுடர் என்றார். பெண்ணாக உருவகித்தார்.
* காணி நிலம் வேண்டும் என்ற பாடலில் - பத்துப்பன்னிரண்டு தென்னை மரமமும், கீற்றும், இளநீரும், காதிலே குயிலோசை விழவும் வேண்டும் என்றார்.
* பக்கத்திலே ஓர் பத்தினிப்பெண் இருந்து பாட்டைக் கலந்து இரசிக்கவேண்டும் என்றார்.
* பாடலில் இயற்கை மூலமே குளிர்ந்த காற்றையும் சூழலையும் எம் மனக்கண் முன்னே கொண்டுவந்து நிறுத்திவிடுகிறார்.
* சிங்கங்கள், புலிகள் நிறைந்த காடுகளையும், பூக்கள் நிறைந்த சோலைகள், பறவைகளையும் பாடினார்.
* காதலில் வள்ளி முருகனுக்குத் தூதாக கிளியை விடுவதாகப் பாடுகிறார்.
* இவ்வாறு பாரதியார் இயற்கையிலே இரசனை மிக்கவராய் இருந்தார்.

05. அ. பாலோடளாய நீர் (நாலடியார்)
1) பாலில் நீர் கலந்தாலும் அதில் நீரின் நிறம் வெளிப்படாது அதுவும் பாலின் நிறமாகவே தென்படும். அதுபோல பெருங்குணம் படைத்த பண்புடையோரைச் சேர்தலினால் சிறுமைகுணம் படைத்தவரின் சிறுமைகுணம் வெளிப்படாது.
2) பெருங்குணம் படைத்தோர் பால் போன்றவர்கள். சிறுமைக்குணம் படைத்தோர் தண்ணீர் போன்றவர்கள் என கூறியிருப்பது சிறப்பாகும்.

ஆ. மானங்குலங் கல்வி (நல்வழி)
1) பசிப்பிணி என்பது பாவி ஒருவனைப் பற்றிக்கொண்டால் தன்மானம், குடிப்பெருமை, கல்வி, வாய்மை, அறிவுடைமை, கொடை, தவம், மேன்மை, முயற்சி, தேன் சிந்துவது போன்ற இனிய சொற்களை பேசும் பெண்களிடத்துத் தோன்றும் காதல் ஆகிய பத்தும் பசி வந்திட இருந்த இடம் தெரியாமல் அழிந்து விடும்.
2) பசிப்பிணிக்கு உட்பட்டோர் அனைத்தையும் இழந்து வருந்துவர் என்பதும் பசியின் கொடுமையும், அதன் தாக்கமும் கூறப்படுவது சிறப்பாகும்.

இ. செறியுமரண்மிகு படைகளுடைய (பழமொழிப் போதனை)
1) அரசர்களின் கடமை குடிகளின் நலன் கருதி நீதி தவறாது நல்லாட்சி புரிதலாகும். நீதி தவறும் ஆட்சியாளர் மக்களின் வெறுப்புக்கு உள்ளாவர். மக்களின் ஒன்றுபட்ட எதிர்ப்பினால் பலம் குன்றி மதிப்பிழந்து போவர். மக்கள் ஒன்றுசேர்ந்து ஆட்சியைக் கூட அகற்றிவிட முடியும்.
2) மக்களின் ஒற்றுமையால் குறுநில மன்னர்கள் கூட அவர்களுடன் கூடி இன்புற்று வாழ்வர். ஆனால், மக்களின் வெறுப்புக்கு உள்ளாகும் பேரரசர்கள் மதிப்பிழந்து போவர் என்று சுட்டிக்காட்டுவது சிறப்பிற்குரியதாகும்.

06. * பிரயாணம் புறப்படுவதற்கு முன் நல்லவேளை பார்த்துப் பரஸ்தானம் இருத்தல்.
* ஜோதிடம் பார்த்தல்.
* தெய்வங்களை வேண்டி மஞ்சள் துணியில் காணிக்கை முடித்துவைத்தல்.
* மஞ்சள் கிழங்கு, குங்கமப்பூ, வெற்றிலை, பாக்கு பயணத்தின்போது கட்டிக்கொண்டு செல்லுதல்.
* பயணம் புறப்படும்பொழுது பசியுடன் புறப்பட்டு செல்லாதிருத்தல்.
* பயணத்தின் முன் குலதெய்வத்தை வணங்குதல்.
* நோன்பு நோற்றல் (விரதமிருத்தல்).

07. அ. கம்பர்:
* கவிச்சக்கரவர்த்தி நாடகத்தின் முக்கிய பாத்திரம்.
* சடையனால் ஆதரிக்கப்பெற்றவர்.
* புலவர் பரம்பரையில் பிறக்காவிடினும் சிறந்த புலவர்.
* கவிச்சக்கரவர்த்தி எனும் பட்டத்துக்குரியவர்.
* சடையப்ப வள்ளல் மீது பாசம் கொண்டவர்.
* அச்சமில்லாதவர்.
* சாமர்த்தியமுள்ளவர்.
* கவித்துவ கர்வம் கொண்டவர்.

ஒட்டக்கூத்தர்:
* சோழமன்னன் குலோத்துங்கனின் அவைக்களப் புலவர்.
* சிறந்த புலவர்.
* தம் திறமை மீது அசையாத நம்பிக்கை கொண்டவர்.
* முன்கோபம் கொண்டவர்.
* தன்மான உணர்ச்சி மிகுந்தவர்.
* தோல்வியை ஏற்றுக்கொள்ளாத மனப்பாங்குடையவர்.

(முற்றும்)

## வணிகக் கல்வியும் கணக்கீடும் விடைகள் பகுதி - II

01. அ. 1) பங்குடைமை.
2) ஆம், பெயரளவுப் பங்காளி என்ற வகையில்.
3) வரையற்றது.
4) ஆம்.
5) பங்குடைமை ஒப்பந்தம். இதில் உள்ளடக்கப்படவேண்டியவை,
* மூலதனத்தின் அளவு.
* இலாபநட்டம் பகிரப்படும் விகிதம்.
* பற்றுவட்டி
* பங்காளர் சம்பளம்.
* மூலதன வட்டி.
* பங்காளர் கடனுக்கான வட்டி.
6) * பங்குடைமைச் சட்டம்.
* நீதிமன்றத்தை நாடுதல்.

ஆ. 1) ரூபா 55,000
2) உரிமை குறைவடைந்துள்ளது. (1,000 ரூபா)
3) 125,000 ரூபா.
4)

| | |
|---|---|
| உரிமை (40,000 +15,000) | 55,000.00 |
| வங்கிக்கடன் | 70,000.00 |
| சொத்து | 1,25,000.00 |

02. 1) * முயற்சியாண்மையின் முன்னேற்றத்தின் மூலமாக முதலீடு விரிவடைந்து வணிக வாய்ப்புக்கள் ஏற்படுகின்றன.
* இதனால் தேசிய வருமானத்துடன், தலா வருமானமும் உயர்வடைகின்றது.
* இதனடிப்படையில் முயற்சியாண்மையின் முன்னேற்றத்துடன் பொருளாதார முன்னேற்றமும் ஏற்படுகின்றது.
* தொழில் வாய்ப்புக்கள் உருவாகும்.
* இதன் மூலம் நாட்டு மக்களின் வாழ்க்கைத்தரம் கூடும்.
* முயற்சியாளர்கள் புதிய எண்ணங்கள், புதிய பண்டங்கள், புதிய சேவைகளைத் தோற்றுவிக்கின்றனர்.

2) அ. இழப்பீட்டுத் தத்துவம்.
ஏற்படும் இழப்புக்கு மட்டும் நட்டஈடு வழங்குதல் இழப்பீட்டுத் தத்துவம் ஆகும். காப்புறுதி செய்வோர் இலாபம் அடைதல் அல்லது மேலதிக நலன்களை அடைதலில் உள்ள விருப்பத்தை தடுப்பதே இத்தத்துவத்தின் பணியாகும்.
ஆ. கிட்டிய காரணித்தத்துவம்.
காப்புறுதி ஒப்பந்தத்தில் குறிப்பிடப்பட்டிருந்தால் மட்டுமே இழப்பீடு வழங்கல் இதுவாகும். அதாவது, நட்டம் ஏற்பட்டதற்கான காரணங்கள், நிகழ்ச்சிகளைக் கருத்திற்கொண்டு அந்த நட்டம் தொடர்பான காப்புறுதிப் பாதுகாப்பைப் பெற்றிருந்தால் மட்டும் இழப்பீடு பெறும் உரிமை.

3) * தனியுரிமையைக் கட்டுப்படுத்துதல்.
* தனியார்துறை அசாதாரண முறையில் இலாபம் ஈட்டுவதனைக் கட்டுப்பதுத்துதல்.
* இலாபத்தன்மையற்ற ஆனால் அத்தியாவசியமான சேவைகளை நடத்துதல்.
* அழிவைக்குறைத்தல்.

4) வணிகச் செயற்பாட்டுக் கருமங்களில் சிற்சில பாதிப்புக்களை ஏற்படுத்தும் காரணிகள் இயங்கும் சூழல் வணிகச்சூழல் எனப்படும். இதனுள் உள்ளடக்கப்படும் பிரிவுகள்.

1 - அகச் சூழல்
அகச் சூழல் காரணிகள்
* உரிமையாளர்கள்.
* முகாமையாளர்கள்.
* வாடிக்கையாளர்கள்.
* ஊழியர்கள்.

2 - புறச் சூழல்
புறச் சூழல் காரணிகள்
* அரசியல் சட்ட சூழல்.
* பொருளாதார மக்கட் சூழல்.
* சமூக கலாசார சூழல்.
* விஞ்ஞான தொழில்நுட்பச் சூழல்.
* இயற்கை புவியியல் சூழல்.

03. 1) * சந்தையை அறிதல்.
* எதிர்கால செயற்பாடுகளைத் திட்டமிடல்.
* முதலீட்டுத் தேவையினை அறிதல்.
* செயற்படுத்தும் படிகளை தீர்மானித்தல்.
* மனிதவள தேவையினை மதிப்பிடல்.

2) அ. காசோலையொன்று வங்கியால் மறுக்கப்படும் சந்தர்ப்பங்கள்.
* குறித்த தினத்துக்கு முன்னரும், காலாவதியான பின்னரும் சமர்ப்பித்தல்.
* கட்டளையிட்டவரின் கணக்கில் போதிய பணம் இல்லாமை.
* காசோலையை ஒழுங்காக எழுதாமை.
* கையொப்பம் தவறாக இருத்தல்.
* காசோலை சிதைவடைந்திருப்பின்.
* காந்தமை நிரற்பகுதி பழுதடைதல்.

ஆ. * சாதாரண பங்குகள்.
* முன்னுரிமை பங்குகள்.
* பங்கு உத்தரவுப் பத்திரம்.
* தொகுதிக் கடன்கள்.

3) * அகத் தொடர்பாடல்
கூட்டம், அறிவிப்புபலகை, இன்டர்கொம், கடிதம், சுற்றறிக்கை, நடமாடும் தொலைபேசி, இலத்திரனியல் அஞ்சல்.
* புறத் தொடர்பாடல்
கூரியர் சேவை, செய்திப் பத்திரிகை, சஞ்சிகை, வானொலி, தொலைக்காட்சி, சுவரொட்டி, இலத்திரனியல் அஞ்சல், இன்டர் நெட், கடிதம்.

4) போக்குவரத்தின் அடிப்படை அம்சங்கள்
* வழி (பாதை)
* ஊடகம் (சாதனம்).
* சக்தி.
* தரிப்பு நிலையங்கள்.

பண்புகள்
* விரைவு.
* பாதுகாப்பு.
* கிரயம்.
* இயலளவு.
* தாராளத் தன்மை.
* தரம்.
* சட்டமுறைப் பயன்பாடு.

04. 1) * நீர்.
* மின்சாரம்.
* போக்குவரத்து.
* தொடர்பாடல்.
* நிலம்-கட்டடம்.
* கழிவகற்றல் வசதிகளை ஏற்படுத்தல்.

2) அ. தகவல் தொடர்பாடல் தொழில்நுட்பம் பல அனுகூலங்களை உடையது. மிக விரைவாகவும் இலகுவாகவும் சகல விவரங்களையும் பெற்றுக்கொள்ள இது உதவுகின்றது. மிகத் திருத்தமான முறையிலும், தூய்மையான முறையிலும் சிறு இடத்திலேயே இதனை களஞ்சியப்படுத்தலாம். மிகக் குறைவான ஊழியர்களைக் கொண்டு இதனை இயக்கலாம். நவீன பொருளாதார பண்டம் உருவாக இது வழிவகுக்கின்றது. மனிதனால் இதுவரை பெற்றுக்கொள்ள முடியாத பெறுபேறுகளை இதன் மூலம் இலகுவாக அடையமுடியும்.

(18 ஆம் பக்கம் பார்க்க)

ஆ. பெறுமதி கூட்டிய வரி (VAT)பல பண்புகளை உள்ளடக்கியதாகக் காணப்படுகின்றது. நுகர்வுப் பொருட்களின் விலைகளின் ஊடாக இவ்வரி அறவிடப்படுகின்றது. பெரும் பாலன பொருட்களின் விலைகளில் சேர்க்கப்பட்டுள்ளமையால் இதனை மறைமுக வரி எனலாம். எல்லா இறக்குமதி பொருட்களும் இவ்வரிக்கு உட்படுத்தப்படும் ஏற்று மதிப் பண்டங்களுக்கு வரி விலக்களிக்கப்பட்டுள்ளது.

3) * குறைந்த மூலதனத்துடன் ஆரம்பிக்கலாம்.
* வியாபாரம் தொடர்பான சட்டதிட்டங்கள் குறைவு.
* தீர்மானம் எடுப்பது இலகு. * வியாபார இரகசியங்கள் பேணப்படும்.
* இலாபம் வருபவரையே சாரும்.
* குடும்ப அங்கத்தவர்களின் உதவியுடன் நடத்துதல்.

4) * வட்டியின்றி கடனுக்கு பொருட்கள், சேவைகளைக் கொள்வனவு செய்யலாம்.
* பணத்தினை எந்நேரமும் எடுத்துச் செல்ல வேண்டிய அவசியம் இல்லை.
* பாதுகாப்பானது.
* தேவையானபோது கடன் பெறுமதியில் 50% ஐ காசாகப் பெற்றுக்கொள்ள முடியும்.
* பல்வேறு சலுகைகளைப் பெற்றுக்கொள்ள முடியும்.
உ+ம்: போனஸ் புள்ளிகள், பரிசுகள், கழிவுகள்.

05. அ. 1) குறிப்பேட்டுப் பதிவு

| விவரம் | வரவு | செலவு |
|---|---|---|
| 1) தொங்கல் கணக்கு வரவு | 4,200 | |
| விற்பனைக்கணக்கு செலவு | | 4,200 |
| (விற்பனைக்கணக்கு குறைத்துக் காட்டப்பட்டிருந்தமை திருத்தியது) | | |
| 2) தொங்கல் கணக்கு வரவு | 1,500 | |
| மின்சார கணக்கு செலவு | | 1,500 |
| (மின்சார கணக்கிற்கு செலவு வைக்கப் படாமை திருத்தப்பட்டது) | | |
| 3) வழங்குநர் கணக்கு வரவு | 5,000 | |
| தொங்கல் கணக்கு செலவு | | 5,000 |
| (வழங்குநர்களுக்குக் கொடுக்கப்பட்ட காசு செலவு வைக்கப்பட்டது திருத்தப் பட்டது) | | |

2) தொங்கல் கணக்கு

| | | | |
|---|---|---|---|
| விற்பனை | 4,200 | மீதி | 700 |
| மின்சாரம் | 1,500 | வழங்குநர் | 5,000 |
| | 5,700 | | 5,700 |

ஆ. 1) 2009.03.31 இல் திருத்திய காசேடு

| விவரம் | தொகை | விவரம் | தொகை |
|---|---|---|---|
| மீ/வ | 14,300 | வங்கிக் கட்டணம் | 500 |
| | | காசோலை புத்தகக் | 750 |
| பங்குலாபம் | 2,000 | கட்டணம் | 15,050 |
| | 16,300 | மீ/செ | 16,300 |
| மீ/வ | 15,050 | | |

2) அல்பட் சில்வா நிறுவனத்தின் 2009.03.31 இல் இருந்தவாறான வங்கிக் கணக்கிணக்கக் கூற்று

| விவரம் | தொகை | தொகை |
|---|---|---|
| திருத்திய காசேட்டின் மீதி | | 15,050 |
| கூட்டு: மாற்றப்படாத காசோலை | 7,200 | 7,200 |
| | | 22,250 |
| கழி: வசூலிக்கப்படாத காசோலை | 15,200 | (15,200) |
| வங்கிக்கூற்று மீதி | | 7,050 |

06. அ. 1) * அங்கத்தவரிடம் பெற்றுக்கொள்ளும் சந்தா.
* நன்கொடை.
* நுழைவுக் கட்டணம்.
* ஏனையவழி வருமானங்கள்.

2) 2009 ஆம் ஆண்டுக்கான சந்தாக் கணக்கு

| | | | |
|---|---|---|---|
| மீ/வந் (அட்டுறு) (5×200) | 1,000 | மீ/வந் (முற்பணம்) | 2,000 |
| வருமானச் செலவுக் கணக்கு | 19,000 | காசு (90×200) | 18,000 |
| | | வருமானச் செலவுக் க/கு பதிலளிப்பு | 1,000 |
| மீ/செ (15×200) | 3,000 | மீ/செ (5×200) | 1,000 |
| | 23,000 | | 23,000 |
| மீ/வ | 1,000 | மீ/வ | 3,000 |

ஆ. அகல்யா நிறுவனத்தின் 31.12.2009 இல் முடிவடைந்த ஆண்டுக்கான உற்பத்திக் கணக்கு

| விவரம் | தொகை | தொகை |
|---|---|---|
| ஆரம்ப மூலப்பொருள் | | 20,000 |
| மூலப்பொருள் கொள்வனவு | | 160,000 |
| | | 180,000 |
| கழி: இறுதி மூலப்பொருள் | | (28,000) |
| பயன்படுத்திய மூலப்பொருள் | | 152,000 |
| நேர்க்கூலி | 20,000 | 40,000 |
| ஆக்க உரிமைக் கட்டணம் | 20,000 | |
| 1) முதற் கிரயம் | | 192,000 |
| தொழிற்சாலை மேந்தலைகள் | | |
| மேற்பார்வையாளர் சம்பளம் | 14,000 | |
| வடிவமைப்புச் செலவு | 2,000 | |
| எரிபொருள், மின்சாரம் | 5,000 | |
| பொறிகள், வாடகை | 6,000 | |
| புத்தகம் கட்டும் நூல் | 500 | |
| ஊழியர் நலன்புரிச் செலவு | 6,500 | 36,000 |
| அச்சக துப்புரவாக்கல் | 2,000 | |
| 2) உற்பத்திக் கிரயம் | | 228,000 |

3) மொத்த உற்பத்திக் கிரயம் = 228,000
+ இலாபம் 40/100 × 228,000 = 91,200

மொத்த விற்பனை விலை = 319,200

4) அலகு ஒன்றிற்கான உற்பத்திக் கிரயம் = 228,000/4,000
= 57 ரூபா

5) அலகு ஒன்றின் விற்பனை விலை = 319,200/4,000
= ரூ. 79.80

கொழும்பு மாவட்ட வல வினாத்தாள்கள் எதிர் வரும் புதன்கிழமை முதல் வெளிவரும். ஆசிரியர், பாடம் தொடர்பான விபரம் திங்கள் உதயனில் வெளிவரும்.

07. 1) நேகாசினி வணிகத்தின் 31.03.2010 முடிவடைந்த ஆண்டுக்கான வருமானக்கூற்று.

| விவரம் | தொகை | தொகை | தொகை |
|---|---|---|---|
| விற்பனை | | | 350,000 |
| விற்ற சரக்கின் கிரயம் | | | |
| ஆரம்ப இருப்பு | | 75,000 | |
| கொள்வனவு | 225,000 | | |
| (-) பொருள் பற்று | (4,000) | 221,000 | |
| | | 296,000 | |
| (-) இறுதி இருப்பு | | (60,000) | (236,000) |
| மொத்த இலாபம் | | | 114,000 |
| (-) செலவீடுகள் | | | |
| நிலைய நிர்வாகச் செலவு | | | |
| சோலைவரி (6,000+2,000) | 8,000 | | |
| மின்சாரம் (5,500+300) | 5,800 | | |
| தொலைபேசி (3,000+500) | 3,500 | | |
| காப்புறுதி (1,500+500) | 1,000 | | |
| கட்டடத்தேய்வு | 10,000 | | |
| உபகரணத்தேய்வு | 6,250 | | |
| கணினி உபகரணத் தேய்வு | 6,250 | | |
| சம்பளம் | 40,000 | 80,000 | |
| விற்பனை விநியோசச் செலவு | | | |
| அறவிடமுடியாக் கடன் (5,000 + 750) | 5,750 | 5,750 | |
| நிதி ஏனைய செலவு | | | |
| வங்கிக்கடன் வட்டி | 10,000 | 10,000 | (96,550) |
| தேறிய இலாபம் | | | 17,450 |

2) 2010.03.31 இல் உள்ளபடியான ஐந்தொகை.

| விவரம் | ரூபா | ரூபா | ரூபா |
|---|---|---|---|
| நடைமுறைச்சொத்து | கிரயம் | தி.தேய்வு | தேறியது |
| காணி | 200,000 | - | 200,000 |
| கட்டடம் | 100,000 | 20,000 | 80,000 |
| அலுவலக உபகரணம் | 25,000 | 12,500 | 12,500 |
| கணினி உபகரணம் | 25,000 | 6,250 | 18,750 |
| | 350,000 | 38,750 | 311,250 |
| நடைமுறையல்லாச் சொத்து | | | |
| இறுதி இருப்பு | | 60,000 | |
| கடன்பட்டோர் | 15,000 | | |
| (-) ஐயக்கடன் ஏற்பாடு | (750) | 14,250 | |
| முற்பணக் காப்புறுதி | | 500 | |
| வங்கி மீதி | | 45,000 | 119,750 |
| | | | 431,000 |
| உரிமையும் பொறுப்பும் | | | |
| உரிமையாண்மை | | | |
| மூலதனம் | | 300,000 | |
| (-) வருமானவரி | | (4,000) | |
| (-) பற்று | | (4,000) | |
| தேறிய இலாபம் | | 17,450 | 309,450 |
| நடைமுறையல்லாப் பொறுப்பு | | | |
| வங்கிக்கடன் | | 100,000 | 100,000 |
| நடைமுறைப்பொறுப்பு | | | |
| கடன்கொடுத்தோர் | | 13,750 | |
| அட்டுறு இறைவரி | | 2,000 | |
| அட்டுறு மின்சாரம் | | 300 | |
| அட்டுறு தொலைபேசி | | 500 | |
| அட்டுறு வங்கிக்கடன் வட்டி | 10,000 | | |
| | (5,000) | 5,000 | 21,550 |
| | | | 431,000 |

விடைகள் தொடர்பாக தெளிவின்மைகள் இருப்பின் உரிய பாட ஆசிரியருடன் தொடர்புகொண்டு விளக்கத்தைப் பெற்றுக்கொள்ளலாம்.

கணிதம்: ஏ.எல்.பாறூக் - 0714811396
விஞ்ஞானம்: எம்.எம்.நிம்சாட் (பகுதி-I) - 0779353634
எம்.ஐ.எம்.அஸ்மி (பகுதி-II) - 0715344918
தமிழ்: கே.கே.மோகன் - 0779356859
வரலாறு: கே.கே.குமாரசாமி (பகுதி-I&II) - 0672223395
வி.யோகராஜா (பகுதி-III) - 0718401091
ஆங்கிலம்: எஸ்.சிறிகாந்தன் - 0776964732
வர்த்தகம்: கே.கே.ராஜு - 0776513060

## English Language Answers Part - II

09. 1- the, 2- the, 3- the, 5- the, 4- the, 6- the, 7- a, 8- an, 9- the, 10- the.

10. 1- He said that he could do the work.
2- Suresh said that his brother worked in London.
3- She says that she is going to church there.
4- The teacher said not to go there.
5- She asked what he was doing.

11. 2- What was the name of the horse which won the race.
3- The police have caught the men who stole my car.
4- Alexander bell was the man who invented the telephone.
5- What's happened to the pictures which were on the wall.
6- A dictionary is a book which gives you meaning of words.

12. 1- body, 2- needs, 3- food, 4- maintain, 5- start, 6- which, 7- for, 8- main, 9- the, 10- hours.

13. 1- Yes, because they provide income to the newspaper and colour and brighten to the pages.
2- It is a instrument with which a producer informs his customers of his products and IT helps customers to choose between several brands of goods.
3- Customers. 4- Advertising firms.
5- 1-mislead, 2-choose, 3- Opportunity, 4- targetted, 5- several brands of goods.

14. 1- a-Medical, b- Dental, c- Veterinary. 2-Medical graduates.
3- There are enough qualified people to the requirement.
4- a-symbol of, b-names, c-qualifications their professions, d-registration numbers.
5- blue cross.

(End)

# ஆப்கானிஸ்தானில் ஐரோப்பிய தீவிரவாதிகள்!

இஸ்லாமாபாத், ஒக். 09

**ஆப்கானிஸ்தானில் ஐரோப்பாவைச் சேர்ந்த சில தீவிரவாதிகள் இருக்கின்றனர் என கைதுசெய்யப்பட்ட தலிபான்கள் தெரிவித்துள்ளனர்.**

பாகிஸ்தானின் வடக்கு வசிரிஸ்தானில் அமெரிக்கா நடத்திய ஏவுகணைத் தாக்குதலில் ஜேர்மனியைச் சேர்ந்த தீவிரவாதிகள் பலியாயினர்.

இதைத் தொடர்ந்து அல்-குவைதாவுடனும், தலிபான்களுடனும் ஜேர்மனியைச் சேர்ந்த தீவிரவாதிகள் இருப்பது உறுதி செய்யப்பட்டது. இந்த நிலையில் ஜேர்மனியைச் சேர்ந்த மொனிர் சவுகா என்பவரின் ஜிகாத் வீடியோ தீவிரவாதிகளின் இணையத்தில் வெளியாகியுள்ளது.

அவற்றில் ஆப்கானிஸ்தானை ஒட்டியுள்ள பாகிஸ்தான் எல்லையில் மலைப்பகுதியில் ஜேர்மனியைச் சேர்ந்த தீவிரவாதிகள் பயிற்சி பெறும் காட்சிகள் இடம்பெற்றுள்ளன. 15 முதல் 40 ஜேர்மனி தீவிரவாதிகள் ஏ.கே.47 ரகத் துப்பாக்கியால் சுட்டு பயிற்சி பெறும் காட்சி இடம்பெற்றுள்ளது.

பயிற்சி பெற்றபின் இவர்கள் ஆப்கானிஸ்தானுக்குள் அனுப்பப்பட்டு பன்னாட்டு இராணுவத்துக்கு எதிரான போராட்டத்தில் ஈடுபடுத்தப்படுகின்றனர். சிலர் ஐரோப்பிய நாடுகளுக்குத் திரும்பி தீவிரவாத நடவடிக்கையில் ஈடுபடுகின்றனர் என்று இராணுவ அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

## உலகத்திலேயே பெரிய புத்தகம்

உலகத்திலேயே பெரிய புத்தகம் ஒன்றை ஆஸ்திரேலிய நாட்டு பதிப்பகம் தயாரித்துள்ளது. இந்த புத்தகம் ஒரு அட்லஸ் (உலக வரைபட புத்தகம் ஆகும்) ஆகும்.

பிராங்பர்ட் நகர புத்தகக் கண்காட்சியில் இடம்பெற்றது. இந்த புத்தகம் ஆறரை அடி உயரமும் ஒன்பதே முக்கால் அடி அகலமும் உள்ளது. இது 128 பக்கங்கள் கொண்டது.

இது பதிப்பாளர் கார்டன் சியர்ஸ்சின் மூளையில் உதித்த எண்ணத்தின் செயல் வடிவமாகும். இது போல பெரிய புத்தகம் கடந்த 350 ஆண்டுகளில் தயாரிக்கப்பட்டது இல்லை என்று அவர் தெரிவித்திருக்கிறார்.

# பாகிஸ்தானில் குண்டுத் தாக்குதல்கள்; 10 பேர் உயிரிழப்பு; 60 பேர் படுகாயம்!

கராச்சி, ஒக். 09

பாகிஸ்தானின் கராச்சி நகரில் முஸ்லிம்களின் அப்துல்லா ஷா காஷி என்ற புனித வழிபாட்டுத் தலம் உள்ளது. வியாழக்கிழமை இங்கு இலட்சக்கணக்கானவர்கள் கூடி தொழுகை நடத்தினர்.

மேலும் அன்னதானமும் வழங்கப்பட்டது. மாலையில் வழிபாட்டுத் தலத்தின் வாசலில் திடீரென குண்டு வெடித்தது. உடனே அலறியடித்தபடி மக்கள் அங்கும் இங்கும் ஓடினர். இதனால் அங்கு பதற்றமும், பரபரப்பும் ஏற்பட்டன.

இதைத் தொடர்ந்து அடுத்த சில விநாடிகளில் அங்கு வரும் பார்வையாளர்களின் சப்பாத்துகளைப் பாதுகாக்கும் இடத்திலும் குண்டு வெடித்தது. இதனால் அங்கும் கரும் புகை மண்டலமாக காட்சியளித்தது.

இவற்றில் 10 பேர் அதே இடத்தில் உடல் சிதறி பலியானார்கள். 60 பேர் காயமடைந்தனர். இவர்கள் அனைவரும் கராச்சியிலுள்ள வைத்தியசாலைகளில் சேர்க்கப்பட்டு சிகிச்சை பெற்றனர்.

வழிபாட்டுத் தலத்துக்கு தற்கொலைத் தாக்குதல் தீவிரவாதிகள் வந்தனர். அவர்களில் ஒருவரை வாசலில் வைத்து பாதுகாப்பு அதிகாரிகள் மடக்கிப் பிடித்துவிட்டனர். இருந்தும் தப்பி ஓடிய அவர் கூட்டத்திற்குள் புகுந்து தனது உடலில் கட்டியிருந்த குண்டை வெடிக்கச் செய்துள்ளார் என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

மற்றொருவர் காலணிகள் பாதுகாக்கும் இடத்துக்குச் சென்று குண்டை வெடிக்கச் செய்து இருக்கிறார். பலியானவர்களில் 2 பேரின் தலைகள் சிக்கியுள்ளன. அவை தற்கொலைத் தீவிரவாதிகளின் தலைகள் எனத்தெரிகிறது.

# இணையத்தைப் பயன்படுத்துவோர் எண்ணிக்கை சீனாவில் அதிகரிப்பு

பீஜிங், ஒக். 09

சீனாவில் இணையம் பயன்படுத்துவோரின் எண்ணிக்கை அதிகரித்துள்ளது. கடந்த ஜூன் மாத கணக்கெடுப்பின்படி 420 மில்லியன் மக்கள் இணையத்தைப் பயன்படுத்தியுள்ளனர்.

இது கடந்த ஆண்டு டிசம்பர் கணக்கெடுப்பைக் காட்டிலும் 36 மில்லியன் அதிகமாகும். இணையத்தின் பயன்பாடுகள் அனைத்தும் கையடக்கத் தொலைபேசி மூலமாகவே நடைபெற்றுள்ளன என்று சீன இன்டெர்நெட் நெட்வேர்க் தகவல் மையம் தெரிவித்துள்ளது.

மேலும் கடந்த 2009ஆம் ஆண்டில் ஒன் லைன் விளையாட்டை காண 265 மில்லியன் மக்கள் பதிவு செய்துள்ளனர். இது 41.5 சதவீதம் பேர் ஆண்டுக்கு ஆண்டு அதிகரித்து வருகின்றனர் என சோசியல் சயின்ஸ் அக்கடமி பிரஸ் தெரிவித்துள்ளது.

இணையம் பயன்படுத்தும் சீனர்களின் வாழ்க்கைத் தரம் முற்றிலும் மாறிவிடுவதோடு பொருள்களையும் ஒன் லைனிலேயே வாங்குகின்றனர்.

ஒன்லைனில் பொருள் வாங்குவோர் எண்ணிக்கை கடந்த 2009 ஆம் ஆண்டு 108 மில்லியன் அளவிற்கு உள்ளது. அதற்கு முந்தைய அளவை காட்டிலும் 45.9 சதவீதம் கூடுதலாகும்.

# அமெரிக்கா சென்ற ராஜ்நாத்சிங் டெங்கு காய்ச்சலால் அவதி

நியூயோர்க், ஒக். 09

பா.ஜனதா கட்சியின் முன்னாள் தலைவர் ராஜ்நாத்சிங் (வயது - 59). இவர் ஐ.நா.சபை கூட்டத்தில் நடந்த ஒரு நிகழ்ச்சியில் பங்கேற்க அமெரிக்காவிலுள்ள நியூயோர்க் நகருக்குச் சென்றிருந்தார்.

கடந்த ஒரு வராமாக அங்கு தங்கியிருக்கும் அவர் வியாழக்கிழமை இந்தியா திரும்பவிருந்தார். இந்த நிலையில் அவர் கடுமையான காய்ச்சலால் அவதிப்பட்டார். உடனே அவரை வைத்தியசாலையில் சேர்த்து பரிசோதனை நடத்தப்பட்டது. அப்போது அவருக்கு டெங்கு காய்ச்சல் பாதிப்பு இருப்பது தெரிய வந்தது.

எனவே, ராஜ்நாத்சிங் அங்குள்ள வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டு சிகிச்சை பெற்று வருகிறார். டெங்கு காய்ச்சல் குணமடைந்த பின்னரே அவர் இந்தியா திரும்புவார். எனவே திட்டமிட்டபடி வியாழக்கிழமை அவர் இந்தியா திரும்பவில்லை.

இத்தகவலை ராஜ்நாத் சிங்கின் செய்தித் தொடர்பாளர் சுதான்ஷீ திரிவேதி தெரிவித்துள்ளார்.

# பிரிட்டிஷ் தூதரை கொல்ல முயற்சி

சானா, ஒக். 9

அரேபிய நாடுகளில் ஒன்றான ஏமனின் தலைநகர் சானாவில் பிரிட்டிஷ் தூதரகம் அருகில் நேற்றுமுன்தினம் குண்டு வெடித்தது.

பிரிட்டன் துணைத்தூதரைக் கொல்லும் நோக்கத்துடன் அவர் காரில் தூதரகத்தை விட்டு வெளியேறியபோது, அக் கார் அருகே குண்டு வெடித்தது. இதில் எவரும் காயமடையவில்லை.

ஏமனில் சானா நகரில் ஆஸ்திரேலியாவுக்கு சொந்தமான பெற்றோலிய கம்பெனி உள்ளது. இந்தக் கம்பெனி காவலாளி திடீர் என்று அந்த அலுவலக வளாகத்தின் உள்பகுதியை நோக்கி துப்பாக்கியால் சுட்டார். இதில் ஒருவர் காயமடைந்தார்.



ஜேர்மன் வந்திருந்த அர்ஜென்டினா ஜனாதிபதி கிறிஸ்டியனா பெர்னாண்டஸை (இடது), ஜேர்மன் ஜனாதிபதி கிறிஸ்டியன் உல்ஃப் பேர்ளின் ஜனாதிபதி மாளிகையில் வரவேற்கிறார். (எ)

# கையடக்கத் தொலைபேசியால் புற்றுநோய், மலட்டுத்தன்மை

## நோபல் பரிசு விஞ்ஞானி தகவல்

வாஷிங்டன், ஒக். 9

உலகம் முழுவதும் 460 கோடி பேர் கையடக்கத் தொலைபேசியைப்பயன்படுத்துகின்றனர்.

கையடக்கத் தொலைபேசியைப் பயன்படுத்தினால் புற்றுநோய் வரும் என்று ஏற்கனவே விஞ்ஞானிகள் கூறி வந்தனர். ஆனால் இதை ஒரு தரப்பு விஞ்ஞானிகள் மறுத்தனர்.

இந்த நிலையில் அமெரிக்க நோபல் பரிசு விஞ்ஞானியும், விஷத்தன்மை ஆய்வு நிபுணருமான தேவ்ரா டேவில் கையடக்கத் தொலைபேசி மனித குலத்துக்கே பெரும் ஆபத்தை ஏற்படுத்தும் என்று கூறியுள்ளார்.

அவர் தாம் வெளியிட்டுள்ள புத்தகத்தில் பின்வருமாறு குறிப்பிட்டுள்ளார்:-

கையடக்கத் தொலைபேசி பயன்பாடு உலக சுகாதாரத்துக்குப் பெரும் அச்சுறுத்தலாக உள்ளது. கையடக்கத் தொலைபேசியில் ஒருவகை கதிரியக்கம் தொடர்ந்து வெளிப்பட்டுக்கொண்டே இருக்கும். இதனால் மூளையிலுள்ள செல்கள் பாதிப்படைந்து அதனால் புற்றுநோய் ஏற்படும். இதைத் தவிர, உடலிலுள்ள பல்வேறு உறுப்புகளின் இயக்கங்களும் பாதிக்கும். உடலிலுள்ள நுண்ணிய உறுப்புகள் அனைத்தும் பாதிக்கும்.

ஆண்களுக்கு மலட்டுத்தன்மை ஏற்படும். இது தொடர்பாக அமெரிக்கா, சீனா, ஆஸ்திரேலியா உள்ளிட்ட 7 நாடுகளில் நடத்தப்பட்ட ஆராய்ச்சியில் ஆண்களுக்கு மலட்டுத்தன்மை ஏற்படுவது உறுதி செய்யப்பட்டுள்ளது.

சுவிட்ச் ஓப் செய்யப்படாத கையடக்கத் தொலைபேசியை காற்சட்டை பாக்கெட்டுக்குள்ளோட்டு இருப்பவர்களுக்கு விரைவிலேயே உயிரணு எண்ணிக்கை குறைவது கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

இந்த நிலை தொடர்ந்தால் ஆரோக்கியமான எதிர்கால சந்ததிகளை நாம் உருவாக்க முடியாது. இந்த உண்மைகளை மறைக்க கையடக்கத் தொலைபேசி நிறுவனங்கள் ஏராளமான பணங்களை செலவிட்டு வருகின்றன.

இவ்வாறு அவர் கூறியுள்ளார்.

# வேதியியல் துறையில் மூவருக்கு நோபல் பரிசு

ஸ்டாக்ஹோம், ஒக். 9

வேதியியல் துறை சார்ந்த கண்டுபிடிப்புக்காக 2010ஆம் ஆண்டுக்கான நோபல் பரிசு மூன்று விஞ்ஞானிகளுக்கு கூட்டாக வழங்கப்படுகிறது.

இவர்களில் 2 பேர் ஜப்பானைச் சேர்ந்தவர்கள். மற்றொரு வர் அமெரிக்காவைச் சேர்ந்தவர். ரிச்சர்ட் ஹெக் (வயது - 79) (அமெரிக்கா), ஐயிஷி நெகிஷி (வயது - 75), அகிரா சுஸகி (வயது - 80) (இருவரும் ஜப்பான் நாட்டவர்கள்) ஆகிய இந்த மூவருக்கும் கரிம வேதியியல் துறை சார்ந்த கண்டுபிடிப்புக்காக இந்த விருது வழங்கப்படுகிறது.

இவர்கள் தேர்வு செய்யப் பட்டதற்கான அறிவிப்பை நோபல் பரிசு குழு புதன்கிழமை அறிவித் தது. பரிசுத் தொகையான இந்திய நாணயப்படி ரூபா 6.59 கோடி மூவருக்கும் பகிர்ந்தளிக்கப்படும்.

**ரிச்சர்ட் எவ்.ஹெக்:**

1931ஆம் ஆண்டில் ஸ்ப்ரிங்பீல்டில் ஹெக் பிறந்தார் .


1952இல் பிஎஸ் பட்டமும் 1954இல் பிஎச்டி பட்டமும் பெற்ற இவர், 1971இல் டெலாவர் பல்கலைக்கழகத்தில் வேதியியல் துறையில் சேர்ந்தார். 1989இல் ஓய்வுபெற்ற பின் கௌரவப் பேராசிரியராக தொடர்கிறார்.

**நெகிஷி:**

ஜப்பானின் சாங்சுன் பகுதியில் 1935 ஜூலை 14இல் நெகிஷி பிறந்தார் .

வேதியியல் துறை படிப்பில் தன்னை ஈடுபடுத்திக்கொண்டார். 1958இல் டோக்கியோ பல்கலைக்கழகத்தில் பட்டம் பெற்ற இவர் டெய்ஜினில் பயிற்சி விஞ்ஞானியாகச் சேர்ந்தார்.

மேல்படிப்புக்காக அமெரிக்கா சென்ற இவர் 1960இல் பென்சில்வேனியா பல்கலைக்கழகத்தில் பிஎச்டி பட்டம் பெற்றார். பர்டியூ பல்கலைக்கழகம், சிராகுஸ் பல்கலைக்கழகம் ஆகியவற்றில் பணியாற்றிய இவர் மீண்டும் 1979இல் பர்டியூ பல்கலைக்குத் திரும்பினார்.




**அகிரா சுஸகி:**

ஜப்பானின் ஹொக்கைடோவிலுள்ள முகாவா பகுதியில் 1930ஆம் ஆண்டு செப்டம்பர் 12ஆம் திகதி சுஸகி பிறந்தார்.

ஹொக்கைடோ பல்கலைக்கழகத்தில் பிஎச்டி பட்டம் பெற்ற இவர் 1963 முதல் 65 வரை பர்டியூ பல்கலைக்கழகத்தில் உயர் ஆராய்ச்சி படிப்பில் ஈடுபட்டார். அதன்பின் ஹொக்கைடோ பல்கலைக்கழகம் திரும்பிய இவர், அங்கு பேராசிரியராகச் சேர்ந்தார்.

கார்பன் அணுக்களை பலேடியத்தை வினை ஊக்கியாகக் கொண்டு பிணைக்கச் செய்வதற்கான வழிமுறையை இம்மூவரும் இணைந்து கண்டுபிடித்துள்ளனர்.

இந்தக் கண்டுபிடிப்பு புற்றுநோய் சிகிச்சைக்கான புதிய மருந்துகளை கண்டுபிடிக்கவும், பல் வேறு புரட்சிகர பயன்பாடுகளுக்கு உதவும் பிளாஸ்டிக்குகளை உருவாக்கவும் முக்கியத்துவம் வாய்ந்ததாகும்.

# சக்திவாய்ந்த பெண்களில் மிச்சல் ஒபாமாவுக்கு முதலிடம்

பொஸ்டன், ஒக். 09

உலகின் மிகவும் சக்தி வாய்ந்த பெண்ணாக மிச்சல் ஒபாமா விளங்குகிறார் என போர்ப்ஸ் பத்திரிகை தனது கருத்துக்கணிப்பில் தெரிவித்துள்ளது.



போர்ப்ஸ் பத்திரிகை உலகளவில் மிகவும் சக்தி வாய்ந்த 100 பெண்கள் பற்றிய கருத்துக் கணிப்பை நடத்தியது.

கருத்துக்கணிப்பின் அடிப்படையில் முதலிடத்தை அமெரிக்க ஜனாதிபதியின் மனைவி மிச்செல் ஒபாமா பெற்றுள்ளார்.

பெப்சிகோ நிறுவனத் தலைவர் இந்திரா நூயி 6ஆவது இடத்தைப் பிடித்துள்ளார். இந்தியாவைச் சேர்ந்த ஷிகா சர்மா, சந்தார் கோச்சார் ஆகியோர் முறையே 89ஆவது, 92ஆவது இடங்களைப் பிடித்துள்ளனர். ஷிகா சர்மா ஆக்சிஸ் வங்கி தலைமை செயலராவார். சந்தா கோச்சார் ஐ.சி.ஐ.சி.ஐ. வங்கியின் தலைவியாவார்.

# சிறுவர் தின வலைப்பந்தாட்டம் யாழ். மாவட்ட அணி சம்பியன்!

வலி.வடக்கு, ஒக். 9

சர்வதேச சிறுவர் தினத்தையொட்டி நடத்தப்பட்ட மாவட்ட அணிகளுக்கு இடையிலான வலைப் பந்தாட்டப் போட்டியில் சம்பியனானது யாழ். மாவட்ட அணி.

வடக்கின் வசந்தம் நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் வடமாகாணக் கல்வித் திணைக்களத்தின் ஏற்பாட்டில் கிளிநொச்சிக் கல்வி வலயம் நடத்திய வடமாகாண அணிகளும், அனுராதபுரம் மாவட்ட அணியும் பங்கு பற்றிய வலைப் பந்தாட்ட போட்டி கிளிநொச்சி இந்துக் கல்லூரி மைதானத்தில் நடைபெற்றது.

இதன் இறுதியாட்டத்தில் யாழ்ப் பாணம், வவுனியா மாவட்ட அணிகள் மோதின. முதல் பாதி ஆட்டத்தை யாழ்.மாவட்ட அணி 9:1 என்ற புள்ளிகள் அடிப்படையில் தனதாக்கியது.

இரண்டாவது பாதியாட்டத்தில் இரு அணிகளும் கடுமையாக மோதிக் கொண்ட போதிலும் யாழ்ப்பாண அணி 10:3 என்ற புள்ளிகள் அடிப்படையில் வெற்றி கொண்டது.

ஆட்ட நிறைவில் யாழ். மாவட்ட அணி 19:4 புள்ளிகள் என்ற அடிப்படையில் வவுனியா மாவட்டத்தை வெற்றி பெற்று சம்பியனாகியது. (த-6-86)

## இறுதியாட்டத்துக்குத் தகுதி

வலி.வடக்கு, ஒக். 9

தெல்லிப்பழை மகாஜனக் கல்லூரியின் நூற்றாண்டு விழாவையொட்டி யாழ்.மாவட்டப் பாடசாலைகளுக்கு இடையே நடத்தப்படும் கிரிக்கெட் இறுதியாட்டத்தில் விளையாட கொக்குவில் இந்துக் கல்லூரியும், யாழ்.மத்திய கல்லூரியும் தகுதி பெற்றுள்ளன. (த-6-86)

## உதைபந்தாட்டம்

வலி.வடக்கு, ஒக். 9

உடுவில் கல்விக் கோட்டப் பாடசாலை அணிகளுக்கு இடையேயான உதைபந்தாட்டப் போட்டியில் நாளைமறுதினம் திங்கட்கிழமை சுன்னாகம் ஸ்கந்தவரோதயாக் கல்லூரி மைதானத்தில் பி.ப. 2 மணிக்கு நடைபெறவுள்ள போட்டிகளில் மோதவுள்ள அணிகளின் விவரங்கள் வருமாறு:-

16 வயதுப் பிரிவு

- இணுவில் இந்துக் கல்லூரி எதிர் சுன்னாகம் கந்தரோடை தமிழ் கந்தையா வித்தியாலயம்.
- இணுவில் மத்திய கல்லூரி எதிர் சுன்னாகம் ஸ்கந்தவரோதயாக் கல்லூரி.
- ஏழாலை மகா வித்தியாலயம் எதிர் சுன்னாகம் மயிலணி சைவ மகா வித்தியாலயம்.

18 வயதுப் பிரிவு

- சுன்னாகம் ஸ்கந்தவரோதயாக் கல்லூரி எதிர் இணுவில் இந்துக் கல்லூரி. (த-6-86)

# உடுவில் கோட்ட உதைபந்தாட்டம் வெற்றிபெற்ற பாடசாலை அணிகள்

வலி.வடக்கு, ஒக். 9

உடுவில் கல்விக் கோட்டப் பாடசாலை அணிகளுக்கு இடையே நடைபெற்ற 13 வயதுப் பிரிவினருக்கான உதைபந்தாட்டப் போட்டிகளின் முடிவுகள் சில வருமாறு:-

சுன்னாகம் கந்தரோடை தமிழ் கந்தையா வித்தியாலயத்திற்கும் சுன்னாகம் ஸ்கந்தவரோதயாக் கல்லூரிக்கும் இடையே நடைபெற்ற போட்டியில் தமிழ் கந்தையா வித்தியாலயம் 1:0 என்ற கோல் கணக்கில் ஸ்கந்தவரோதயாக் கல்லூரியை வெற்றிகொண்டது.

புன்னாலைக் கட்டுவன் அரசினர் தமிழ் கலவன் பாடசாலைக்கும் ஏழாலை ஸ்ரீ முருகன் வித்தியாலயத்திற்கும் இடையே நடைபெற்ற போட்டியில் ஸ்ரீமுருகன் வித்தியாலயம் 2:0 என்ற கோல் கணக்கில் புன்னாலைக்கட்டுவன் அரசினர் தமிழ் கலவன் பாடசாலையை வெற்றி கொண்டது.

சுன்னாகம் மயிலணி மகா வித்தியாலயத்திற்கும் ஏழாலை ஸ்ரீ முருகன் வித்தியாலயத்திற்கும் இடையே நடைபெற்ற போட்டியில் ஸ்ரீ முருகன் வித்தியாலயம் 7:0 என்ற கோல் கணக்கில் மயிலணி சைவமகா வித்தியாலயத்தை வெற்றிகொண்டது.

புன்னாலைக்கட்டுவன் அரசினர் தமிழ் கலவன் பாடசாலைக்கும் சுன்னாகம் மயிலணி சைவ மகா வித்தியாலயத்திற்கும் இடையே நடைபெற்ற போட்டியில் புன்னாலைக்கட்டுவன் அரசினர் தமிழ் கலவன் பாடசாலை 3:0 என்ற கோல் கணக்கில் சுன்னாகம் மயிலணி சைவ மகா வித்தியாலயத்தை வெற்றிபெற்றது. (6-86)

# சுப்பிரமணியம் ஞாபகார்த்தக் கிரிக்கெட் உரும்பிராய் திருக்குமரன் வி.க. வெற்றி

வலி.வடக்கு, ஒக். 9


அளவெட்டி மத்திய விளையாட்டுக் கழகம் அமரர் சுப்பிரமணியம் ஞாபகார்த்தமாக யாழ்.மாவட்ட மென்பந்து கிரிக்கெட் விளையாட்டுக்கழகங்களுக்கு இடையே நடத்திய 16 ஓவர்களுக்கு மட்டுப்படுத்திய கிரிக்கெட் போட்டி ஆட்டமொன்றில் உரும்பிராய் திருக்குமரன் விளையாட்டுக்கழகம் 9 விக்கெட்டுக்களால் வெற்றி பெற்றது.

தெல்லிப்பழை பூமா விளையாட்டுக் கழக மைதானத்தில் நடைபெற்ற போட்டி ஆட்டத்தில் மானிப்பாய் றெட் ரேஞ்சர்ஸ் விளையாட்டுக்கழகமும் உரும்பிராய் திருக்குமரன் விளையாட்டுக் கழகமும் மோதிக்கொண்டன.

முதலில் துடுப்பெடுத்தாடிய றெட்ரேஞ்சர்ஸ் விளையாட்டுக் கழகம் 8.5 ஓவர்களில் அனைத்து விக்கெட்டுக்களையும் இழந்து 18 ஓட்டங்களைப் பெற்றது.

அதில் ரஞ்சித் 4 ஓட்டங்களை பெற்றதுடன் உதிரிகளாக 11 ஓட்டங்கள் கிடைத்தன.

திருக்குமரன் விளையாட்டுக் கழகத்தைச் சேர்ந்த சுயன் 5 ஓட்டங்களுக்கு 3 விக்கெட்டுக்களையும், யாதேவ் 5 ஓட்டங்களுக்கு 2 விக்கெட்டுக்களையும் அருண், தயா முறையே 7, 4 ஓட்டங்களுக்கு தலா ஒரு விக்கெட்டையும் கைப்பறினர்.




பதிலுக்கு துடுப்பெடுத்தாடிய திருக்குமரன் விளையாட்டுக் கழகம் 2.2 ஓவரில் 19 ஓட்டங்களைப் பெற்று வெற்றி இலக்கை அடைந்தது.

நவஜீவன் ஆட்டமிழக்காது 12 ஓட்டங்களைப் பெற்றார்.

றெட்ரேஞ்சர் விளையாட்டுக் கழகத்தைச் சேர்ந்த துசாந்தன் 4 ஓட்டங்களுக்கு ஒரு விக்கெட்டைக் கைப்பற்றினார். (6-86)






யாழ்.பல்கலைக்கழக விளையாட்டு அவை நடத்தும்

மாபெரும் பளு, வலு தூக்கும் போட்டி

(Weight Lifting & Power Lifting)

உதயன் நிறுவனத்தின் அனுசரணையுடன் யாழ்.பல்கலைக்கழக விளையாட்டு அவையும் யாழ்.பல்கலைக்கழக பளுதூக்கும் அணியும் இணைந்து நடத்தும் யாழ்.மாவட்ட ரீதியிலான போட்டி.

★ யாழ். மாவட்டத்துக்குட்பட்ட அனைத்து வீரர்களும் கலந்துகொள்ள முடியும்.
★ இடம்: யாழ்.பல்கலைக்கழக மைதானம்
★ காலம்: ஒக்ரோபர் 16 ஆம், 17 ஆம் திகதிகளில்
★ விண்ணப்பப்படிவங்களை யாழ்.பல்கலைக்கழக உடற்கல்வி அலகில் பெற்றுக்கொள்ளலாம்.
★ இன்று வெள்ளிக்கிழமை முதல் விண்ணப்பப் படிவங்கள் விநியோகிக்கப்படும்.
★ விண்ணப்ப முடிவுத் திகதி : 15.10.2010

ஜனாதிபதி செயலகத்தின் ஏற்பாட்டில் 'சிசு திரிய' வேலைத்திட்டத்தின் கிளிநொச்சியில் இடம்பெற்ற மரதன் ஓட்ட நிகழ்வின் போது எடுக்கப்பட்ட படம் இது. இதில் வட மாகாண மாணவர்களும் அனுராதபுர மாணவர்களும் கலந்துகொண்டனர் என்பது குறிப்பிடத்தக்கது. *(படம்: கிளிநொச்சி செய்தியாளர்)*

# மகாஜனவின் நூற்றாண்டு விழா உதைபந்தாட்ட முடிவுகள்

வலி.வடக்கு, ஒக். 9

தெல்லிப்பழை மகாஜனக் கல்லூரி யாழ்.மாவட்டப் பாடசாலை அணிகளுக்கு இடையே நடத்திய 19 வயதுப் பிரிவினருக்கான 7 பேர் பங்குபற்றிய உதைபந்தாட்டச் சுற்றுப்போட்டியின் முடிவுகள் சில வருமாறு:-

வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரிக்கும் யாழ்ப்பாணம் மத்திய கல்லூரிக்கும் இடையே நடைபெற்ற போட்டியில் யாழ்ப் பாணம் மத்திய கல்லூரி 3:2 கோல்கள் என்ற அடிப்படையில் யாழ்ப்பாணக் கல்லூரியை வெற்றி கொண்டது.

தெல்லிப்பழை மகாஜனக் கல்லூரிக்கும் வயாவிளான் மத்திய மகா வித்தியாலயத்திற்கும் இடையே நடைபெற்ற போட்டியில் மகாஜனக் கல்லூரி 2:0 என்ற கோல் கணக்கில் வயாவிளான் மத்திய மகா வித்தியாலயத்தை வெற்றி பெற்றது.

யாழ்ப்பாணம் மத்திய கல்லூரிக்கும் யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரிக்கும் இடையே நடைபெற்ற போட்டியில் யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி 3:0 என்ற கோல் கணக்கில் யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரியை வெற்றி கொண்டது. (த-6-86)

## கௌரவிப்பு விழா பிற்போடப்பட்டது

வலி.வடக்கு, ஒக். 9

அகில இலங்கைப் பாடசாலைகளுக்கு இடையே தேசிய மட்டத்தில் நடைபெற்ற விளையாட்டுப் போட்டிகளில் வெற்றி பெற்ற வீரர்கள், வீராங்கனைகளுக்கான கௌரவிப்பு விழா தவிர்க்க முடியாத காரணங்களினால் இன்று சனிக்கிழமை இடம் பெறாது என அறிவிக்கப்பட்டுள்ளது.

வடமாகாண விளையாட்டுத் திணைக்களத்தால் உடுவில் மகளிர் கல்லூரியில் ஏற்பாடு செய்யப்பட்ட இந்த நிகழ்வு பிறிதொரு தினத்தில் இடம் பெறும் என்றும் தெரிவிக்கப்பட்டது. (த-6-86)

# மத்திய கல்லூரியின் ருவென்ரி - 20 கிரிக்கெட் லிஞ்ச், புள்லோ இல்லங்கள் இறுதியாட்டத்தில்

யாழ்ப்பாணம், ஒக். 9

யாழ்.மத்திய கல்லூரியின் இல்லங்களுக்கு இடையிலான ருவென்ரி - 20 கிரிக்கெட்டின் இறுதியாட்டத்தில் மோதுவதற்கு லிஞ்ச் இல்லமும் புள்லோ இல்லமும் தகுதி பெற்றுள்ளன.

யாழ்.சென்றலைட்ஸ் விளையாட்டுக் கழகமும் மத்திய கல்லூரி பழைய மாணவர் சங்க யாழ். கிளையும் இணைந்து பிரான்ஸ் பழைய மாணவர் சங்கத்தின் அனுசரணையுடன் யாழ்.மத்திய கல்லூரி இல்லங்களுக்கு இடையே நடத்திய முன்னாள் கிரிக்கெட் அணித் தலைவர் ஜெயா கனகநாயகம் ஞாபகார்த்த வெற்றிக் கிண்ணத்திற்கான ருவென்ரி - 20 கிரிக்கெட் சுற்றுப் போட்டியின் அரை இறுதியாட்டம் கடந்த வியாழக்கிழமை யாழ்.மத்திய கல்லூரி மைதானத்தில் இடம்பெற்றது.

இதில் முதலில் இடம்பெற்ற லிஞ்ச் இல்ல அணிக்கும், பேர்சிவல் இல்ல அணிக்கும் இடையிலான ஆட்டத்தில் முதலில் துடுப்பெடுத்தாடிய லிஞ்ச் இல்ல அணி 20 ஓவர்கள் நிறைவில் 4 விக்கெட்டுக்களை இழந்து 120 ஓட்டங்களைப் பெற்றது.

இதில் ரி.தர்சன் 39 ஓட்டங்களையும், வதுசணன் 32 ஓட்டங்களையும், எஸ்.தர்சன் 29 ஓட்டங்களையும் பெற்றனர்.

பந்து வீச்சில் பேர்சிவல் இல்ல அணி வீரர்களான கோகுலன் 4 ஓவர்கள் பந்து வீசி 22 ஓட்டங்களுக்கு ஒரு விக்கெட்டினையும் சுதர்சன் 4 ஓவர்கள் பந்துவீசி 16 ஓட்டங்களைக் கொடுத்து ஒரு விக்கெட்டினையும், துஷாந் 4 ஓவர்கள் பந்து வீசி 16 ஓட்டங்களுக்கு ஒரு விக்கெட்டினையும் வீழ்த்தினர்.

121 ஓட்டங்களைப் பெற்றால் வெற்றியெனக் களம் இறங்கிய பேர்சிவல் இல்ல அணி 20 ஓவர்கள் நிறைவில் சகல விக்கெட்டுக்களையும் இழந்து 115 ஓட்டங்களை மட்டும் பெற்றது.

இதில் கோகுலன் 60 ஓட்டங்களையும், துஷாந் 13 ஓட்டங்களையும், சுதர்சன் 10 ஓட்டங்களையும் பெற்றனர்.

பந்து வீச்சில் லிஞ்ச் இல்ல அணி வீரர்களான வதுசன் 4 ஓவர்கள் பந்து வீசி 11 ஓட்டங்களுக்கு 2 விக்கெட்டுக்களையும், சௌமிதரன் 4 ஓவர்கள் பந்து வீசி 16 ஓட்டங்களைக் கொடுத்து 4 விக்கெட்டுக்களையும் வீழ்த்தினர்.

இதனைத் தொடர்ந்து இடம் பெற்ற மற்றொரு ஆட்டத்தில் வீல்க்ஸ் இல்ல அணியை எதிர்த்து புள்லோ இல்ல அணி மோதியது.

இதில் முதலில் துடுப்பெடுத்தாடிய புள்லே இல்ல அணி 20 ஓவர்கள் நிறைவில் 8 விக்கெட்டுக்களை இழந்து 158 ஓட்டங்களைப் பெற்றது.

இதில் எடின் 53 ஓட்டங்களையும், மில்சண் 36 ஓட்டங்களையும், லஸ்சுமன் 17 ஓட்டங்களையும் தமது அணிக்காகப் பெற்றுக்கொடுத்தனர்.

பந்து வீச்சில் வீல்க்ஸ் இல்ல அணி வீரர்களான ஜெரிக்துஷாந் 4 ஓவர்கள் பந்து வீசி 14 ஓட்டங்களுக்கு 3 விக்கெட்டுக்களையும், நிரேஸ் 4 ஓவர்கள் பந்து வீசி 21 ஓட்டங்களுக்கு 2 விக்கெட்டுக்களையும் வீழ்த்தினர்.

159 ஓட்டங்களைப் பெற்றால் வெற்றியெனக் களம் இறங்கிய வீல்க்ஸ் இல்ல அணி 20 ஓவர்கள் நிறைவில் சகல விக்கெட்டுக்களையும் இழந்து 68 ஓட்டங்களை மாத்திரமே பெற்றது.

ஜெரிக்துஷந் 21 ஓட்டங்களையும், ஸ்ரீவண்ணன் 11 ஓட்டங்களையும், லக்சன் 8 ஓட்டங்களையும் பெற்றனர்.

பந்து வீச்சில் புள்லோ இல்ல அணி வீரர்களான எடின் 4 ஓவர்கள் பந்து வீசி 8 ஓட்டங்களுக்கு 4 விக்கெட்டுக்களையும், கபிலன் 3.1 ஓவர்கள் பந்து வீசி 8 ஓட்டங்களுக்கு 3 விக்கெட்டுக்களையும் வீழ்த்தினர்.

இதன் இறுதியாட்டம் நாளை ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணிக்கு மத்திய கல்லூரி மைதானத்தில் இடம்பெறவுள்ளது. (த-6-23)



சுதுமலை ஈஞ்சடி நாவலர் பாடசாலையின் வருடாந்த விளையாட்டு விழாவில் ஆக்கப் போட்டியில் மாணவர்கள் ஈடுபட்ட வேளையில்....

## கொமன்வெல்த் போட்டிகளில்

# ஆஸிக்கு முதலாவது தங்கத்தை பெற்றுக்கொடுத்த ஈழத்தமிழர்!



ஆஸ்திரேலியாவில் குடியேறிய ஈழத்தமிழர் ஒருவர், கொமன்வெல்த் விளையாட்டுப் போட்டிகளில் பங்கேற்று தங்கப்பதக்கத்தைப் பெற்றுக் கொடுத்துள்ளார்.

ஈழத்தமிழ்ப் பெற்றோருக்குப் பிறந்த பிரசாந்த் செல்லத்துரை என்ற இளைஞரே, கொமன்வெல்த் போட்டிகளில் பங்கேற்று - சிறப்பாகச் செயற்பட்டு ஆஸ்திரேலியாவுக்கு 'ஜிம்னாஸ்ரிக்' போட்டியில் தங்கப் பதக்கத்தைப் பெற்றுக் கொடுத்துள்ளார்.

ஈழத்தமிழரான இவரது பெற்றோர், 1983இல் ஆஸ்திரேலியாவில் குடியேறினர். அதன்பின்னர் 1986 ஒக்டோபர் முதலாம் திகதி ஆஸ்திரேலியாவில் பிரசாந்த் பிறந்தார். தற்போது அவர் ஆஸ்திரேலியாவின் சிட்னி நகரில் வசித்து வருகின்றார்.

ஜிம்னாஸ்ரிக்கில் சிறப்பான தோர்ச்சிபெற்ற இவர், ஆஸ்திரேலிய ஆண்கள் 'ஜிம்னாஸ்ரிக்' அணியிலும் இடம்பெற்றிருந்தார்.

இதன் காரணமாக, தற்போது புதுடில்லியில் நடைபெற்று வரும் கொமன்வெல்த் விளையாட்டுப் போட்டிகளில் பங்கேற்க இவருக்கு வாய்ப்புக் கிட்டியது.

கொமன்வெல்த் போட்டிகளில் பதக்கப்பட்டிய லில் முன்னிலையில் இருக்கும் ஆஸ்திரேலியாவுக்கு, இவர் பங்கேற்ற 'ஜிம்னாஸ்ரிக்' அணியே முதலாவது தங்கப்பதக்கத்தைப் பெற்றுக் கொடுத்துள்ளது என்பது குறிப்பிடத்தக்கது.

### கொமன்வெல்த் போட்டிகளில் முதல் 18 இடங்களில் உள்ள நாடுகள்

### பதக்கங்களின் பட்டியல்

(07.10.2010 வரையானது)

| நாடு | தங்கம் | வெள்ளி | வெ.கலம் | மொத்தம் |
|---|---|---|---|---|
| ஆஸ்திரேலியா | 22 | 16 | 10 | 48 |
| இந்தியா | 11 | 13 | 02 | 26 |
| இங்கிலாந்து | 05 | 09 | 12 | 26 |
| கனடா | 02 | | 07 | 09 |
| தென்னாபிரிக்கா | 05 | 02 | 01 | 08 |
| நைஜீரியா | 01 | 01 | 01 | 03 |
| மலேஷியா | 03 | 05 | 03 | 11 |
| சிங்கப்பூர் | 01 | 01 | 01 | 03 |
| ஸ்கொட்லண்ட் | 01 | 01 | 05 | 07 |
| கென்யா | 01 | 01 | 01 | 03 |
| ஜமைக்கா | 01 | 01 | | 02 |
| நெளறு | 01 | | | 01 |
| உகண்டா | 01 | | | 01 |
| நியூஸிலாந்து | | 06 | 05 | 11 |
| வாலெஸ் | | 01 | 04 | 05 |
| இலங்கை | | | 01 | 01 |
| கமரூன் | | 01 | 01 | 02 |
| பாகிஸ்தான் | | | 01 | 01 |

# உகண்டா அணியினர் வந்த காரை தூக்கி எறிந்தது 'ரயர் கில்லர்'

### அந்நாட்டு தூதுவர் உட்பட மூவர் காயம்

புதுடில்லி,ஒக்.8

காமன்வெல்த் விளையாட்டு கிராமத்தில், பாதுகாப்பிற்கு வைக் கப்பட்டுள்ள 'ரயர் கில்லர்' உகண்டா அணியினர் வந்த காரை தூக்கி எறிந்ததில் உகண்டா தூதர் உட் பட மூவர் படுகாயம் அடைந்தனர்.

பயங்கரவாத அச்சுறுத்தலைத் தொடர்ந்து, புதுடில்லி முழுவ தும் பாதுகாப்புப் பலப்படுத்தப் பட்டுள்ளது. கொமல்வெல்த் வீரர், வீராங்கனைகள் தங்கியுள்ள விளையாட்டு கிராமத்தில் பாது காப்பு கெடுபிடிகள் அதிகம்.

இங்குள்ள நுழைவாயில் பாது காப்பிற்காக, 'ரயர் கில்லர்' பொருத்தப்பட்டுள்ளது. அத்து மீறி நுழையும் வாகனங்களை இந்த 'ரயர் கில்லர்', தூக்கி எறிந்து விடும். இதில், கூர்மையான இரும் பினாலான ஊசிகள் பொருத்தப் பட்டுள்ளன.

நேற்று முன்தினம் இரவு, உகண்டா தூதர் வில்லியம் டம் வெயின், நிர்வாக அதிகாரி அய் ரன் மற்றும் ஊடக அதிகாரி ஜூலியட் ஆகியோர் அடங்கிய குழு காரில் விளையாட்டு கிரா மம் வந்தனர். அப்பொழுது எதிர் பாராதவிதமாக 'ரயர் கில்லர்' இவர் களது காரை தூக்கி எறிந்தது. இதில், மூவருக்கும் பலத்த காயம் ஏற்பட்டது. உடனடியாக இவர்கள் அருகில் உள்ள மருத்துவ மனைக்குக் கொண்டு செல்லப் பட்டனர்.

'ரயர் கில்லரை' செயற்படுத்த வைக்கப்பட்ட கணனி மென் பொருளில் ஏற்பட்ட கோளாறே, இந்த விபத்துக்கு காரணம் எனத் தெரிவிக்கப்படுகிறது.

# உலக தடகளப் போட்டியில் கென்ய வீரர் உலக சாதனை



பெர்லின்,ஒக்.9

உலக தடகள போட்டியில் 800 மீ. ஓட்டத்தில் கென்ய வீரர் டேவிட் ருடிஷா புதிய உலக சாதனை படைத்தார்.

ஜெர்மனி தலைநகர் பெர்லினில் உலக தடகள போட்டிகள் நடைபெற்று வருகிறது. இதில் 800 மீ, ஓட்டத்தில் கென்யாவின் டேவிட் ருடிஷா (வயது 21), ஒரு நிமிடம் 41.09 வினாடியில் கடந்து, 13 ஆண்டுகளுக்கு பன் புதிய உலக சாதனை படைத்து தங்கம் வென்றார்.

இதற்கு முன் டென்மார்க்கின் வில்சன் கிப்கெட்டர், பந்தய தூரத்தை ஒரு நிமிடம் 41.11 வினாடியில் கடந்து இருந்ததே சாதனையாக இருந்தது.




இந்தச் சாதனை குறித்து ருடிஷா கூறுகையில்:-

''கடந்த ஆண்டு எனக்கு மோசமானதாக அமைந்தது. அதுதவிர, காலநிலையும் கைவிட்டதால் இறுதிப் போட்டிக்கு முன்னேற முடிய வில்லை. ஆனால் இம்முறை கடினமாக பயிற்சி செய்திருந்தேன். இன்று எனது நாள் என நினைத்தேன். சூழ்நிலையும் ஒத்துழைத்தது. கடைசி 200மீ. தூரத்தை மிகவேகமாகக் கடந்தேன். இறுதியில் 800 மீ., தூரத்தில் நான் தான் வேகமான வீரர் என்று நினைக்கும் போது மிகவும் மகிழ்ச்சியாக உள்ளது'' - என்றார்.

(23)

# உலக ரென்னிஸ் தரவரிசையில் முதலிடத்தில் வோஸ்னியாக்கி!



உலக தரவரிசையில் கரோலின் வோஸ்னியாக்கி முதலிடத்தைப் பிடித்தபின்னர், அவரது தாய் நாடான டென்மார்க் சார்பாக மலர்க்கொத்து வழங்கப்பட்டபோது...

பீஜிங், ஒக். 09

உலக ரென்னிஸ் தரவரிசையில் முதலிடத்தைப் பிடிப்பார் எனப் பெரிதும் எதிர்பார்க்கப்பட்ட டென்மார்க் வீராங்கனையான வோஸ்னியாக்கி, அந்த இடத்தை நேற்றுமுன்தினம் அடைந்துள்ளார்.

சீன ஓபன் ரென்னிஸ் போட்டி பீஜிங்கில் நடந்துவருகிறது. இதன் 3ஆவது சுற்றில் டென்மார்க் வீராங்கனையான கரோலின் வோஸ்னியாக்கி, 6-3, 6-2 என்ற நேர் செற் கணக்கில் செக்குடியரசின் பெட்ரா கிவிடோவாவைத் தோற்கடித்து காலிறுதிக்கு முன்னேறினார்.

இதேவேளை, உலக ரென்னிஸ் தரவரிசையில் மகளிர் பிரிவில் 2ஆவது இடத்தில் இருந்த வோஸ்னியாக்கி, இந்த வெற்றியின் மூலம் முதல்முறையாக முதலிடத்திற்கு முன்னேறியுள்ளார். இதுவரை முதலிடத்திலிருந்த அமெரிக்க வீராங்கனையான செரீனா வில்லியம்ஸ், காயம் காரணமாக கடந்த ஜூலை மாதத்திற்குப் பிறகு சர்வதேச போட்டிகளில் பங்கேற்கவில்லை. இதனால் தரவரிசையில் அவர் முதலிடத்தை இழந்துள்ளார்.

புதிய முதல் நிலை வீராங்கனையாக வந்துள்ள 20 வயதான வோஸ்னியாக்கி, இதுவரை எந்தவொரு கிராண்ட்ஸ்லாம் பட்டமும் வென்றதில்லை.

எனினும், 11 சர்வதேச ஒற்றையர் பட்டங்களைக் கைப்பற்றியிருக்கிறார். டென்மார்க் நாட்டைச் சேர்ந்த ஒருவர் ரென்னிஸ் தரவரிசையில் முதலிடத்தைப் பிடித்திருப்பது இதுவே முதல் முறையாகும்.

# இன்று ஆரம்பமாகும் டெஸ்டை வெற்றிபெற்றேயாக வேண்டும்-ஹஸி



பெங்களூர், ஒக். 09

''இந்தியாவுக்கு எதிராக பெங்களூரில் இன்று ஆரம்பமாகவுள்ள கடைசி டெஸ்டில் கட்டாயம் வெற்றி பெற்றேயாக வேண்டும்.''

- இவ்வாறு ஆஸ்திரேலிய வீரர் மைக் ஹஸி கூறியுள்ளார்.

ஆஸ்திரேலிய கிரிக்கெட் அணி இந்தியாவிற்குச் சுற்றுப்பயணம் மேற்கொண்டு டெஸ்ட் தொடரில் பங்கேற்றுவருகிறது.

இந்தியா-ஆஸ்திரேலியா அணிகளுக்கிடையே மொஹாலியில் நடந்த முதலாவது டெஸ்டில், இந்திய அணி ஒரு விக்கெட்டால் வெற்றி பெற்று, தொடரில் 1-0 என்ற கணக்கில் முன்னிலை வகிக்கிறது.

இந்த நிலையில் இரு அணிகளுக்குமிடையிலான 2ஆவது மற்றும் கடைசி டெஸ்ட் போட்டி பெங்களூரில் இன்று (சனிக்கிழமை) தொடங்குகிறது. இதையொட்டி இரு அணி வீரர்களும் தீவிர பயிற்சியில் ஈடுபட்டுவருகின்றனர். பயிற்சியின்போது ஆஸ்திரேலிய வீரர் மைக் ஹஸி நிருபர்களிடம் கூறியவை வருமாறு:-

ஒவ்வொரு டெஸ்ட் போட்டியும் முக்கியமானது. நாங்கள் ஆஷஸ் டெஸ்ட் தொடருக்கு முன்பாக விளையாடும் கடைசி டெஸ்ட் போட்டி இதுவாகும். ஆனால், ஆஷஸ் தொடர் பற்றி இப்போது சிந்தித்துக்கொண்டிருக்கவில்லை. இந்தியாவுக்கு எதிரான தொடரில் நாங்கள் 0-1 என்ற கணக்கில் பின்தங்கி இருக்கிறோம். எனவே தொடரைச் சமன் செய்ய, பெங்களூர் டெஸ்ட் போட்டியில் நாங்கள் கட்டாயம் வெற்றி பெற்றாக வேண்டும். அதில் எங்களது முழுக் கவனத்தையும் செலுத்திவருகிறோம்.

டெஸ்ட் கிரிக்கெட்டை நேர்த்தியாக - சீராக நீண்ட நேரம் ஆட வேண்டும் என்பதே இப்போதைய எங்களது இலக்கு. மொஹாலியில் ஆடியதைப் போன்று அதே தீவிர உத்வேகத்துடன் இங்கும் விளையாடினால், வெற்றி பெற்று தொடரைச் சமன் செய்ய எங்களுக்கு நல்ல வாய்ப்புள்ளது.

இந்திய அணியை வெல்வது கடினம். முதலாவது டெஸ்டில், நாங்கள் வெற்றி பெற்றிருக்கலாம். அதற்கு எங்களுக்கு நல்ல வாய்ப்பு இருந்தது. ஆனால், அந்தப் பணியை வெற்றிகரமாகச் செய்து முடிக்க முடியவில்லை. அந்தப் போட்டிக்குப் பிறகு எங்களது வீரர்களின் அறை மிகவும் அமைதியாகக் காணப்பட்டது. அந்தப் போட்டியிலிருந்து நாங்கள் நிறைய நல்ல விடயங்களை எடுத்துக் கொண்டுள்ளோம்.

சொந்த மண்ணில் இந்திய அணியை வீழ்த்துவது கடினம். ஏனெனில், நெருக்கடியை எப்படிச் சமாளிக்க வேண்டும், சிக்கலான சூழலை எப்படி எதிர்கொள்ள வேண்டும் என்பது இந்திய வீரர்களுக்கு நன்கு தெரியும்.

இதே போன்ற சூழலை இதற்கு முன்பு பல தடவைகள் சந்தித்து, அதில் வெற்றியும் பெற்றிருக்கிறார்கள். இதேபோல இந்தியப் பந்துவீச்சாளர்களான ஹர்பஜன்சிங், சஹீர்கான் ஆகியோர் டெஸ்ட் போட்டிகளில் விளையாடி அனுபவம் பெற்றவர்கள். இங்குள்ள சூழலை எப்படி சாதகமாகப் பயன்படுத்திக்கொள்ள வேண்டும் என்பது அவர்களுக்குத் தெரியும்.

- இவ்வாறு மைக் ஹஸி கூறினார்.

## கண்ணீர் அஞ்சலி

யாழ்.மாவட்ட கூட்டுறவுக் கிராமிய வங்கிகளின்
சமாசத்தின் பொதுமுகாமையாளரான
செ.கெங்காதரன் அவர்களின் மாமி

**திருமதி கந்தசாமி தங்கம்மா**

அவர்கள் காலமானதையிட்டு மிகுந்த கவலையடைவதுடன் அன்னாரின் பிரிவுத்துயரிலும் பங்குகொள்வதுடன் அவரது ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.

யா.மா.கூ.கிராமிய வங்கிகளின் சமாசம்,
95, காங்கேசன்துறை வீதி, யாழ்ப்பாணம்.

தலைவர், பணிப்பாளர்கள்,
பணியாளர்கள்.



## இதய அஞ்சலி

எமது ஆலயத்தில் வசந்த மண்டபம், மணிக்கோபுரம், தேர்த்தரிப்பிடம் என்பவற்றை சிறப்பாக அமைத்துத் தந்த

**அராலியூர் குமாரசாமி நவரத்தினம்**

அவர்களின் மறைவு குறித்து எமது இதய அஞ்சலிகளைத் தெரிவித்துக்கொள்வதுடன் அன்னாரின் ஆத்மா சாந்திபெற கற்பகனைப் பிரார்த்திக்கின்றோம்.

சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

வட்டு வடக்கு,
சித்தங்கேணி.

பிரமனாச்சி தோட்டம்,
கற்பகப்பிள்ளையார் தேவஸ்தானம்.

## மரண அறிவித்தல்

## திரவியம் அன்னபூரணம்



83/14, பருத்தித்துறை வீதி, யாழ்ப்பாணத்தைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திரவியம் அன்னபூரணம் நேற்றுமுன்தினம் (07.10.2010) வியாழக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான வீரகத்தி - ராசம்மா தம்பதியரின் அன்பு மகளும் திரவியத்தின் அன்பு மனைவியும் வசந்தா, லீலா, நிர்மலா, காலஞ்சென்ற இராசேந்திரம் மற்றும் மீனா (லண்டன்), குமார், வெள்ளை, சுரேன் (லண்டன்) ஆகியோரின் அன்புத் தாயாரும் காலஞ்சென்ற யோகராசா மற்றும் செல்வம், சின்ராசா, தர்மராஜா (லண்டன்), ரதி, சின்னா, பாப்பா, வனிதா ஆகியோரின் அன்பு மாமியாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (10.10.2010) ஞாயிற்றுக்கிழமை நண்பகல் 12 மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக வில்லூன்றி இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

83/14, பருத்தித்துறை வீதி,
யாழ்ப்பாணம். (104905)

தகவல் :
குடும்பத்தினர்.

## மரண அறிவித்தல்



**Dr. தம்பிப்பிள்ளை வெற்றிவேல்**

மலேசியாவைப் பிறப்பிடமாகவும் காரைநகர், மல்லிகையை வசிப்பிடமாகவும் தற்போது வெள்ளவத்தை, அறத்துஷா வீதியை வசிப்பிடமாகவும் கொண்ட டாக்டர் தம்பிப்பிள்ளை வெற்றிவேல் 06.10.2010 புதன்கிழமை காலமானார்.

அன்னார் அமரர்களான தம்பிப்பிள்ளை - பாக்கியம் தம்பதியரின் அன்பு மகனும் பொன்னரியத்தின் பெறாமகனும் மதிவதனாவின் அன்புக் கணவரும் திலீபன், தக்ஷனி, குமணன் ஆகியோரின் அன்புத் தகப்பனாரும் அமரர்கான நடராசா, பூபாலபிள்ளை, நல்லதம்பி, பூரணம், நேசம்மா, தங்கம்மா இரத்தினசபாபதி, துரைசிங்கம் ஆகியோரது நவரத்தினம், குலசிங்கத்தினதும் அன்புச் சகோதரனும் நிலானியின் அன்பு மாமனாரும் போசானின் ஆசைப் பேரனும் ஆவார்.

அவரது பூதவுடல் கல்கிசை மஹிந்த மலர்ச்சாலையில் 09.10.2010 சனிக்கிழமை முற்பகல் 8 மணி முதல் பிற்பகல் 4 மணிவரை அஞ்சலிக்காக வைக்கப்பட்டு மறுநாள் ஞாயிற்றுக்கிழமை காலை 8 மணிக்கு ஈமக்கிரியைகள் நடைபெற்று 10 மணிக்கு தகனஞ்செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார்,உறவினர்கள் நண்பர்கள், அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்: மனைவி, பிள்ளைகள்,0112360503

## நல்லூரர் இந்து விடுதியில் குடிதண்ணீர் விநியோக கட்டண அறவீடு

யாழ். மாநகர சபையின் குடிதண்ணீர் விநியோகப் பகுதியும் கட்டண அறவீட்டுப் பகுதியும் நல்லூர் இந்து விடுதிக்கு மாற்றப்பட்டுள்ளதாக யாழ். மாநகர மேயர் அறிவித்துள்ளார்.

பொதுமக்களின் நன்மை கருதியே இவை ஒரே இடத்திற்கு மாற்றப்பட்டுள்ளன என்றும் பொதுமக்கள் குடிதண்ணீர் தொடர்பான தமது சகல கட்டணங்களையும் இங்கு செலுத்தி பற்றுச்சீட்டுக்களை பெற்றுக்கொள்ளலாம் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது. (ஓ-16)

## நெடுந்தீவு ப.நோ.கூட்டுறவு சங்கத்துக்கு தலைவர் தெரிவு

நெடுந்தீவு பல நோக்கு கூட்டுறவுச் சங்கத்தின் தலைவராக அ.வெ. அரியநாயகம் கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளரால் நியமிக்கப்பட்டுள்ளார். சங்கத்தின் உப தலைவராக எஸ். கோபால சிங்கம், இயக்குநர் சபை உறுப்பினராக பி.அருளப்பு ஆகியோரும் நியமிக்கப்பட்டுள்ளனர். (ஓ-7)

## மக்கள் வங்கியின் நகைகள் ஏலவிற்பனை ஒத்திவைப்பு

யாழ்ப்பாணம், ஒக் .9

யாழ்.பிரதேசத்தில் அமைந்துள்ள மக்கள் வங்கிக் கிளைகள், சேவை நிலையங்களில் 30.09.2010 இற்கு முன் அடகு வைத்து மீட்கப்படாத நகைகள் எதிர்வரும் 10 ஆம் திகதி பகிரங்க ஏலத்தில் விற்பனை செய்யப்படும் என்று முன்னர் அறிவிக்கப்பட்டிருந்தது. இந்த ஏலவிற்பனை தவிர்க்க முடியாத காரணங்களினால் பிற்போடப்பட்டுள்ளது என்று மக்கள் வங்கியின் பிராந்திய முகாமையாளர் அறிவித்துள்ளார்.

## கூடைப்பந்தாட்டம் நிரல் தயாரிக்கும் நிகழ்வு

'உதயன்' நிறுவனத்தின் வெள்ளிவிழாவை முன்னிட்டு யாழ். மாவட்டத்தில் பதிவு செய்யப்பட்ட கழகங்களுக்கு இடையே கூடைப்பந்தாட்டச் சுற்றுப் போட்டி நடத்தப்படவுள்ளது.

இந்தச் சுற்றுப்போட்டிக்கான நிரல் தயாரிக்கும் நிகழ்வு நாளை ஞாயிறு காலை 9 மணியளவில் 'உதயன்' பத்திரிகை நிறுவனத்தின் கேட்போர் கூடத்தில் இடம்பெறவுள்ளது.

போட்டியில் பங்கு கொள்வதற்காக விண்ணப்பித்த கழகங்கள் தங்களது இரு பிரதிநிதிகளை அனுப்பி வைக்குமாறு போட்டி ஏற்பாட்டாளர்கள் கேட்டுக்கொண்டுள்ளனர். (ஓ-23)

## மானிப்பாய் கூட்டுறவு சங்கப் பணியாளருக்கு 3 மாத வேதனம் இல்லை

மானிப்பாய் பல நோக்குக் கூட்டுறவுச் சங்கத்தில் பணியாற்றும் பணியாளர்களுக்கு மூன்று மாதங்கள் முடிவடைந்தும் இன்று வரை வேதனம் வழங்கப்படவில்லை எனக் கூறப்படுகிறது.

இது குறித்து சங்க நிர்வாகமும் சம்பந்தப்பட்ட அதிகாரிகளும் மௌனம் சாதிப்பது பணியாளர் மத்தியில் விசனத்தை ஏற்படுத்தி உள்ளது.

போர்க்காலச் சூழ்நிலையால் நஷ்டத்திற்கு உள்ளான மேற்படி சங்கத்தின் வளர்ச்சிக்கு தற்போது ஏற்பட்டுள்ள வியாபாரமின்மையும் தடையாக உள்ளது. கடந்த ஜூலை மாதத்திலிருந்து செப்ரெம்பர் மாதம் வரையான மூன்று மாதங்களுக்குரிய வேதனம் வழங்கப்படாமையினால் பணியாளர்கள்கஷ்டங்களை அனுபவித்து வருகின்றாள்கள்.சம்பந்தப்பட்ட அதிகாரிகள், இவ் விடயம் பற்றி பரிசீலித்து வேதனத்தை வழங்க நடவடிக்கை எடுக்கும்படி பணியாளர்கள் தெரிவித்துள்ளார்கள்.(த-115)


## காணி விற்பனைக்குண்டு

கோப்பாய், பூதர்மடத்தடியில் பருத்தித்துறை வீதியில் ஆறு பரப்புக் காணி உடன் விற்பனைக்குண்டு.

தொ.பே.: 0779598941, 0213207598


## தவறிவிட்டது

நல்லூர், 2 ஆம் குறுக்குத் தெருவில் இருந்து மாம்பழம் சந்தியூடாக நாவற்குழி நோக்கி புதன்கிழமை (06.10.2010) வந்து கொண்டிருந்த போது பூட்டு க்காப்பு ஒன்று தவறி விட்டது. கண்டெடுத்தவர்கள் தயவுசெய்து கீழ்வரும் விலாசத்துக்கு ஒப்படைக்குமாறு தாழ்மையுடன் கேட்டுக்கொள்கின்றோம். தருந்த சன்மானம் வழங்கப்படும்

ச.பரணிதரன்,
பாடசாலை வீதி,
நாவற்குழி, கைதடி,
தொ.பே.: 0771867814

சி.கனகலிங்கம்,
லிங்கம் உணவகம்,
ஆஸ்பத்திரி அருகில்,
சாவகச்சேரி,
0779558699


## வீடு வாடகைக்குத் தேவை

ஓய்வுபெற்ற அரசாங்க ஊழியர் மூவர் கொண்ட குடும்பத்தினருக்கு சகல வசதிகளும் கொண்ட, மாநகரசபை எல்லைக்குட்பட்ட பிரதேசத்தில் வீடு வாடகைக்குத் தேவை.

தொடர்பு கொள்ள வேண்டிய
தொலைபேசி இல. 0789144906 (104408)



## போரூட் வெளிவாரிப் பட்டப்படிப்புகள் அலகும் கணனிகள் கற்கைப் பிரிவும்

தம்பசிட்டி, பருத்தித்துறை

மேற்படி நிறுவனத்தில் புதிய கல்வி ஆண்டுக்குரிய (2010-2011) கலை முதற் பிரிவு (GAQ) விரிவுரைகள் ஆரம்பிக்கப்படவுள்ளதால் பதிவுகளை சனி,ஞாயிறு நாள்களில் எமது நிறுவனத்தில் காலை 8 தொடக்கம் 12 மணி வரையில் மேற்கொள்ளவும்.

குறிப்பு:-
விரிவுரை தொடங்கும் திகதி
பின்னர் அறிவிக்கப்படும். நிர்வாகத்தினர். (சி/571684)


## மரண அறிவித்தல்கள்

## கிருஸ்ணபிள்ளை சிவராஜா

**(ஓய்வுபெற்ற அரச உத்தியோகத்தர்)**

நாரந்தனையைப் பிறப்பிடமாகவும் நல்லூர் வடக்கு, யாழ்ப்பாணத்தை வசிப்பிடமாகவும் தற்பொழுது இல.52, முதலாம் குறுக்குத் தெரு, வவுனியாவை நிரந்த வதிவிடமாகவும் கொண்ட கிருஸ்ணபிள்ளை சிவராஜா 06.10.2010 புதன்கிழமை இறைபதமடைந்தார்.

அன்னார் காலஞ்சென்ற கிருஸ்ணபிள்ளை - தங்கம்மா தம்பதியரின் அன்பு மகனும் காலஞ்சென்ற பாலசிங்கம் மற்றும் யோகம்மா தம்பதியரின் அன்பு மருமகனும் காந்திமதியின் அன்புக் கணவரும் சுபோதினி (சுபா - கனடா), மேனகா (மேனா - லண்டன்) ஆகியோரின் பாசமிகு தந்தையும் தனகாந்தன் (கனடா), அகிலன் (லண்டன்) ஆகியோரின் அன்பு மாமனாரும் தனுஸ், கிஷோன், சுரபி ஆகியோரின் அன்புப் பேரனும் காலஞ்சென்றவர்களான சதாசிவம், நடராஜா, துரைராஜா, பாலசுந்தரம், பொன்னம்பலம், மற்றும் தவமணிதேவி ஆகியோரின் அன்புச் சகோதரனும் பாலசுப்பிரமணியம் (ஜேர்மனி), பாலச்சந்திரன் (அமெரிக்கா), வசந்தமதி (லண்டன்) மற்றும் காலஞ்சென்றவர்களான மாணிக்கவாசகர் (வவுனியா), பாக்கியராஜா இந்துமதி, சாந்தமதி, ரதிமதி ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (10.10.2010) ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10 மணிக்கு அவரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் இறம்பைக்குளம் இந்துமயானத்தில் தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

T.P : 0242221168 (சி/571691)

தகவல் :
குடும்பத்தினர்.

## திருமதி கந்தசாமி தங்கம்மா



பருத்தித்துறை, 3 ஆம் குறுக்குத் தெருவை வசிப்பிடமாகக் கொண்ட கந்தசாமி தங்கம்மா 2010.10.05 செவ்வாய்க் கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற கந்தசாமியின் (முன்னாள் பரிசோதகர், இ.போ.ச.) அன்பு மனைவியும், காலஞ்சென்ற சுமத்திராதேவி மற்றும் கமலாதேவி,பழனிநாதன் (கொழும்பு) பவானிதேவி ,நாகேந்திராதேவி, ஜெயபாலச்சந்திரராசா, (ஜெயா,ஜேர்மனி) ,செல்வராதாதேவி, சிறிராமசோதி (லண்டன்) ஆகியோரின் அன்புத் தாயாரும் காலஞ்சென்ற சின்னத்துரை மற்றும் தேவலிங்கம்,உருகமணி (கொழும்பு), தர்மலிங்கம், தசரதர், ஜெயந்தினி (ஜேர்மனி), கெங்காதரன் (பொது முகாமையாளர், யாழ்.மாவட்ட கூட்டுறவு கிராமிய வங்கிச் சங்கங்களின் சமாசம்), கிருபாலினி (லண்டன்) ஆகியோரின் அன்பு மாமியாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று(09.10.2010) சனிக்கிழமை காலை 9 மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக கோரியடி இந்துமயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார்,உறவினர்கள் நண்பர்கள், அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

சிவன் கோயில் வீதி,
3ஆம் குறுக்குத் தெரு,
பருத்தித்துறை. (சி/571659)

தகவல்:
பிள்ளைகள்,மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்,
பூட்டப்பிள்ளைகள்.



## பாராட்டி வாழ்த்துகின்றோம்

06.10.2010 அன்று யாழ். பல்கலைக் கழகத்தில் நடைபெற்ற 26ஆவது பட்டமளிப்பு விழாவில் முதுகலைமாணிப் பட்டம்பெற்ற எமது கல்லூரி ஆசிரியை

**திருமதி மதிவதனி முரளீகரன்**

அவர்கள் மேலும் பல பட்டங்களும் பதவிகளும்பெற்று வாழ்வில் சிறப்புற வாழ்த்துகின்றோம்.

யா/கொக்குவில் கிழக்கு நாமகள் வித்தியாலயம், ஆசிரியர் கழகம்.

(104399)

---

## மக்கள் வங்கி
## அறிவித்தல்
### அடகு நகைகள் பகிரங்க ஏல விற்பனை

யாழ். பிரதேசத்தில் அமைந்துள்ள மக்கள் வங்கிக் கிளைகள், சேவை நிலையங்களில் 30.09.2009 இற்கு முன் அடகு வைத்து மீட்கப்படாத நகைகள் எதிர்வரும் 10.10.2010 அன்று பகிரங்க ஏலத்தில் விற்பனை செய்யப்படும் என முன்னர் அறிவிக்கப்பட்டிருந்தது. மேற்படி ஏலவிற்பனை தவிர்க்க முடியாத காரணங்களினால் பிற்போடப்பட்டுள்ளது என்பதை அறியத் தருகிறோம்.

**பிராந்திய முகாமையாளர்,**
**மக்கள் வங்கி,**
**பிராந்திய தலைமை அலுவலகம், யாழ்ப்பாணம்.**

(சி/571689)

---

## அறிவித்தல்
### மானிப்பாய் கிராம உப அலுவலகம்

ஆதனப் பெயர் மாற்றம்
வட்டாரம் 11
கொத்துக்கட்டி வீதி
ஆதன இல 3414

ஆதன இல 3414 இல் அமைந்துள்ள ஆதனமானது நல்லையா ஜீவரட்ணமும் பெண் மாலினியும் என்பவர்களால் அறுதியாக விற்கப்பட்டு புஸ்பராசா கைம்பெண் வனிதா என்பவரால் 546 -19.09.2009ம் திகதி எழுதப்பட்ட உறுதி மூலம் குறித்த ஆதனமானது தமக்கு சொந்தம் என்பதைத் தெரியப்படுத்தி,எமது ஆதனப் பதிவேட்டில் தமது பெயரை மாற்றம் செய்வதற்காக பெயர் மாற்றத்துக்கு விண்ணப்பித்துள்ளனர்.இவ் வாதனத்துக்கு உரிமைகோருபவர்கள் யாராவது இருந்தால் அவ்வுரிமையை உறுதிப்படுத்தும் உறுதிகள் ஆவணங்களுடன் எழுத்து மூலமாக 14 நாள்களுக்குள் தொடர்பு கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றேன்.அவ்வாறு எவராலும் எவ்வித உரிமையும் கோரப்படாதவிடத்து புஸ்பராசா கைம்பெண் வனிதா எனும் பெயருக்கு மேற்குறித்த ஆதன பெயர் மாற்றம் செய்ய உரிய நடவடிக்கைகள் எடுக்கப்படும். என்பதை அறியத் தருகின்றேன்.

செயலாளர்
வலி தென்மேற்கு பிரதேச சபை
மானிப்பாய்.

(104406)

---

## அறிவித்தல்
### மானிப்பாய் கிராம உப அலுவலகம்

ஆதனப் பெயர் மாற்றம்
வட்டாரம் 04
முருக மூர்த்தி வீதி
ஆதன இல 20

வட்டாரம் 04 முருக மூர்த்தி வீதி ஆதன இல 20 இல் அமைந்துள்ள ஆதனமானது சிவகுரு கந்தசாமி என்பவரால் அறுதியாக விற்கப்பட்டு கந்தசாமி செல்வச்சந்திரன் என்பவரால் 17819 - 17.03.2001 ம் திகதி எழுதப்பட்ட உறுதிமூலம் குறித்த ஆதனமானது தமக்கு சொந்தம் என்பதைத் தெரியப்படுத்தி, எமது ஆதனப் பதிவேட்டில் தமது பெயரை மாற்றம் செய்வதற்காக பெயர் மாற்றத்திற்கு விண்ணப்பித்துள்ளனர். இவ்வாதனத்துக்கு உரிமைகோருபவர்கள் யாராவது இருந்தால் அவ்வுரிமையை உறு திப்படுத்தும் உறுதிகள் ஆவணங்களுடன் எழுத்து மூலமாக 14 நாள்களுக்குள் தொடர்பு கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றேன். அவ்வாறு எவராலும் எவ்வித உரிமையும் கோரப்படாதவிடத்து கந்தசாமி செல்வச்சந்திரன் எனும் பெயருக்கு மேற்குறித்த ஆதனம் பெயர்மாற்றம் செய்ய உரிய நடவடிக்கைகள் எடுக்கப்படும் என்பதை அறியத் தருகின்றேன்.

செயலாளர்
வலி.தென்மேற்கு பிரதேச சபை,
மானிப்பாய்.

(104397)

---

## அறிவித்தல்
### மானிப்பாய் கிராம உப அலுவலகம்

ஆதனப் பெயர் மாற்றம்
வட்டாரம் 11
கொத்துக்கட்டி வீதி
ஆதன இல 21/151

வட்டாரம் 11, கொத்துக்கட்டி வீதி, ஆதன இல.21/151 இல் அமைந்துள்ள ஆதனமானது கதிர்காமத்தம்பி திருச்செல் வமும் பெண் கேமலாவும் என்பவர்களால் அறுதியாக விற்கப்பட்டு அன்னலிங்கம் சொர்ணலிங்கமும் பெண் பவளராணியும் என்பவர்களால் 11473 - 12.12.2009 திகதி எழுதப்பட்ட உறுதி மூலம் குறித்த ஆதனமானது தமக்கு சொந்தம் என்பதைத் தெரியப்படுத்தி, எமது ஆதனப் பதிவேட்டில் தமது பெயரை மாற்றம் செய்வதற்காக பெயர் மாற்றத்திற்கு விண்ணப்பித்துள்ளனர். இவ்வாதனத்துக்கு உரிமைகோருபவர்கள் யாராவது இருந்தால் அவ்வுரிமையை உறுதிப்படுத்தும் உறுதிகள் ஆவணங்களுடன் எழுத்து மூலமாக 14 நாள்களுக்குள் தொடர்புகொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றேன். அவ்வாறு எவராலும் எவ்வித உரிமையும் கோரப்படாதவிடத்து அன்னலிங்கம் சொர்ணலிங்கமும் பெண் பவளராணியும் எனும் பெயருக்கு மேற்குறித்த ஆதனம் பெயர்மாற்றம் செய்ய உரிய நடவடிக்கைகள் எடுக்கப்படும் என்பதை அறியத் தருகின்றேன்.

செயலாளர்
வலி.தென்மேற்கு பிரதேச சபை,
மானிப்பாய்.

(104400)

---

# 20 வருடங்களின் பின் முஹைதீன் பள்ளிவாசலில் நேற்று ஜும்ஆ தொழுகை

யாழப்பாணம், ஓக்.9

யாழ்.நகர் மானிப்பாய் வீதியிலுள்ள பெரிய முஹைதீன் ஜும்ஆ பள்ளிவாசலில் நேற்று வெள்ளிக்கிழமை ஜும்ஆ தொழுகையும் பிரசங்கமும் இடம்பெற்றன. இருபது வருடங்களின் பின்னர் முதன் முதலாக நேற்று வெள்ளிக்கிழமை ஜும்ஆ தொழுகை இடம்பெற்றது.

நூற்றுக்கும் மேற்பட்ட முஸ்லிம் மக்கள் இந்த தொழுகையில் கலந்து கொண்டனர். மௌலவி சதக்கத்துல்லாவினால் பிரசங்கமும் நிகழ்த்தப்பட்டது.

இந்த நிகழ்வின் போது பள்ளிவாசலுக்கு உதவி புரிந்தவர்கள் பொன்னாடை போர்த்தி கௌரவிக்கப்பட்டனர். பாஷா மொஹீதீன், எம்.சமீம், மௌலவி சதக்கத்துல்லா ஆகியோர் இவ்வாறு கௌரவிக்கப்பட்டனர்.

இந்த நிகழ்வின் இறுதியில் யாழ்.மாநகர சபை உறுப்பினர் எம்.முஸ்தபா, பள்ளிவாசலின் புனரமைப்புக்கென ஒரு லட்சம் ரூபாவை யாழ்.மாநகர சபை நிதியிலிருந்து வழங்கவுள்ளதாகப் பள்ளிவாசல் நிர்வாகத்திடம் தெரிவித்தார். (ஒ-14)

# யாழ்.இந்துக் கல்லூரியில் முன்பள்ளிகளின் கண்காட்சி

யாழ்ப்பாணம்,ஒக்.9

வடக்கு கல்வி பண்பாட்டலுவல்கள், விளையாட்டுத்துறை அமைச்சின் ஆரம்பப்பிள்ளை அபிவிருத்திப் பிரிவின் ஏற்பாட்டில் முன்பள்ளிகளின் கண்காட்சியும் கலை நிகழ்வும் நாளை ஞாயிற்றுக்கிழமையும் மறுநாளும் யாழ்.இந்துக் கல்லூரியில் இடம்பெறவுள்ளன.

முகல்நாள் காலை 9.30 மணிக்கு கண்காட்சியை யாழ்.அரச அதிபர் திருமதி. இமெல்டா சுகுமார் திறந்து வைப்பார்.

இரண்டாம் நாள் நிகழ்வு பிற்பகல் 3.00 மணிக்கு வடக்கு மாகாண சபை கல்வி அமைச்சுச் செயலாளர் இ. இளங்கோவன் தலைமையில் நடைபெறும்.

இந் நிகழ்வில் பிரதம விருந்தினராக வடக்கு மாகாண ஆளுநர் மேஜர் ஜெனரல் ஜி.ஏ.சந்திரசிறி கலந்து கொள்வார்.

கௌரவ விருந்தினர்களாக மாகாண சபையின் பிரதம செயலாளர் ஆ.சிவகாமியும் அரச அதிபர் திருமதி. இமெல்டா சுகுமாரும் பங்குபற்றுவார்.

(ஒ-ஐ)

---

## பட்டங்கள் மேலும் பல பெற பாராட்டி வாழ்த்துகின்றோம்



கற்றிடும் கல்வியில் வெற்றிகள் பல பெற்று ஏற்றமுடன் மேலும் பல பட்டங்கள் பதவிகள் பெற்றிடவே எங்கள் குலநாயகன், ஒற்றைக்கொம்பன் கும்பழாவளையானருளால் வாழி பல்லாண்டு வாழி!

**திருமதி சிவநயனி சர்வேஸ்வரா**
**B.A (Hons)**
(பிராந்திய திட்டமிடல் மற்றும் சமூக அபிவிருத்தி)

"அரச வாசம்",
அளவெட்டி வடக்கு,

வாழ்த்துவோர்:
மாமா, மாமி,
அத்தை, மச்சாள்

(104396)

---

## பாராட்டி வாழ்த்துகின்றோம்



வல்வெட்டியைச் சேர்ந்த எமது நண்பன்

**திரு.இராசேந்திரம் காசிநாதன்**

அவர்கள் யாழ்.பல்கலைக் கழகத்தில் 06.10.2010 (புதன் கிழமை) அன்று கலைமாணிப் பட்டத்தை (B.A.Hons) 2nd Lowerஇல் பெற்றமைக்காக அவரைப் பாராட்டி வாழ்த்துகின்றோம்.

அத்துடன் மேலும் பல பட்டங்களும் உயர்வுகளும் பெற்று புகழுடன் வாழ வாழ்த்துகிறோம்.

வாழ்த்துவோர்: ஒற்றுமை விளையாட்டுக் கழகம், வல்வெட்டி.

(சி/571694)

---




## உலக அஞ்சல் தினம்
### ஒக்ரோபர் - 09

உலக அஞ்சல் தினத்தை கொண்டாடும் மானிப்பாய் அஞ்சல் குடும்பத்தினரை வாழ்த்துவதில் பெருமகிழ்ச்சியடைகிறோம்.

சுந்தர்சன், மானிப்பாய்.

---

## பாராட்டி வாழ்த்துகின்றோம்





*யாழ்.பல்கலைக்கழகத்தின் 26வது பட்டமளிப்பு விழாவில் இளநிலை கலைமாணிப் பட்டம் பெற்ற எமது செல்வங்களைப் பாராட்டி வாழ்த்துகின்றோம்*

***Congratulations and wishes you a very bright career***

செல்வி பகீரா லோகராஜா *(B.A)*
*ஆவரங்கால் கிழக்கு,*
*புத்தூர்.*

திருமதி பிரியங்கா மாறன் *(B.A)*
*சர்வோதய வீதி,*
*அச்சுவேலி தெற்கு, அச்சுவேலி.*

சர்வோதய வீதி, ஆவரங்கால்,
புத்தூர். 0770770529

(104389)

வாழ்த்துவோர்:
காத்திகேயன் ஐயா குடும்பத்தினர்.
சசி, ஸ்ரீ மாமாக்கள்.

---






யாழ்ப்பாணத்துக்கு நேற்று வருகை தந்த வர்த்தக மற்றும் கைத்தொழில் அமைச்சர் ரிஷாத் பதியுதீன் யாழ்.மானிப்பாய் வீதியில் உள்ள பெரிய மொஹய்தீன் பள்ளி வாசலில் முஸ்லிம் மக்கள் மத்தியில் உரையாற்றுவதைப் படத்தில் காணலாம். (படம்: சுகந்தன்)

# குப்பைகள், வாழைக்குற்றிகளை வீதியில் போடாதீர்!
# அழைத்தால் தேடிவரும் யாழ். மாநகர சபை

## குறைந்த கட்டணத்துடன் புதிய நடைமுறை

யாழ்ப்பாணம்,ஒக்.9

வீட்டில் பெருமளவில் சேரும் குப்பை கூளங்களை அகற்றுவதற்கு அறிவித்தவுடன் உடனடியாக உங்களை நாடிவரும் யாழ். மாநகரசபை. இந்தப் புதிய திட்டம் தற்போது நடைமுறைக்கு வந்துள்ளதாக அறிவிக்கிறார் மாநகரசபையின் முதல்வர் திருமதி யோகேஸ்வரி பற்குணராஜா.

இந்தப் புதிய நடைமுறை தொடர்பாக மேயர் மேலும் தெரிவித்திருப்பதாவது :-

வீடுகளில் அதிகளவில் சேருகின்ற வாழைக்குற்றிகள், செடி கொடிகள் மற்றும் கழிவுப் பொருள்களைப் பொதுமக்கள் வீதியோரங்களில் குவிப்பதன் மூலம் போக்குவரத்துக்கு இடையூறும் சுகாதாரச் சீர்கேட்டுக்கும் வழிகோலுகின்றது.

தற்போது மழைகாலம் நெருங்குவதால் இவ்வாறான நிலைமைகள் ஏற்படுவதைத் தவிர்த்து வீடுகளில் சேரும் குப்பைகளை வீட்டுவளவிலேயே குவித்து வைத்து யாழ். மாநகரசபைக்கு நேரிலோ அல்லது தொலைபேசி மூலமாகவோ அறியத் தந்தால் அவற்றை அகற்ற நடவடிக்கை எடுக்கப்படும். இவற்றை அகற்றுவதற்கு மாநகரசபையால் குறைந்த கட்டணம் அறவிடப்படவுள்ளது.

எனவே பொதுமக்கள் 021 222 2275, 021 222 2335, 021 320 7625 ஆகிய தொலைபேசி இலக்கங்களுடன் தொடர்பு கொண்டால் குப்பை கூளங்களை அகற்ற மாநகரசபை நடவடிக்கை எடுக்கும்.

நகரைச் சுத்தமாகப் பேண சகல பொது மக்களும்.எமக்கு ஒத்துழைப்பு வழங்க வேண்டும் - என்று மேயர் வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஒ-16)

## போர்க் குற்றச்சாட்டுகள்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தெற்காசிய நாடுகளில் நிகழ்ந்தவையாகக் குற்றஞ்சாட்டப்படும் போர்க் குற்றங்கள் மற்றும் மற்றும் மனித உரிமை மீறல்கள் தொடர்பான புதிய ஆதாரங்களைச் சமர்ப்பித்து, டப்ளினில் நடந்த பொதுக்கூட்டத்தில் உரையாற்றும் போதே அவர் இவற்றைத் தெரிவித்தார்.

அயர்லாந்து நாட்டுத் தலைநகர் டப்ளினில் உள்ள ரினிட்டி கல்லூரியில் நேற்று முன்தினம் நடைபெற்ற கூட்டத்தில் கலந்துகொண்டு பேசினார் டனிஸ் ஹாலிடே. இலங்கையில் இடம்பெற்ற சட்டத்திற்குப் புறம்பான படுகொலைகள், வைத்தியசாலைகள் மீதான குண்டு வீச்சுக்கள், படுகொலையுண்டவர்களின் பிணங்கள் என்பவற்றின் வீடியோ காட்சிகளை அந்தக் கூட்டத்தில் அவர் போட்டுக் காட்டினார்.

இந்தக் கூட்டத்தை டப்ளின் பல்கலைக்கழகமும் இலங்கை அமைதிக்கான அயர்லாந்து மன்றமும் இணைந்து ஏற்பாடு செய்திருந்தன. இதில் மனித உரிமைகள் குழுவான 'புரெண்ட் லைன்' பணிப்பாளர் மேரி லோலரும் இருந்தார்.

**ஜனவரியில் வழக்கு நடைபெற்றது**

டப்ளினில் உள்ள நிரந்தர மக்கள் நீதிமன்றத்தில் கடந்த ஜனவரி மாதம் இலங்கை குறித்த வழக்கு விசாரிக்கப்பட்டபோது அதில் மேரி லோலரும் டனிஸ் ஹாலிடேயும் உறுப்பினர்களாக இருந்தனர். இந்த மக்கள் நீதிமன்றம் புலமையாளர்கள், நீதிபதிகள் மற்றும் பரப்புரையாளர்கள் பலரைக் கொண்ட ஒன்றாகும். வியட்னாம், கௌதமாலா போன்ற நாடுகளில் நடந்தவை உட்பட பல்வேறு நாடுகளில் நடந்த மனித உரிமை மீறல்கள் தொடர்பாக இந்த மக்கள் நீதிமன்றம் விசாரணைகளை நடத்தி உள்ளது.

இலங்கை தொடர்பான விவகாரத்தில், போரால் நேரடியாகப் பாதிக்கப்பட்ட 20இற்கும் அதிகமான சாட்சிகளை நேரடியாக விசாரணை செய்ததுடன் நூற்றுக்கணக்கான சாட்சிகளின் எழுத்து மூலவாக்கு மூலங்களையும் விசாரணை செய்திருந்தது. விசாரணை முடிவில் சிறிலங்கா அரசு குற்றவாளி எனவும் தீர்ப்பளித்திருந்தது.

2002 ஆம் ஆண்டு மேற்கொள்ளப்பட்ட அமைதி உடன்படிக்கை செயலிழந்து போனதற்கு அமெரிக்கா மற்றும் பிரிட்டன் ஆகிய நாடுகளும் பொறுப்பாளிகள் எனவும் மக்கள் நீதிமன்றம் தனது தீர்ப்பில் தெரிவித்திருந்தது. (அ-உ)

## தெற்கு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

சபையின் அதிகாரியான எல்.கே.ஜி. குணதிலக்க தலைமையில் வந்த குழுவினர் சிங்கள மக்களுக்கு படிவங்களை வழங்கி விவரங்களைச் சேகரித்துள்ளனர்.

சிங்கள மொழியிலான அந்தப் படிவங்களை பூரணப்படுத்தி வழங்குமாறு கோரினர்.

இதேவேளை

மேலும் 500 குடும்பங்கள் நேற்று மீளக் குடியமர்வதற்காக வருவதாகத் தகவல்கள் வெளியாகி இருந்தபோதும், 10 குடும்பங்களே வருகை தந்ததாகத் தெரிவிக்கப்பட்டது. இன்றும் மேலும் சில குடும்பங்கள் இங்கு வந்துசேரலாம் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை இதுவரை தமிழ் மக்களே தங்களுக்கு உணவுப் பொருள்களை வழங்கி வருவதாகவும் தமிழ் சட்டத்தரணி ஒருவர் அரிசி, சீனி பிஸ்கட் போன்றவற்றை வழங்கினார் என்றும் சிங்கள மக்கள் தெரிவித்தனர்.

யாழ்.மாவட்டத்தில் குடியேற வந்துள்ள சிங்கள மக்களுக்கு மாநகர சபையினால் குடிதண்ணீர், மலசலகூட வசதிகள், மின்சார வசதிகள் என்பன ஏற்படுத்திக்கொடுக்கப்பட்டுள்ளன.

(ஒ-ஐ-9-6-15)

## இலங்கையில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

உறுப்பினரான டாக்டர் இயன் அட்டாக் தலைமை வகித்து நடத்தினார்.

அவர் தனது உரையில், டப்ளினில் ஏன் நிரந்தர மக்கள் நீதிமன்றம் உருவாக்கப்பட்டது என்பது குறித்து விளக்கினார்.

அவரைத் தொடர்ந்து நிரந்தர மக்கள் நீதிமன்றத்தின் நடுவர்களில் ஒருவரான மேரி லோலர் உரை நிகழ்த்தினார்.

இவர் தனது உரையில், இலங் கையில் இடம்பெற்ற இனப்படு கொலையை விவரித்ததுடன். இந்தப் போரானது தமிழ் மக்களுக்கு எதிரான போர் எனவும் ஜனநாயகத்திற்கு எதிரான போர் எனவும் எடுத்துக் கூறினார்.

இதேவேளை, வன்னியில் இறுதிக்கட்டப் போரில் படுகொலை செய்யப்பட்ட பல்லாயிரக்கணக்கான அப்பாவிப் பொது மக்களின் அவலங்கள் வீடியோ மூலம் காட்சிப்படுத்தப்பட்டன.

அவரைத் தொடர்ந்து நிரந்தர மக்கள் நீதிமன்றத்தின் நடுவர்களில் ஒருவரான டெனிஸ் ஹாலிடே உரை நிகழ்த்தினார்.

இறுதியாக உரை நிகழ்த்திய டாக்டர் ஜூட் லால், சர்வதேசத்தில் வாழும் தமிழ் மக்களை அடக்குவதற்காகவும் அழிப்பதற்காகவும் தற்போது இலங்கை அரசானது புதிய வழியை முன்னெடுத்துள்ளது. அதாவது, முன்னாள் இராணுவ உயர் அதிகாரிகளை வெளிநாட்டு இராஜ தந்திரிகளாகவும் மற்றும் வெளிநாட்டுத் தூதுவர்களாகவும் நியமிக்கிறது எனவும் கூறினார். (ஒ)

## பிரதி மேயராக முஸ்லிம்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கலந்துகொண்ட பின்னர் ஊடகவியலாளர்களுக்குக் கருத்துத் தெரிவிக்கையிலேயே இவ்வாறு தெரிவித்தார்.

அவர் அங்கு மேலும் தெரிவித்தவை வருமாறு :-

அமைச்சர் கே.என்.டக்ளஸ் தேவானந்தாவுடன் நாம் ஏற்கனவே செய்துகொண்ட ஒப்பந்தத்தின் பிரகாரம் ஒரு வருடத்தின் பின்னர் அதாவது அடுத்த மாதம் 10ஆம் திகதி யாழ். மாநகரசபையின் பிரதி மேயர் பதவி முஸ்லிம் பிரதிநிதி ஒருவருக்கு வழங்கப்படுவதாக ஏற்றுக்கொள்ளப்பட்டது.

இந்த ஒப்பந்தத்தை நினைவுபடுத்தவே நான் இங்கு வந்தேன். இந்தப் பதவி எமக்குக் கிடைத்ததும் அதைப் பயன்படுத்தி நாம் எமது முஸ்லிம் பகுதிகளை நன்கு அபிவிருத்தி செய்ய முடியும்.

அதேவேளை முஸ்லிம்களாகிய நாம் எமக்குள் பல பிரிவுகளைக் கொண்டிராது ஒருவருக்கொருவர் விட்டுக்கொடுப்புடன் ஒற்றுமையாக வாழவேண்டும். இதன் மூலமே எமது பிரதிநிதித்துவத்தைக் காப்பாற்றிக் கொள்ள முடியும்.

அத்துடன் இந்தப்பகுதி முஸ்லிம் மக்களின் பிரச்சினைகள் தொடர்பாக சம்பந்தப்பட்டவர்களுடன் கலந்துரையாடி அவற்றுக்குத் தீர்வுகாண நடவடிக்கை எடுக்க உரிய அதிகாரிகளுக்குப் பணிக்கப்பட்டுள்ளது - என்றார்.

**கிளிநொச்சி விஜயம்**

நேற்று கிளிநொச்சிக்கு விஜயம் மேற்கொண்ட அமைச்சர் அங்கு முஸ்லிம் மக்கள் வாழும் பகுதிகளான நாச்சிக்குடா, மற்றும் 55ஆம் கட்டைக்குச் சென்று அங்குள்ள மக்களின் பிரச்சினைகள் தொடர்பாகக் கலந்துரையாடினார்.

அங்கிருந்து யாழ்ப்பாணத்துக்கு வருகைதந்த அமைச்சர், கோப்பாய் ஆசிரிய பயிற்சிக் கலாசாலையில் நடைபெற்ற இஸ்லாமிய கலைவிழாவில் பங்குபற்றினார். பின்னர் யாழ். ஒஸ்மானியாக் கல்லூரிக்குச் சென்று முஸ்லிம் மக்களுடன் கலந்துரையாடி அவர்களது பிரச்சினைகள் தொடர்பாகக் கேட்டறிந்தார்.

அங்கு முஸ்லிம் பள்ளிவாசல் காணியில் வசிக்கும் 8 குடும்பங்களுக்கு அப்பகுதியிலேயே நிரந்தரமாக வசிப்பதற்கு உரிய நடவடிக்கைகள் எடுப்பதாக உறுதியளித்தார்.

அதன் பின்னர் புதிய சோனகத் தெருப் பகுதியிலுள்ள வீதிகளை அபிவிருத்தி செய்வது, வடிகால்களைப் புனரமைப்பது மற்றும் அப்பகுதிகளுக்குரிய மின்சார வசதிகளைச் சீர்செய்வது போன்ற பணிகள் குறித்து உரிய அதிகாரிகளுக்குப் பணிப்புரை விடுத்தார். (ஒ-16)

## முன்னறிவித்தல்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

யாழ்ப்பாணத்தில் முப்பது வரு டங்களுக்கு முன்னர் வாடகைக்கு குடியிருந்ததாகவும் அன்றைய சூழல் காரணமாகத் தாங்கள் நாட்டின் தென்பகுதிக்கு இடம்பெயர்ந்து சென்றதாகவும் தெரிவித்து, பெரும் பான்மை இனத்தைச் சேர்ந்த சிங்களவர்களான சுமார் 80 குடும்பங்கள் தம்மை யாழ்ப்பாணத்தில் மீள்குடியேற்றம் செய்ய வேண்டும் என யாழ் அரசாங்க அதிபரிடம் கோரியிருப்பதாக ஊடகங்களில் தகவல்கள் வெளியாகியிருக்கின்றன.

இதனை உறுதிப்படுத்தியுள்ள யாழ். அரச அதிபர் திருமதி இமெல்டா சுகுமார், இந்தக் குடும்பங்களுக்கு யாழ்ப்பாணத்தில் சொந்தக் காணிகள் இருக்கவில்லை எனவும், இவ்வாறு இடம்பெயர்ந்ததாகத் தெரிவிக்கும் குடும்பங்களை மீள்குடியேற்றும் நடவடிக் கைகள் எதுவும் இப்போது இடம் பெறவில்லை எனவும் தெரிவித்துள்ளார்.

இறுதியாக நடைபெற்ற யுத்தத்தின் போது இடம்பெயர்ந்த குடும்பங்கள் மற்றும் அதியுயர் பாதுகாப்பு வலயத்தில் இருந்து வெளியேற்றப்பட்ட குடும்பங்கள் ஆகியவற்றை மீள்குடியமர்த்தும் நடவடிக்கைகளே இப்போது மேற்கொள்ளப்பட்டு வருவதாக யாழ் அரச அதிபர் சுட்டிக்காட்டியுள்ளார்.

முன்னறிவித்தல் எதுவுமின்றி வந்து, தாங்கள் யாழ்ப்பாணத்திலேயே இருக்க வேண்டும், திரும்பப் போகப்போவதில்லை எனத் தெரிவித்திருக்கும் இந்தக் குடும்பங்களின் நடவடிக்கை யாழ்ப்பா ணத்தின் நிர்வாகத்திற்கு ஒரு சங்கடமான நிலைமையை ஏற்படுத்தியிருப்பதாகவும் யாழ் அரச அதிபர் குறிப்பிட்டுள்ளார்.

இந்தக் குடும்பங்கள் போரினால் சேதமடைந்துள்ள யாழ்.ரயில் நிலையக் கட்டடத்திலும் வேறு இடங்களிலும் இப்போது தங்கியிருப்பதாகத் தகவல்கள் தெரிவிக்கின்றன என்றும் பி.பி.ஸி. தெரிவித்தது. (ஒ-ஐ)

## யாழ்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இஸ்லாமியக் கலை விழாவில் கலந்துகொண்டு உரையாற்றுகையில் அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் பேசுகையில் - யாழ்ப்பாணத்திலிருந்து இடம்பெயர்ந்த முஸ்லிம் மக்களை மீளக்குடியமர்த்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. அவர்களின் தொழில் வாய்ப்பு மற்றும் உதவிகளை எனது அமைச்சின் ஊடாகசெய்துகொடுப்பேன் - என்றார்.(ஐ)

## கனடா..

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இதுதொடர்பில் கனேடியப் பொலிஸாரும், அந்நாட்டு இராணுவத்தினரும் இணைந்து முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றனரெனவும் கனேடிய ஊடகங்கள் தெரிவித்திருந்தன.

இந்த நிலையில் கொலம்பியாக் கடற்பரப்பில் நேற்று இந்தக் கப்பல் தென்பட்டது எனத் தகவல்கள் வெளியாகியுள்ளன.

அண்மையில் 492 ஈழத் தமிழர்களை ஏற்றிக்கொண்டு 'சன் சீ' என்ற கப்பல் கனடா நாட்டைச் சென்றடைந்தது தெரிந்ததே.

(சி)

Quick Learning Course
Spoken English with Grammar
Duration 1 Month Rs.2000.00
உரையாடட் பயிற்சிகள். பேச்சுப் பயிற்சிகள். உச்சரிப்புப் பயிற்சிகள் யாவும் புதிய தொழில் நுட்பத்திற்கமைய Audio & Video visuals மூலமாக நடாத்தப்படுகிறது
A/L பரீட்சை எழுதிய மாணவர்கள் மற்றும் ஆங்கிலம் கற்க விரும்பும் அனைவருக்கும்
திங்கள் முதல் வெள்ளிவரை வகுப்புகள் நடைபெறும் & Full time special
25-10-2010
Batch-3 09.00am-10.30am & 11.00am - 12.30pm
Batch-4 02.00pm-03.30pm & 04.00pm-05.30pm
BCHS
BRITISH COLLEGE OF HIGHER STUDIES
No.15 2/1, Sirambiyadi Lane, Off Stanley Road, Jaffna. ஆரியகுளத்துச் சந்திக்கருகில் கொசி Hotel மேல்
Tel :021 2224550 HotLines: 0777222422/ 0777585913/0714299935

THE SCIENCE CORNER
Clock Tower Lane, Jaffna.
CHEMISTRY - 2011
ORGANIC
(ENGLISH MEDIUM)
COMMENCE ON 11/10/10 (MON)
MON, TUE : (3-4) P.m
PHYSICAL
(தமிழ் மொழி மூலம்)
WED, FRI : (5.15-6.15) P.m
BENZENE
ஆரம்பம் : 09/10/10 (SAT)
SAT, SUN : (5.15-6.15) P.m
By - அன்பு

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்ரெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 09.10.2010 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.